விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினெட்டு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஐப்பசி 05 வெள்ளிக்கிழமை (22.10.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 307

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## முழுமையான அதிகாரம் கிடைத்தால்

## புலிகளை மக்கள் ஏற்கப் போவதில்லை

### சுரேஷ் எம்.பி. செவ்வி



(கொழும்பு)

தமிழ் மக்கள் முழுமையான உரிமைகள் கொடுக்கப்பட்டு அதிகாரங்கள் வழங்கப்பட்டு வடக்கு–கிழக்கு பகுதிகளில் சரியான அரசியல் நிர்வாக முறை உருவாக்கப்படுமாக இருந்தால் விடுதலைப் புலிகளை மக்களோ யாரோ அங்கீகரிக்கப் போவதும் இல்லை. வரவேற்கப்போவதும் இல்லை. யுத்தத்தை ஏற்றுக் கொள்ளப் போவதும் இல்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். (18ஆம் பக்கம் பார்க்க)

### நிரந்தர அரசியல் தீர்வு தேவை; பிரித்தானிய அரசு வலியுறுத்தல்

(லண்டன்)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வுகாணப்படவேண்டும் என பிரித்தானிய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்தி இருக்கின்றது.

பிரித்தானிய வெளியுறவு அமைச்சர் வில்லியம் ஹேக்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று முன்தினம் (புதன்கிழமை) சந்தித்தபோது நேரடியாக இந்த வலியுறுத்தல் விடுக்கப்பட்டது.

இலங்கையில் ஏற்படுத்தப்படும் நிரந்தர அரசியல் தீர்வு அனைத்து மக்களின் தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் அமைய வேண்டும் எனவும் ஹேக் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ள (18ஆம் பக்கம் பார்க்க)

## போர்க்குற்ற ஆதாரங்களை இ-மெயில் மூலம் அனுப்பலாம்

### ஐ.நா. நிபுணர்கள் குழு அறிவிப்பு

(நியூயோர்க்)

படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின்போது நிகழ்ந்த மனித உரிமை மீறல் மற்றும் சர்வதேச போர் விதிகள் மீறல் சம்பவங்கள் தொடர்பான ஆதாரங்களை முறைப்பாடுகளாக இ-மெயில் மூலமாக அனுப்பி வைக்க முடியும் என பான் கீ மூன் நியமித்துள்ள ஐ.நா. நிபுணர் குழு அறிவித்துள்ளது.

இலங்கை தொடர்பான விடயங்களுக்கு ஆலோசனை வழங்கவென ஐக்கிய நாடுகள் செயலாளர் (18ஆம் பக்கம் பார்க்க)

### வெளிநாட்டு அழைப்புக்களை ஒட்டுக்கேட்கத் திட்டம்

(கொழும்பு)

இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்கு மேற்கொள்ளப்பட்டு வரும் தொலைபேசி அழைப்புகளை ஒட்டுக் கேட்பதற்கு பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

குறிப்பாக தமிழ் மக்களின் வெளிநாட்டு அழைப்புகளை ஒட்டுக் கேட்பதற்கென நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவினால் (18ஆம் பக்கம் பார்க்க)

### அரசியல்வாதிகளுக்கு அதிகரிக்கிறது சம்பளம்

(கொழும்பு)

ஜனாதிபதி, அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சம்பளம் இன்னும் சில நாட்களில் அதிகரிக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கைச் நீதிச்சேவையைச் சேர்ந்த பிரதம நீதியரசர், உச்ச நீதிமன்ற நீதியரசர்கள், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் ஆகியோரின் சம்பளத்தை அதிகரிப்பதற்கான பிரேரணை நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் பிரதம நீதியரசருக்கு 70 ஆயிரம் ரூபாய் ஆகவும் உச்ச நீதிமன்ற நீதியரசர்களுக்கு (18ஆம் பக்கம் பார்க்க)

### வட மாகாண உள்ளூராட்சி அமைச்சின் அலுவலகம் கைதடிக்கு விரைவில் மாற்றம்

(திருகோணமலை)

வடக்கு மாகாண உள்ளூராட்சி, புனர்வாழ்வு, கூட்டுறவு, கிராமிய அபிவிருத்தி, கைத்தொழில், சமூக சேவைகள், சிறுவர் நன்னடத்தை அமைச்சு அலுவலகம் விரைவில் கைதடிக்கு மாற்றப்படவுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வடக்கு மாகாண உள்ளூராட்சி, புனர்வாழ்வு, கிராமிய அபிவிருத்தி, கைத்தொழில், சமூக சேவைகள் சிறுவர் நன்னடத்தை அமைச்சு அலுவலகம் தற்போது திருகோணமலை வரோதயா நகரில் வடக்கு மாகாண சபை கட்டிடத் தொகுதியில் இயங்கி வருகிறது.

இந்நிலையில் மேற்படி அமைச்சு அலுவலகத்திற்கான கட்டிடத்தை கைதடியில் அமைப்பதற்கு (18ஆம் பக்கம் பார்க்க)

### கண்ணி வெடிகளுடன் 2ஆயிரம் ச.கி. மீற்றர் நிலம்

(கொழும்பு)

கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ள இடங்களில் சுமார் ஆயிரத்து 800 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் புதைக்கப்பட்டிருந்த கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுள்ளதாகவும் இன்னமும் 2 ஆயிரம் சதுர் கிலோமீற்றர் பரப்பளவில் புதைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகளை அகற்ற வேண்டியுள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவெல்ல தெரிவித்தார்.

வட பகுதியில் முன்னர் மோதல் இடம்பெற்ற பகுதிகளிலும் (18ஆம் பக்கம் பார்க்க)

## நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை ஐ.நாவிடம் சமர்ப்பிக்க அரசாங்கம் திட்டம்


(கொழும்பு)

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ள நல்லிணக்க ஆணைக்குழுவினால் முன்வைக்கப்படும் யுத்த கால நடவடிக்கை தொடர்பான அறிக்கையின் பிரதியொன்று ஐக்கிய நாடுகள் சபையிடம் கையளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

நாட்டில் யுத்தக்குற்றச் செயல்கள் இடம்பெற்றுள்ளதாகக் கூறி நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் சேறுபூச நினைக்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் முறியடிக்கும்.

அத்துடன் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்ற உண்மை நிலையினை அறிந்து அதனை சர்வதேசத்துக்கு எடுத்துக்கூறும் பொருட்டே இந்த ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (18ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



LOLC நிறுவன புதியகட்டிடத் திற்கான அடிக்கல் நாட்டுவிழாவில் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் அடிக்கல்லினை நாட்டி, நினைவுக்கல்லினை திறந்துவைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்

# காணிப்பதிவுச் செயற்பாடுகள் கணனி மயப்படுத்தப்படுகின்றன

யாழ்.காணி மாவட்டப் பதிவகத்தினால், விவாக பிறப்பு இறப்பு சான்றிதழ்கள் கணனிமயப்படுத்தும்நடவடிக்கை பதிவாளர் நாயகம்திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

வவுனியா, முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்ட சான்றிதழ்கள் தேசிய மொழிகள் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சின் செயலர் திருமதி எம்.விக்கிரமசிங்க ஊடாக யு.என்.டி.பி அனுசரணையில் மேலதிக பதிவாளர் நாயகம் ந.சதாசிவஜயர் முயற்சியால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு காணிப் பதிவகத்தில் சான்றிதழ்கள் கணனி மூலம் வ்ழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்.காணிப்பதிவகத்தில் மேலதிகப் பதிவாளர் நாயகம் ந.சதாசிவ ஐயர் தகவல் தொடர்புக்கு பொறுப்பான உதவிப் பதிவாளர் நாயகம் வசந்தசந்திலிகம ஆகியோரால் பார் வையிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் சார்பில் இவ் வேலைகள் யாவற்றையும் பொறுப்பாக தகவல் தொழில் நுட்ப சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஏ.விமலேந்திர ராஜா நெறிப்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

இதன் மூலம் எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் கணனிமயப்படுத்தப்பட்ட சான்றி தழ்கள் பிரதேச செயலகங்கள் மூலம் வழங்கக் கூடியதாக இருக்கும் என எதிர் பார்க்கப் படுவதாக காணிப் பதிவாளர் அறிவித்துள்ளார். (ச-2)

## வடக்கு மாகாண சபையின்

# நிபுணத்துவ சட்ட ஆலோசகர் பதவிக்கு ஓய்வுபெற்ற நீதிபதி விக்னராஜா நியமனம்



Judge R.T. Vignaraja

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் நிபுணத்துவ சட்ட ஆலோசகராக ஓய்வு பெற்ற யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா நியமனம் பெற்றுள்ளார்.

இந்நியமனம் எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும்என வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல்ஜீ.எ.சந்திரசிறி கடிதம் மூலம் நேற்று அறிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் விரைவில் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ள நிலையில் ஆளுநரினால் இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக வடக்கு மாகாணசபை மற்றும் அதற்கு உட்பட்ட உள்ளூராட்சி சபைகள் எதிர் கொள்ளும் சட்டச் சிக்கல்களுக்குரிய ஆலோசனை, மாகாணசபையின் புதிய விதிகளுக்கான ஆலோசனையை வழங்கும் பணியை நிபுணத்துவ சட்ட ஆலோசகர் ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி இ.த. விக்னராஜா வழங்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வவுனியா நகரசபையின் தலைவர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் இடையே ஆன முரண்பாடு தொடர்பில் ஆராய்வதற்கு விசாரணைத் துணையாளராக நியமிக்கப்பட்ட ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி இ.த. விக்னராஜா அறிக்கையை அடுத்த வாரம் கையளிக்கவுள்ளார். (ச-5)

# அடுத்த ஆண்டுக்கான கடன் தொகை 99ஆயிரம் கோடி ரூபாய் என மதிப்பீடு

(கொழும்பு)

2011 ஆம் ஆண்டு வரவு- செலவுத்திட்ட துண்டு விழும் தொகையை ஈடுகட்ட அரசாங்கம் 99 ஆயிரத்து 700 கோடியை உள்நாடு, வெளிநாடுகளிடமிருந்து கடனாகப் பெறுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் ஆண்டிற்கான அரச செலவீனமாக ஒரு இல்ட்சத்து 8 ஆயிரத்து 96 கோடிகள் என மதிப்பிடப்பட்டுள்ளதுடன் அதில் ஆகக் கூடுதலான தொகையான 21 ஆயிரத்து 522 கோடியும் அதற்கடுத்ததாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு 7 ஆயிரத்து 525 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக அரசாங்க செலவீனங்களுக்கான உள்நாட்டு வருமானம் போதாத நிலையிலேயே அரசாங்கம் பாரியளவான தொகையொன்றை கடனாகப் பெற முயற்சிக்கின்றது.

யுத்தத்துக்காக உலக நாடுகளிடம் வாங்கிய கடனையே இன்னும் அடைக்காத நிலையில் கடனுக்கு மேல் கடன் படுவதானது வளர்ந்து வரும் நாடுகளில் ஒன்றான இலங்கையின் பொருளாதார சுபீட்சத்துக்குப் பெரும் பாதிப்பாக அமையலாம் என்று பொருளாதார வல்லுனர்கள் எச்சரிக்கின்றனர். (ச-5)

# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி வடக்கு பேச்சி அம்மன் கோயில் அலங்கார உற்சவமும் கா லை 8.30மணிக்கு சங்காபிசேக நிகழ்வும்.

அதனைத் தொடர்ந்து மாலை 4.00மணிக்கு விசே பூசை வழிபாடும் அம்பாள் வெளிவீதி உலா வருகையும் இடம்பெறும். (ச)


## மணமகள் தேவை

அமெரிக்காவில் வசிக்கும் 35 வயதுடைய R.C. அழகான ஆண் அதே நாட்டில் அல்லது கனடாவில் வசிக்கும் ஒரு பெண்ணை திருமணம் செய்ய விரும்பியுள்ளார். விரும்புவோர் பின்வரும் விலாசத்தில் தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

0779116346

மேரி திருமண சேவை

46,புது வீதி, கொய்யாத்தோட்டம்

(2716)


# வன்னியில் மீட்ட நகைகளை மக்களிடம் ஒப்படைக்கக் கோரிக்கை

(கொழும்பு)

இராணுவத்தினால் போரின் இறுதிக்கட்டத்தில் கைப்பற்றப்பட்ட நகைகள் அரசினால் மீண்டும் நகைகளின் சொந்தக்காரர்களிடம் ஒப்படைக்கப்படவேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் கூறினார்.

இலங்கை இராணுவத்தினர் போரின் இறுதி மாதங்களில் வடக்கே பல்வேறு இடங்களில் சுமார் 49 கோடி இலங்கை ரூபாய் மதிப்புள்ள தங்க நகைகளைச் சேகரித்திருப்பதாகவும் இந்த நகைகள் சட்டரீதியாக இலங்கை மத்திய வங்கியிடம் கையளிக்கப்பட்டிருப்பதாகவும் நாடாளுமன்றில் அரசாங்கத் தலைமைக் கொறடா தினேஷ் குணவர்த்தன கூறினார்.

இது குறித்து தமிழோசைக்கு பேட்டியளித்த மனோகணேசன் இந்த நகைகள் தமிழீழ வங்கி என்ற பெயரில் விடுதலைப்புலிகள் நடத்திய வங்கியிடம் தமிழ் மக்கள் தங்கள் அவசர தேவைகளுக்காக ஈடாக வைத்தவைகளாக இருக்க வேண்டும் என்றார்.

இந்த நகைகள் விடுதலைப் புலிகளின் வங்கியிலிருந்து பெறப்பட்டவையாக இருந்தாலும் அவை அப்பாவித் தமிழ் மக்களின் உடமைகள். அவைகளின் சொந்தக்காரர்கள் யார் என்பதைக் கண்டறிந்து அவைகளை உரியவர்களிடம் சேர்க்கவேண்டியது அரசின் கடமை என்றார் மனோ கணேசன்.

இந்த நகைகள் இவ்வாறு இராணுவத்தால் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றன என்று அவ்வப்போது சொல்லப்பட்டுவந்தாலும் இது குறித்து போர் முடிந்து ஒன்றரை ஆண்டு ஆன பிறகு இப்போது தான் அரசாங்கம் வாய் திறந்திருக்கிறது என்றார் மனோ கணேசன். (ச-5)

# கலை முதற் தேர்வு முடிவுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப்பட்டப்படிப்புக்கள் அலகின் கலை முதற் தேர்வு முடிவுகள் நேற்று வெளியாகின.

இவற்றுக்கான பெறுபேற்று அறிக்கைகளை எதிர்வரும் திங்கட்கிழமை முதல் பார்வையிட முடியும் என வெளிவாரிப்பட்டப்படிப்புக்கள் அலகின் இணைப்பாளர் க.சிவராசா அறிவித்துள்ளார்.

இதேவேளை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இணை மருத்துவ விஞ்ஞான கற்கை நெறிக்கான பரீட்சை பெறுபேறுகளும் நேற்று வெளியாகியுள்ளன. (ச)


## தனியார் நிறுவனங்களை பதிவு செய்தல்

பெறுமதி மிக்க உங்கள் வியாபார நிறுவனத்துக்கான கௌரவத்தையும் நம்பிக்கையையும் பெற்றுக் கொள்வதற்காக உங்கள் தனியார் நிறுவனங்களை இலகுவான முறையில் பதிவு செய்து கொள்ள நாடுங்கள்,

VTL MANAGMENT
Daanston House
Colombo -03
T.P. 072 9994777

(சி/1384)


# வட, கிழக்கு மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப யுனிடோ வேலைத்திட்டம்

வடக்கு கிழக்கு மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி வறுமை நிலையினை போக்குவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் கைத்தொழில் அபிவிருத்தி அமைப்பின் (யுனிடோ) 7.7 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியின் கீழ் புதிய வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன் மூலம் தனியார் துறைகள் அபிவிருத்தியூடாக வடக்குகிழக்கு மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் உற்பத்தி திறனை அதிகரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அத்துடன் வடக்கு கிழக்கில் உள்ள விவசாயத்துறையினை அபிவிருத்தி செய்தல், கிராமிய வருமான அதிகரிப்பு, மீனவத்துறை அபிவிருத்தி உள்ளிட்ட பல்வேறு வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதேவேளை கைத்தொழில் துறைகளுக்கு இடையிலான போட்டியினை அதிகரித்தல், சுற்றுச்சூழலுக்கு ஏற்ற தொழில்நுட்பங்ளை அறிமுகப்படுத்தலின் ஊடாகவறுமைநிலைமையினை குறைத்தல் என்பன மேற்படி வேலைத் திட்டங்களின் பங்கீடுகளாக மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்காக 7.7 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியினை பெற்றுக் கொள்வதற்காக நிதியமைச்சினூடாக ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப் பட்டுள்ளன. (ச-5)


## செல்லா சினிமா




பாடல்கள் : வைரமுத்து. நந்தலாலா. சினேகன். விவேகா.

காட்சி நேரம்:- 10.30, 2.30, 6.00, 9.00

# இன்று ஒரு தகவல்

## தனக்காக வாழ்க!

“இதோ இருக்கிறாரே, இவர் மற்றவர்களுக்காக தன்னையே தியாகம் செய்யத் தயாராக இருக்கிறார்” என்று யாராவது சொன்னால் அது ஏமாற்று வேலை என்கிறார் ஒரு பெரியவர்.

உங்களை நீங்கள் முதலில் கவனியுங்கள். தனக்காக சேவை செய்து கொள்வதுதான் உலக இயல்பு.

இன்னொருவருக்கு சேவை செய்வதே நோக்கம் என்று யாரும் இயங்க முடியாதாம்.

இதுவரைக்கும் எந்த மனிதனுமே தனக்கென்று வாழாமல் இருந்தது கிடையாதாம்.

தனக்காக வாழ்வதில் 2 வகை உண்டாம். ஒருவகை எப்படியென்றால் தன்னுடைய நலனுக்காக மற்றவர்களின் நலனை அழிப்பது தவிர்க்க முடியாமல் போய்விடுவது.

இன்னொருவகை– தனக்காக வாழ்வதில் மற்றவர்களுக்கும் நல்ல பயன்கள் ஏற்படலாம்.

இந்த இரண்டாவது வகையில் தன்னுடைய நலன்களை பாதுகாத்து வளர்ச்சியடைவதுதான் நல்லது.

தனக்காக வாழ்வது என்பது மனித இயற்கை. இப்படிச் சொல்வது தவறாகத் தெரியலாம். பண்பாடற்றதாகவும் தோன்றலாம். ஆனால் உண்மை அதுதான்.

இதற்கு ஒரு உதாரணமும் சொல்கிறார் அவர். ஓடும் வெள்ளத்தில் ஒருத்தன் விழுந்து விட்டான். அவனைக் காப்பாற்றுவதற்காக ஓடும் அடுத்தவன் கூட, அடிப்படையில் பார்த்தால் தனக்கே ஒரு சேவையைத்தான் செய்திருக்கிறான். எப்படித் தெரியுமா?

அவன் தண்ணீரில் விழுந்தவுடன் இவனுடைய மனதில் ஒரு துன்பம்– ஒரு கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அந்தத் துன்பத்தை போக்குவதற்காகவே இவனும் வெள்ளத்தில் குதிக்கிறான். அடுத்தவனைக் காப்பாற்றுகிறான்.

சமூக அமைப்பே, நாம் யாரையும் யாருக்காகவும் தியாகம் செய்யச் சொல்லத் தேவையில்லாத தன்மையில் இருக்க வேண்டுமாம்.

தன்னுடைய வாழ்க்கையை நடத்துவதற்குத்தான் ஒவ்வொரு மனிதனும் பிறக்கிறான். அப்படிப் பிறக்கும் மனிதன் தன்னுடைய நன்மைக்கான செயற்பாடுகளில் ஈடுபடுவது நல்லதுதான். அது ஒன்றும் பாவமில்லை. அப்படி இருக்கும் போது...

தனக்காக வாழும்படி யாரும் போதனை செய்வதில்லை. ‘‘நீ இந்த சமுதாயத்துக்காக வாழ வேண்டும். மனித குலத்துக்காக வாழ வேண்டும்’’ என்று சொல்லி போதனை செய்வதால் போலித்தன்மைதான் ஏற்படுகிறது என்கிறார் அவர்.

தனக்காக வாழ்வதே கொஞ்சம் ஆழமான நிலையில் மற்றவர்களுக்கும் சேவை செய்வதாக ஆகலாம். இன்னொரு விடயம்.

மற்றவர்களைப் பார்த்து விட்டு அவரை மாதிரி ஆக வேண்டும் என்று முயற்சி செய்யக் கூடாது. மற்றவர்கள் மாதிரி ஆகும் முயற்சியில் உங்களை நீங்கள் இழந்து விடுவீர்கள். இதனால் நீங்கள் தானாக அடையக் கூடிய வளர்ச்சியை விட்டுவிடுவீர்கள்.

நீங்கள் எந்த அளவுக்கு முன்னேற முடியுமோ அதை முழுமையாக அடைவதுதான் உங்களுடைய இலட்சியமாக இருக்க வேண்டும்.

இதெல்லாம் ஒரு பெரியவருடைய சிந்தனைகள். இதைக் கேட்டவுடன் எல்லோரும் சுய நலவாதியாக மாறுங்கள் என்று சொல்வதாக நினைத்துக் கொள்ளக் கூடாது. சுய நலம் என்ற வார்த்தைக்கு நாம் இப்பொழுது வைத்திருக்கும் அர்த்தம் வேறு.

ஒரு பெரிய பங்களாவுக்கு முன்னால் ஒருத்தன் ஒரு சங்கீதக் குழுவோடு நின்று கொண்டு பாடிக் கொண்டிருந்தான்.

HappyBirth Day to You என்று பாடிக் கொண்டிருந்தான். வீதியால் சென்று கொண்டிருந்த ஒருத்தர், ‘‘யாருக்காக இங்கே நின்றுகொண்டு பாடிக் கொண்டிருக்கிறீர்கள்?’’ என்று கேட்டார்.

“இந்த பங்களாவின் சொந்தக்காரருக்கு இன்றைக்குப் பிறந்தநாள். அதற்காகத்தான் இப்படிச் செய்கிறோம்’’ என்றான் அந்த ஆள்.

‘‘என்ன இது? அந்தப் பெரியவருக்கு கொஞ்சம் கூட மரியாதையே தெரியவில்லை. நீங்கள் இவ்வளவு ஆர்வமாக இங்கே வந்து வாழ்த்துப் பாடுகிறீர்கள். அந்த ஆள் ஜன்னலையாவது திறந்து இதைப் பார்த்து இரசிக்க வேண்டாமா?’’ என்று கேட்டான்.

‘‘இதற்கு எதற்கு அந்த ஆள்? விபரம் தெரியாமல் பேசாதே! நானே இரண்டு இடத்தில் எப்படி இருக்க முடியும்? நான்தானே அந்த பெரிய மனிதன் என்றான். தனக்காக வாழ்வதில் இது ஒரு தனிரகம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# அனர்த்த இடர்குறைப்பு செயற்றிட்டம்

இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ்.மாவட்ட கிளையினால் டெனிஸ் செஞ்சிலுவைச்சங்கத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்டத்திலுள்ள 10 பாடசாலைகளில் பாடசாலை மட்டத்திலான அனர்த்த இடர் குறைப்பு செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இச்செயற்றிட்டத்தில் 5 பாடசாலை ஆசிரியர்களுக்கான அனர்த்த இடர் குறைப்பு பயிற்சி இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை இல.33, ஆசீர்வாதம் வீதியில் உள்ள (Hotel Green grass) இல் நடைபெறவுள்ளது.

அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம், சங்கானை சிவப்பிரகாசம் வித்தியாலயம், மாதகல் சென்ஜோசப் மகாவித்தியாலயம், சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம், கட்டைவேலியாக்கரு விநாயகர் வித்தியாலயம், ஆகிய பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-134)

# கௌரவிப்பு நிகழ்வு

சக்கோட்டை பங்கிற்குட்பட்ட பாடசாலை ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு வல்வை மகளிர் மகாவித்தியாலயத்தில் சக்கோட்டை பங்குத் தந்தை அ.அகஸ்ரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் புலோலி, பொலிகண்டி, வல் வெட்டித்துறை, உடுப்பிட்டி பகுதிகளை சேர்ந்த 13 பாடசாலைகளின் ஆசிரியர்கள் அழைக்கப்பட்டு அவர்களது சேவைகளைப் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்நிகழ்வை சக்கோட்டை பங்குத்தந் தையும் பங்குமக்களும் ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-48)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

உயரழுத்த மின்மார்க்க கட்டமைப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை புன்னாலைக்கட்டுவன், அச்செழு , புத்தூர் , ஆவரங்கால் , அச்சுவேலி , இடைக்காடு மற்றும் வடமராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# நூல் கண்காட்சியும் விற்பனையும்

(பருத்தித்துறை)

வலிகிழக்கு பிரதேச சபை பிரதான மண்டபத்தில் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி நூல்கள் காட்சியும் மலிவு விற்பனையும் நேற்று ஆரம்பமாகி இன்றும் நடைபெற்று வருகிறது.

இந்நிகழ்வை வலி.கிழக்கு பிரதேச சபையும் புத்தூர் சிறீசோமஸ்கந்தா வித்தியாலயமும் இணைந்து நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-10)

# இராசி பலன்

*22.10.2010*
*(ஐப்பசி 5, வெள்ளிக்கிழமை)*
*சதுர்த்தசி காலை 6.27 மணிவரை*
*ரேவதி முன்னிரவு 9.42 மணிவரை*
*இராகுகாலம்10.32-12.02 மணிவரை*
*சுபநேரம்6.02-7.32 மணிவரை*
*முதலாம் ஐப்பசி வெள்ளி,*
*பூரணைவிரதம்.*

**மேடம்** வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும், பொழுதுபோக்கு விடயங்களில் அதிக ஆர்வம் ஏற்படும், ஆடம்பரப் பொருட்சேர்க்கையுண்டு, சயன சுகக் குறைவுண்டு.

**இடபம்** வளர்ச்சிப் பாதைக்கு வித்திட்டவர்களை சந்தித்து , மகிழ்வீர்கள், உற்றார் உறவினர்களின் வருகையுண்டு, கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும், பெருமையடைய வேண்டிய நாள்.

**மிதுனம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள், தேகநலம் சீராகி உற்சாகப்படும் நாள், எடுத்த கருமங்கள் கைகூடும்.

**கடகம்** மறதியால் விட்டுப் போன பணிகளை இன்று செய்து முடிப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள், சொத்து வாங்கும் எண்ணம் மேலோங்கும்.

**சிங்கம்** பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், உறவினர்களின் மனக்கசப்பிற்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது, நட்பொன்று பகையாகலாம், அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்குவர்.

**கன்னி** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், பொருட்சேர்க்கையுண்டு, குடும்பத்தினருடன் குதூகலப் பயணமொன்றை மேற்கொள்ளும் சூழ்நிலை உருவாகும்.

**துலாம்** விருந்தினர் வருகையுண்டு, நல்லவர்களின் நட்புகிட்டும், அயலவருடன் ஏற்பட்ட பகை மாறும், சுப செய்திகள் நாடிவரும் நாள், எடுத்த கருமங்கள் கைகூடும்.

**விருச்சிகம்** வரவு எதிர்பார்த்தபடியே வந்து சேரும், தொலைபேசி வழித்தகவல் உறுதுணையாக இருக்கும், புத்திரர் வழியில் அனுகூலமுண்டு தொலைபேசி வழித் தகவல் உறுதுணை புரியும்.

**தனுசு** தாராளமாகச் செலவிட்டு மகிழும் நாள், நண்பர்களால் நம்பிக்கைகள் நடைபெறும், பெரியோரின் செல்வாக்கு மேலோங்கும், வாகன சுகமுண்டு, தாய்வழி உறவுகளை சந்திக்கும் வாய்ப்புண்டு.

**மகரம்** பிற இனத்தவரால் பெருமை சேரும், சிலர் தொழில் ரீதியாக உதவி கேட்டு வரலாம், பிரிவினைகள் சுமுகமாக அமையும், இளைய சகோதரத்தின் வழியில் இனிய செய்தியொன்று வந்து சேரலாம்.

**கும்பம்** கோரிக்கைகள் நிறைவேறும் நாள், பொருளாதார நிலை உயரும், மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும், பூமி யோகமுண்டு, உற்சாகமான நாள்.

**மீனம்** புத்தி சாதுரியத்தால் வளம் காணும் நாள், தெய்வ தரிசனமுண்டு, மாலை நேரப் பயணம் மகிழ்ச்சி தரும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், கற்பனையில் திகழ்வீர்கள்.

வளவன்

### தீபாவளி தினத்தை முன்னிட்டு

# விடுமுறை நாட்களில் வர்த்தக நிலையங்கள் திறக்கப்படவுள்ளது

யாழ். வணிகர் கழகம் எதிர்வரும் தீபாவளி தினத்தை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் நவம்பர் மாதம் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை உள்ள சனி , ஞாயிறு மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களில் வாடிக்கையாளர்களின் நன்மை கருதி சகல வர்த்தக நிலையங்களையும் திறந்து வியாபாரம் நடத்துமாறும் அறிவித்துள்ளது.

அத்துடன்விடுமுறை தினங்களில் வேலை செய்யும் ஊழியர் களின் நலன் பேணப்பட வேண்டு மெனவும் யாழ். வர்த்த கர்களை யாழ்ப்பாணம் வணிகர் கழகம் கேட்டுள்ளதாக யாழ். வணி கர் கழகத் தலைவர் இ.ஜெயசேக ரம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# பரிசளிப்பு விழாவும் கலை விழாவும்

யாழ்/கம்பர் மலை வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும் கலை விழாவும் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் பாடசாலை அதிபர் சு. கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக கம்பர் மலை வித்தியாலய பழைய மாணவர் சங்கத் தலைவரும் இலங்கைத் தொழிற் பயிற்சி அதிகார சபையின் மாவட்ட இணைப்பாளருமான இரா. அகிலன் கலந்து கொண்டு சிறப்பிப்பார். வெற்றியீட்டியமாணவர்களுக்கு பரிசில் களை திருமதி நிஷல்யாவழங்குவார். (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 100 | 110 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 120 | 140 | 90 |
| தக்காளி | 80 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 60 |
| கோவா | 70 | 80 | 70 |
| கரட் | 70 | 100 | 60 |
| பூசணி | 40 | 50 | 30 |
| புடோல் | 60 | 80 | 50 |
| வாழைக்காய் | 35 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 90 | 100 | 80 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 70 |
| பாகற்காய் | 150 | 160 | 100 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 50 |
| கருணைக் கிழங்கு | 50 | 70 | 60 |
| பயற்றங்காய் | 120 | 120 | 100 |
| லீக்ஸ் | 120 | 140 | 120 |
| பீற்றூட் | 40 | 50 | 40 |
| கறிமிளகாய் | 120 | 140 | 70 |
| முருங்கைக்காய் | 170 | 150 | 150 |
| போஞ்சி | 100 | 150 | 150 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | 50 |
| கீரை – 1 பிடி | 30 | 30 | 25 |
| தேசிக்காய் | 100 | 120 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 40 |

# மன்னார் தமிழ்ச் செம்மொழி விழா

# இன்று கோலாகலமாக ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மன்னார் தமிழ் சங்கம் நடத்தும் மன்னார் தமிழ் செம்மொழி விழா இன்று வெள்ளிக் கிழமை மன்னார் நகரில் கோலாகலமாக ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து நான்கு நாட்கள் நடைபெறும் இவ் விழாவில் முதல் நாள் நிகழ்வு இன்று மன்னார் நகர மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் மதியம் ஒரு மணி வரை வித்து வான் ரஷ்மான் அரங்கில் மன்னார் தமிழ்ச் சங்கத் தலைவர் அருட்திரு. தமிழ்நேசன் அடிகளார் தலைமையில் இடம்பெறும்.

தொடக்க விழா நிகழ்வின் பிரதம விருந் தினராக மன்னார் மாவட்ட அரச அதிபர் அ. நிக்கொலஸ்பிள்ளை, சிறப்பு விருந்தினர்க ளாக மன்னார் மேலதிக அரச அதிபர் திருமதி. ச. மோகநாதன், மன்னார் பிரதேச செயலா ளர் அ. ஸ்ரான்லி டிமெல், மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி. எஸ். றதினி யூட் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக யாழ். பல்க லைக்கழக தகைசார் வாழ்நாள் பேராசிரியர் ஏ. சண்முகதாஸ், யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா, மல்லிகை ஆசிரியரும் , மூத்த எழுத்தாளருமான டொமினிக் ஜீவா மற்றும் எழுத்தாளரும் ஆய்வாளருமான காப்பியக் கோ சைத்திய கலாநிதி ஜின்னா சரிபுதீன் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

தொடக்க நாள் கலை நிகழ்வில் பண்பாட்டுப் பேரணி மன்னார் பாலத்தில் இருந்து வேடப் புனைவு, ஊர்திகள் பவனி, மங்கல இசை சகிதம் ஆரம்பித்து மன்னார் நகர மண்ட பத்தை வந்தடையும்.

வர வேற்புரையினை மன்னார் பிரதேச செயலக கிராம அலுவலர்களின் நிர்வாக அலுவலர் எஸ்.அந்தோனி தரசன் பெர் னாண்டோ ஆற்ற தமிழ் செம்மொழி பற்றிய சிறப்புரையை பேராசிரியர் ஏ. சண்முகதாஸ் நிகழ்த்துவார். தமிழ் செம்மொழி வாழ்த்து நடனத்தினை சிறி சாகித்தியா நடனப் பள்ளி மாணவர்கள் நடாத்துவர். நினைவுச் சின்னம் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்று நன்றியு ரையை மன்னர் தமிழ் சங்க நிர்வாக செய லாளர் ஏ. ஜஸ்மீன் சறோன் ஆற்றுவார்.

அன்றைய மாலை அமர்வு மன்னார் நகர மண்டபத்தில் மாலை 3 மணி தொடக்கம் 7 மணிவரை லோறன்ஸ் புலவர் அரங்கில் மன்னார் தமிழ் சங்க நிர்வாக உறுப்பினர் வைத்திய கலாநிதி எஸ். லோகநாதன் தலை மையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட செயலக திட்டப் பணிப்பாளர் ஏ. பத்திநாதன், சிறப்பு விருந்தினர்களாக மன்னார் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எம்.ஏ். ஜே.துரம் மற்றும் முசலி, பிரதேச செயலாளர் செ. கேதீஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக நானாட்டான் மூத்த இசை ஆசிரியர் (இசைக் கலைமாணி) திருமதி ஞானம்மா, வி. யோண்மிஸ்ரன் மற்றும் திருகோணமலை மூதூர் எழுத்தாளர் கலைதீபம் திருமதி. சுகைதா ஏ.கரீம் கலந்து கொள்வார்கள்.

வரவேற்புரையை மன்னார் கல்வி வலய அழகியல் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. மல்லிகா மரியதாசன் சில்வா நிகழ் த்த ஆசியுரையை மன்னார் இந்து மத பிரதம குரு கலாநிதி எஸ். மனோகரக் குருக்கள் ஆற்றுவார்.நன்றியுரையை மன்னார் ஓய்வூதிய சங்க தலைவர் தே.பி.சிந்தாத்துரை ஆற்றவுள்ளார். (ஸ்ரீ-2)

# தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்ட போட்டிகள்

(மருதங்கேணி)

பருத்தித்துறை பிரதேச சபையினால் " தேசிய வாசிப்பு வாரத்தை முன்னிட்டு பாட சாலை மாணவர்களிடையே பொது அறிவுப் போட்டி, கட்டுரைப் போட்டி , சுவரொட்டிப் போட் டிகள் நடாத்தப்படவுள்ளன.

இப்போட்டிகளுக்குரிய தலைப்புக்கள் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள் ளன.

மேலதிக விபரங்களை மந்திகையில் அமைந்துள்ள பொதுநூலக நூலகரிடம் பெற்றுக்கொள்ளலாம் .

இதற்கான இறுதித்தினம் எதிர்வரும் 24ஆம் திகதி எனவும் தெரிவிக்கப்பட்டுள் ளது. (ஸ்ரீ-35)

# புலிகளுக்கு சொந்தமான சகல சொத்துக்களையும் கைப்பற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை

## அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தகவல்

(கொழும்பு)

தமிழீழ விடுத லைப் புலிகளுக்கு சொந் தமான சகல சொத்துக்களையும் கைப்பற்று வதற்கு அரசாங்கம் செயற் பட்டு வருகின் றதென ஆளும் கட்சியின் பிரதம கொறடா அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித் துள்ளார்.

குமரன் பத்மநாதனால் நிர்வகிக்கப்பட்டு வந்த தமிழீழ விடுதலைப்புலிகளின் சர்வதேச சொத்துக்கள் அரசாங்கத்தினால் அடை யாளம் காணப்பட்டுள்ளதா என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் கேள்வியெழுப்பினார்.

அதேபோன்று தமிழீழ விடுதலைப் புலிக ளின் சர்வதேச வலையமைப்பு கே.பி.யுடன் நின்று விடாது மீளத் தலை தூக்குமா எனவும் அவர் சபையில் வினா எழுப்பினார்.

இதற்கு பதிலளித்தபோதே அமைச்சர் தினேஷ் குணவர்த் தன இதனைத் தெரி வித்தார்.



அத்துடன் , தற் போது முன்னெடுக் கப்பட்டு வருகின்ற புலன் விசாரணைக ளுக்கு இடையூறு ஏற் படக்கூடும் என்பதால் அது குறித்த தகவல் களை வெளியிட முடியாதுள்ளதாகவும் குமரன் பத்மநாதன் இராணுவத்தினரின் பாதுகாப்பில் தற்போது வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.ஆரம்பகட்ட விசாரணைகளின் போது வெளியான தகவல்களை உறுதிப்படுத் திக் கொள்வதற்காகக் குமரன் பத்மநாதன் கிளிநொச்சிக்கு அழைத்துச் செல்லப்பட் டுள்ளதாகவும் அமைச்சர் தினேஷ் குண வர்த்தன தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# பால்மா வகைகளின் விலைகள் மீண்டும் அதிகரிக்கப்படக் கூடிய சாத்தியம்

## ஐ.தே.க.தெரிவிப்பு

நாட்டில் பால்மா வகைகளின் விலை கள் விரைவில் அதிகரிக்கப்படும் நிலைமையே காணப்படுகின்றது.

ரூபாவின் பெறுமதி நிலையாக இருக்குமா னால் மற்றும் பணவீக்கம் குறைந்திருக்குமா னால் ஏன் பால்மா வகைகளின் விலைகள் அதிகரிக்கப்பட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி கேள்வியெழுப்பியுள்ளது.

கொழும்பில் அமைந்துள்ள எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட ஐக்கிய தேசியக் கட்சியன் கொழும்பு மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினர் ரவி கருணநாயக்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், பால்மா வகைகளின் விலைகள் மீண்டும் அதிகரிக்கப்படும் சாத்தியம் உள்ளதாக தெரி கின்றது. தற்போது மா மாபியா என்று பேசிக் கொண்டிருக்கின்றனர்.இன்னும் சில நாட்களில் பால்மாவினை மாபியா என்று கூறுவர்.

ரூபாவின் பெறுமதி நிலையாக இருக்கு மானால்பணவீக்கம் குறைந்திருக்குமானால் ஏன் பால்மாவகைகளின் விலைகள் அதிக ரிக்கப்படவேண்டும்? மக்கள் பல வகைகளி லும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். இவற்றைப் பார்த்துக்கொண்டு ஐக்கிய தேசி யக் கட்சி மௌனமாக இருக்கவில்லை.


இதேவேளை நாட்டில் மேம்பாலங்களை அமைத்தனர்.அதாவது மேம்பாலம் ஒன்றின் ஒரு சதுர அடிக்கான செலவு ஒரு இலட்சத்து 34 ஆயிரம் ரூபா என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் மத்திய கிழக்கு நாடுகளில் கூட மேம்பாலங்களை அமைத்தனர். அங்கு மேம் பாலம் ஒன்றின் ஒரு சதுர அடிக்கான செலவு சுமார் 50 ஆயிரம் ரூபா என்று தெரி விக்கப் படுகின்றது. எனினும் எமது நாட்டில் செலவு அதிகமாகவே உள்ளது.

அவ்வாறு நிதியை செலவழித்து தெஹி வளையில் அமைக்கப்பட்டுள்ள மேம்பாலத்தின் பாரஊர்திகள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட் டுள்ளது.அப்படியானால் சைக்கிள் செல்வதற்கா மேம்பாலம் அமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# நாட்டில் மனித உரிமைகள் மிகவும் மோசமான நிலையில் சீர்குலைந்துள்ளது

## முன்னாள் பிரதம நீதியரசர் தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் சுதந் திரமற்ற நிலை மை காணப்படு வதாக முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

மனித உரி மைகள் மிகவும் மோசமான நிலையில் சீர்குலைத்துள்ளதாகவும் கடந்த காலங்களில் இவ்வாறான ஓர் நிலைமை காணப்பட வில்லை எனவும் அவர் சுட்டிக்காட் டியுள்ளார்.

சிரேஷ்ட சட்டத்தரணி கருணாரட்ன ஹேரத்தின் சட்ட சேவைக்கு 30 ஆண்டுகள் பூர்த்தியாவதனை முன்னிட்டு அநுராதபுரத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரி வித்துள்ளார்.சுதந்திரமாக வீதியில் இறங்கி நடக்க முடியாத நிலைமை காணப்படுவதா கவும் சுதந்திரமாக கருத்துக்களை வெளியிட முடி யாத நிலை உள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்துடன் ஊடகவியலாளர்கள் தமது கருத்துக்களை சுதந்திரமான முறையில் வெளியிட முடியாத நிலைமை தோன்றியுள் ளதாகவும் அவ்வாறு கருத்துக்களை வெளி யிட்டால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் குறிப்பிட்டுள் ளார். (ஸ்ரீ-2)


# பொன்சேகாவிற்கு மன்னிப்பு வழுங்கப்படக் கூடாது

## நீதியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கு சட்டத்தின் அடிப்படையி லேயே தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக வும் அவருக்கு ஒரு போதும் மன்னிப்பு வழங் கப்படக் கூடாதெனவும் நீதி அமைச்சர் அதா வுட செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகா மன்னிப்புக் கோரினாலும் மன்னிப்பு வழங்கப்பட வேண்டிய அவசியம் கிடையாதெனவும் நீதவான்களின் சம்பளம் குறித்து நாடாளுமன்றில் நடைபெற்ற விவாதத் தில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் இத னைத் தெரிவித்துள்ளார்.



சரத் பொன் சேகாவிற்கு மன் னிப்புவழங்கினால் ஏனைய சிறைக் கைதிகளுக்கும் மன்னிப்பு வழங்கப்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே சட்டத்தின் பிரகாரம் தண்டனை விதிக்கப்பட்டுள்ள சரத் பொன்சேகாவிற்கு மன் னிப்பு வழங்கப்பட வேண்டிய அவசிய மில் லை என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# ஐ.நா. நிபுணத்துவக்குழுவினரால் பல்வேறு தரப்பினரிடமும் தகவல்கள் சேகரிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூனினால் நியமிக்கப்பட்டுள்ள இலங்கை தொடர்பாக ஆலோசனை வழங் கும் நிபுணத்துவ குழு பல்வேறு தரப்பினரிட மும் கருத்துக்களை பெற்று வருவதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

இந்த தகவலை ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ளதுடன் இந்தக் குழுவிற்கு எந்தவித தரப்பினரும் தமது கருத்துக்களை முன்வைக்க முடியும் என்பதுடன் எதிர்வரும் டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி வரை மக்களின் கருத்துக்களை பதிவு செய்யும் என ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீமூனின் ஊடகப் பேச்சாளர் தெரிவித் துள்ளார். (ஸ்ரீ-2)

# ஆயுதக் கொள்வனவுக் கடனை அடைக்கவே பாதுகாப்பு அமைச்சுக்கு அதிக நிதி

## அமைச்சர் கெஹெலிய விளக்கம்

யுத்தம் முடிவடைந்துள்ள நிலை யிலும் பாதுகாப்பு அமைச்சுக்கு அதிக நிதி ஒதுக்கிய மைக்கான காரணம் யுத்த காலத்தில் உலக நாடுகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதங்களுக்குரிய கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கேயாகும் என அமைச்சரவைப் பேச்சாளரும் தகவல் ஊடகத்துறை அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று காலை அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றபோது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அமைச்சர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இராணுவரீதியில் புலிகளைத் தோற்கடிக்க தேவைப்பட்ட நவீன ஆயுதங்களை நேச நாடுகளிலிருந்து நாம் கடன் அடிப்படையிலேயே பெற்றோம். புதிய வரவு செலவுத் திட்ட நிதியொதுக்கீட்டில் இருந்தே அக் கடனை நாம் மீளச்செலுத்த திட்டமிட்டுள்ளோம். முழுக்கடனையும் திருப்பிச் செலுத்த இரண்டு மூன்று வருடங்கள் செல்லலாம்.

பாதுகாப்பு அமைச்சுக்கு இந்த முறை ஒதுக்கப்பட்டுள்ள நிதி கடந்த வருடத்தையும் விட அதிகமானதென சில ஊடகங்கள் வெளியிட்டுள்ள தகவல் பிழையானதாகும்.

கடந்த வருடத்தை விட புதிய வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி 20 சதவீதம் குறைவானதாகும் என்றும் அமைச்சர் கூறினார்.

(ஸ்ரீ-2)

# பல்கலைக்கழக விவகாரம் தொடர்பில் எஸ்.பி.-நாமல் கருத்து மோதல்?

(கொழும்பு)

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள மாணவர்களை விடுவிக்கும் விடயத்தில் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்கவுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவிற்கும் இடையே கருத்து மோதல் வலுப்பெற்று வருவதாக அலரிமாளிகை வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது.

உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க அண்மையில் பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்த போது சில மாணவர்கள் அவருக்கெதிரான ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டு கூச்சலிட்டிருந்ததுடன் கற்களை வீசித் தாக்குதல் நடாத்தியிருந்தனர். தற்போதைக்கு அவர்களில் சிலர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அதனையடுத்து தீவிரம் பெற்ற மாணவர்களின் ஆர்ப்பாட்டங்கள் காரணமாக தற்போதைக்கு பல பல்கலைக்கழகங்கள் உயர் கல்வி நடவடிக்கையை இடைநிறுத்த வேண்டிய நிலைமைக்குள்ளாகியுள்ளன. அத்துடன் மேலும் பல மாணவர்கள் கைது செய்யப்பட்டுத்தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஆயினும் நாட்டின் பல்கலைக்கழக மாணவர்கள் என்ற ரீதியில் தமக்கான விடயங்களில் கருத்துச் சுதந்திரத்தைக் கொண்டிருக்கும் உரிமை அவர்களுக்கு உண்டு என்று தெரிவிக்கும் ஜனாதிபதியின் மூத்த புதல்வனும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அனைத்து மாணவர்களும் நிபந்தனையற்ற முறையில் விடுவிக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றார்.

ஆனால் தனக்கெதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் விடயத்தில் நாமல் ராஜபக்ஷவின் தலையீடு அநாவசியம் என்பதாக கருதும் அமைச்சர் திசாநாயக்க குறித்த விடயத்தில் நாமலுடன் பலத்த கருத்து மோதலைக் கொண்டிருப்பதுடன் வார்த்தைகளாலும் அதனை வெளிப்படுத்தி வருவதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-2)

# கிழக்கு மாகாண தமிழிலக்கிய விழாவில் விருது பெறும் நூல்கள்

கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழாவில் இலக்கிய நூல்களுக் கான பரிசு பெறுவோரது விபரங் களை மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சு வெளியிட்டுள் ளது.

திருமதி ஜெனீராஹயருன் அமானின் 'சின்னக்குயில் பாட்டு' எனும் சிறுவர் பாடல், ச.அருளானந்தத்தின் *அற்புதமான வானம்* எனும் சிறுவர் கதை, முத்து இராதாகிருஷ்ணனின் *பசுமைத் தாயகம்* எனும் சிறுவர் நாடகம், *இக்பாலின் தாமரையின் ஆட்டம்* எனும் சிறுவர் கவிதை, சடாட்சரத்தின் *மேட்டு நிலம்* எனும் சிறுகதை, எவ்.நபீலீன் *காலமில்லாக் காலம்* எனும் கவிதை மற்றும் குணரத்தினத்தின் *அரசறிவியல்* எனும் உயர் கல்விக்குரிய நூல் என்பன விருதுகளுக்காக தெரிவாகியுள்ளன. (ஸ்ரீ-2)

# சீனாவின் செயற்பாடுகளை கண்காணிக்க அம்பாந்தோட்டையில் இந்திய தூதரகம்

அம்பாந்தோட்டைத்துறை முகத்தில் சீனாவின் செயற்பாடுகள் குறித்து இந்தியா கண்காணிக்கும் என்று கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. இது தொடர்பில் அது வெளியிட்டுள்ள ஆக்கம் ஒன்றில் இந்த தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் நவம்பர் மாதம் 11 ஆம் திகதி தனது இரண்டாவது பதவிக்காலத்தை ஆரம்பிக்கிறார். அதே தினத்தில் நுரைச் சோலை மின்சார நிலையத்தின் முதல் கட்ட பணிகள் ஆரம்பிக்கப்படுகின்றனர். இது தவிர அம்பாந்தோட்டை துறைமுகத் திற்கான முதலாவது கப்பலும் அதே தினத்தில் வருகிறது.

இந்த நிலையில் அதற்கு முன்னர் அம்பாந்தோட்டையில் இந்திய தூதரகம் ஒன்றை திறப்பதற்கு இந்திய அரசாங்கம் நடவடிக்கை எடுத்தள்ளது.

எனினும் அம்பாந்தோட்டையில் எங்கு எப்போது இது திறக்கப்படும் என தெரிய வில்லை. மஹிந்த ராஜபக்ஷ பொது நலவாய போட்டிகளுக்காக இந்தியா சென்றிருந்த வேளையில் பிரதமர் மன்மோகன் சிங்குடன் இது தொடர்பில் பேசப்பட்டது. பின்னர் இந்திய உயர்ஸ்தானிகர் அம்பாந்தோட்டைக்கு பயணம் செய்து இது தொடர்பில் ஆராய்ந்து இந்திய அரசாங்கத்திடம் கையளித்துள்ளார் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# பொன்சேகாவுக்கே இந்த நிலைமையென்றால் சாதாரண தமிழ் மக்களின் கதி என்ன?

## சுமந்திரன் எம்.பி.கேள்வி

(கொழும்பு)

யுத்த வீரன் எனக் கூறி தலைமேல் சுமந்து கொண்டு கொண்டாட்டங்களை நடத்திய சரத் பொன்சேகாவிற்கே இந்த நிலைமை என்றால் சாதாரண தமிழ் மக்களின் கதி என்ன என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. யான எம்.சுமந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நீதிபதிகளுக்கான சம்பளம் அதிகரிப்பதற்கான பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நீதிமன்றம் ஓரளவிற்கு சுயாதீனமாக இயங்குகின்றது. எனினும் சுயாதீனமாக இயங்குவதற்கான சூழல் தளம் உருவாக்கப்படவில்லை எனினும் நீதிபதிகளுக்கான சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

வவுனியா முகாமில் தடுத்து வைக் கப்பட்டோருக்கு இன்று வரையிலும் தடுத்துவைத் திருப்பதற்கான உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை. இன்றும் 30 ஆயிரம் பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். சட்டத்துறை கூட அவர்கள் விடயத்தில் கவனம் செலுத்தவில்லை ஒருவருக்கேனும் தடுப்புக் காவல் உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை.

ஓர் இடத்திலிருந்து பிறிதொரு இடத்திற்குச் செல்வதற்கான தடையை விதிப்பது கைதாகும். அவர்களின் நடமாட்ட சுதந்திரத்திற்கும் இடையூறு விளைவி க்கப்பட்டுள்ளது.

தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் நீதிமன்றத்திற்குச் சென்று அதிகாரங்களை பெற்றுக் கொள்ள முடியாமல் இல்லை. அதற்கென விண்ணப்பித்தோம். அதற்கான உத்தரவை நீதிமன்றம் ஒரேநாளில் வழங்கியிருக்கலாம். தமிழ்மக்கள் என்று பார்க்காமல் நீதித்துறை இதனை செய் திருக்கலாம். ஆனால் இன்று வரையிலும் செய்யப்படவில்லை.

சரத்பொன்சேகா தனி நபரல்ல அவர் தொடர்பிலான விடயம், கோட்பாடு முக்கியமானதாகும். சரத் பொன்சேகா ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடாதுவிட்டிருந்தால் அவருக்கு இவ்வாறான நிலைமை ஏற்பட்டிருக்காது என்றே பலரும் கூறுகின்றனர்.

யுத்த வீரன் என தலைமேல் தூக்கிக் கொண்டாடிய சரத்பொன்சேகாவிற்கே இந்த நிலைமைஎன்றால் தமிழ் மக்களின் தலைவிதி நீதித்துறையின் முன் நிற்கின்றது என்றார்.

(ஸ்ரீ-2)


யா/மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம், பருத்தித்துறை

**பரிசளிப்பு விழா- 2010**

இடம்:- பாடசாலை பிரதான மண்டபம்

காலம்:-23.10.2010 சனிக்கிழமை மு.ப.9.30

தலைவர்

*திரு.க.மு.கனகலிங்கம்*

அதிபர்

பிரதம விருந்தினர்

வைத்தியகலாநிதி மு.க.இரகுநாதன்

*MBBS,MD,FRCP,FCCP*

விசேட வைத்திய நிபுணர்

தேசிய வைத்தியசாலை – கொழும்பு

(இப்பாடசாலையின் பழைய மாணவர்)

பரிசில் வழங்குபவர்

வைத்திய கலாநிதி ரம்யா இரகுநாதன்

*MBBS,MD,FCCP*

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*


பாடசாலைச் சமூகம்,

யா/மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம்,

பருத்தித்துறை.

(2717)


# மானிப்பாய் சந்தியிலிருந்து சண்டிலிப்பாய் சந்தி வரை தற்காலிகமாக மூடுவதற்கான அறிவித்தல்




யாழ்- மானிப்பாய்- காரைநகர் வீதியை பாலம் அமைக்கும் பணிகளுக்காக மானிப்பாய் சந்தியில் இருந்து சண்டிலிப்பாய் சந்தி வரை நாளை சனிக்கிழமையிலிருந்து மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக யாழ்.வீதி அபிவிருத்தி அதிகார சபை பிரதம பொறியியலாளர் வி.சுதாகர் அறிவித்துள்ளார்.

எனவே சகல வித வாகனங்களும் பொதுமக்களும் மறுஅறிவித்தல் வரை மாற்றுப்பாதையாக மானிப்பாய் – கைதடி வீதியை உடுவில் சந்திவரையும், உடுவில் சந்தியில் இருந்து டச்சு வீதியை சண்டிலிப்பாய் சந்தி வரையும் போக்குவரத்துக்குப் பயன்படுத்துமாறும் அத்துடன் மாற்றுப் பாதைக்குரிய மாதிரி வரை படம் காண்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)





சுகவாழ்விற்கான பயணம் நிறுவனத்தினரால் நடத்தப்பட்ட அடிப்படை சுகாதார மருத்துவப் பயிற்சியின் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தாய்சேய் நல வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி திருமதி திருமகள் சிவசங்கர் உரையாற்றுவதையும் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட சன்றைஸ் மெடிக்கிளினிக் இயக்குநர் டாக்டர் வேணுகாந்தன் மாணவர் ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதையும் இக் கற்கை நெறியை நிறைவு செய்த மாணவர்களையும் படங்களில் காணலாம்.

# LOLC நிறுவனத்தின் செயற்பாடு யாழ்ப்பாணத்துக்கு விஸ்தரிப்பு

(யாழ்ப்பாணம்)

லங்கா ஓரிக்ஸ் லீசிங் கம்பனி பி.எல்.சி. LOLC நிறுவனம் வடபகுதியில் தனது நிலையை மேலும் பலப்படுத்தும் நோக்கத்துடன் இல. 64/40 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் தனது சொந்த அலுவலகத்தை அமைக்கவுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் நேற்று புதிய அலுவலகக் கட்டடத்திற்கான அடிக்கல்லை நாட்டினார். இந்த வைபத்தில் எல். ஒ.எல்.சி குழுமத்தின் பிரதித் தலைவர் இஷார நாணயக்கார , குழுமத்தின் முகாமைப் பணிப்பாளர் கபில ஜயவர்தன உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர். யாழ்ப்பாணத்தின் புதிய அலுவலகத்தை அடுத்த சில மாதங்களுக்குள் நிர்மாணித்து முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தற்சமயம், இந் நிறுவனம் வட மாகாணத்தில் 05 கிளைகளையும் சேவை நிலையங்களையும் கொண்டுள்ளது. யாழ்ப்பாணம் , வவுனியா , சுன்னாகம், மானிப்பாய், சாவகச்சேரி ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. அடுத்த சில மாதங்களுக்குள் கிளிநொச்சி, மன்னார் , நெல்லியடி ஆகிய இடங்களிலும் புதிய சேவை நிலையங்களைத் திறக்க குழுமம் உத்தேசித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் புதிய அலுவலகத்தைத் திறப்பதன் மூலம் தனது சேவைகளை மேலும் விரிவுபடுத்துவதற்கான புதிய வாய்ப்புக்களைக் எல்.ஒ.எல்.சி. நிறுவனம் பெற்றுக் கொள்ள இருக்கிறது.தொழில் முயற்சிகளினால் வாழ்க்கையில் உயர விரும்புபவர்களுக்கு உதவிக்கரம் நீட்டும் கம்பனியின் குறிக்கோளை அடைவதற்கும் இது இடமளிக்கும்.

இக் குழுமத்தின் முகாமைப் பணிப்பாளர் கபில ஜயவர்தன கருத்து வெளியிடுகையில் ,

"இந்த முக்கியமான நிகழ்வினை நாம் பெருமையுடன் கொண்டாடுகிறோம். கடந்த வருடம் யாழ்ப்பாணத்தில் கிளையொன்றை அமைத்ததன் மூலம் நாம் வடபகுதியில் பிரவேசித்தோம். இதனைத் தொடர்ந்து "இசுரு திரிய" தபால் அலுவலக நிலையங்கள் , இஸ்லாமிய நிதிச் சேவை நிலையங்கள், LOLC ரண் சவி நிலையங்கள் என்பவற்றின் ஊடாக எமது சேவைகள் வடக்கிலும் கிழக்கிலும் விரிவுபடுத்தப்பட்டன. இப் பிரதேசம் கலாசார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் தனக்கேயுரித்தான செழுமை நிறைந்த பாரம்பரியத்தைக் கொண்டது. புதிய முதலீட்டின் பயனாக , எமது சேவைகளை மேம்படுத்துவதற்கு எல்லையற்ற புதிய வாய்ப்புக்களை நாம் பெற்றுக் கொள்ள முடியும். சமீபத்தில் பொழுது போக்கு வசதிகளை வழங்கும் துறையிலும் பிரவேசித்துள்ள எமது நிறுவனம் , வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் இது தொடர்பாக ஏராளமான முதலீட்டு வாய்ப்புக்கள் கிடைக்குமென நம்புகின்றது" என்றார். (ச-5)

## ஜனவரி முதல் செப்டெம்பர் வரை

# மந்திகை ஆதாரவைத்தியசாலையில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு சிகிச்சை

மந்திகை ஆதார வைத்தியசாலையில் கடந்த ஜனவரி மாதத்தில் இருந்து செப்டெம்பர் மாதம்வரை அதிகளவான நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளதாக மந்திகை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் கனகராஜா நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலை புள்ளிவிபரங்களின் படி மேற் குறிப்பிட்ட காலப்பகுதியில் வெளி நோயாளர் பிரிவில் ஒரு இலட்சத்து 6 ஆயிரத்து 340 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நோயாளர் விடுதியில் 13ஆயிரத்து 14 நோயாளர்கள் விடுதியில் தங்கிநின்று சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளனர் என்றும் பிரசவ விடுதியில் 784 குழந்தைகள் பிறந்துள்ளனர் மற்றும் நோயாளர் விடுதிகளில் அனுமதிக்கப்பட்ட பின் 50 நோயாளர்கள் மரணமாகி உள்ளனர் என்றும் இதைவிட அதிகமான நோயாளர்கள் வீதி விபத்துச் சம்பவங்களில் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் இவ் வைத்தியசாலை பொது மக்களின் நலனுக்காக 24 மணித்தியாலயங்களும் சிறப்புடன் சேவையாற்றி வருவதாகவும் வைத்தியசாலையில் பொதுமக்கள் மற்றும்நோயாளர்களுக்கு ஏற்படும் சிரமங்கள், பாதிப்புக்கள் இடம்பெற்றால் இது தொடர்பான முறைப்பாடுகளை தமக்கு தெரிவித்தால் அதுதொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். (ஸ்ரீ-24)

# சட்டவிரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட பெண்ணுக்கு 2இலட்சம் ரூபா அபராதம்

(கரவெட்டி)

சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட துன்னாலை தெற்கைச் சேர்ந்த பெண் ஒருவர் நேற்று முன்தினம் நெல்லியடிப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டார்.

கசிப்பு வைத்திருந்தமை, கசிப்பு உற்பத்திப் பொருள் வைத்திருந்தமை, கோடா வைத்திருந்தமை, கசிப்பு விற்றமை ஆகிய குற்றச்சாட்டின் பெயரில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக மன்றில்பொலிஸார்தெரிவித்தனர்.

இவ்வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி திருமதி ஜோய் மகிழ் மகாதேவா, சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு 4 குற்றத்திற்கும் தலா 50ஆயிரம் விகிதம் 2இலட்சம் ரூபா அபராதம் விதித்துள்ளதுடன் செலுத்தத் தவறின் 4குற்றத்திற்கும் 6மொத காலப்படி 2வருடங்கள் சாதாரண சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-24)




# பாராட்டு விழா

(நல்லூர்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி வேல்நம்பி அண்மையில் பேராசிரியராக பதவி உயர்வு பெற்றமையைக் கௌரவிக்கும் முகமாக நடத்தப்படும் பாராட்டுவிழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் இ.குணநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நீர்வேலி வாய்க்கால்தரவை விநாயகர் தேவஸ்தான பிரதமகுரு பிரம்ம ஸ்ரீ ஆ. சந்திரசேகர குருக்கள் நீர்வேலி செல்வக்கதிர்காம சுவாமி கோவில் பிரதம குரு பிரம்ம ஸ்ரீ கு. தியாகராஜக்குருக்கள் தென்னிந்திய திருச்சபை முன்னாள் பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் ஆகியோர் ஆசியுரை நிகழ்த்தவுள்ளனர்.

மேலும் வாழ்த்துரைகளை யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட பீடாதிபதி பேராசிரியர் க. தேவராஜா , யாழ். பல்கலைக்கழக மெய்யியல் துறைத் தலைவர் பேராசிரியர் த. சிவானந்தமூர்த்தி , வலம்புரி பிரதம ஆசிரியர் ந. விஜயசுந்தரம் , சட்டத்தரணி சி. சிவநேசன் , புத்தூர் சிறீ சோமஸ்கந்தா கல்லூரி முன்னாள் அதிபர் வ. ஆறுமுகம் , அச்சுவேலி மத்திய கல்லூரி அதிபர் வே. பாலசுப்பிரமணியம் , கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன், புத்தூர் சிறீ சோமஸ்கந்தா கல்லூரி அதிபர் இ. இராசமகேந்திரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (ஸ்ரீ-134)

# பரிசளிப்பு விழா

(அல்வாய்)

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசில் தினவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் திருமதி நா.அனந்தேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

பரிசில்களை திருமதி நந்தினி உதயகுமார் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (ஸ்ரீ-19)

✠✠✠

(அல்வாய்)

மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயத்தின் வருடாந்தப் பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் வித்தியாலய அதிபர் க.மு.கனகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணருமான வைத்திய கலாநிதி மு.க. இரகுநாதன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

பரிசில்களை சருமநோய்க்கான விசேட வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி திருமதி ரம்யா இரகுநாதன் வழங்கிக் கௌரவிப்பார். (ஸ்ரீ-19)

# முன்பள்ளி விளையாட்டுப் போட்டி

(அல்வாய்)

புலோலி தென்மேற்கு கந்தமுருகேசனார் சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் முன்பள்ளி வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் பருத்தித்துறை கோட்டக்கல்வி அதிகாரி பா.இரகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.தில்லைநாதன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

கௌரவ விருந்தினராக வடமராட்சி வலய ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.சுந்தரமூர்த்தி கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக யாழ்.உள்ளூராட்சி திணைக்கள சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பரமேஸ்வரி யோகராசா, இளைப்பாறிய ஆங்கில ஆசிரியை திருமதி பரமேஸ்வரி செல்லத்துரை ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-19)

# சிறப்பு சொற்பொழிவு

(மருதங்கேணி)

தொண்டைமனாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் இன்று வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் 'தேவிபாக வதம்' என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றவுள்ளார். (ஸ்ரீ-35)






நுவரெலியா மாவட்டத்தின் கொத்மலை கல்வி வலயத்திலிருந்து வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி கமலா சட்டநாயக்க தலைமையிலான குழுவினர் யாழ்.மாவட்ட ஆரம்பக்கல்வி பாடவிதானங்களை ஆராயும் முகமாக யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு விஜயம் செய்து வருகின்றனர். அந்தவகையில் அவர்கள் யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலைக்கு விஜயம் மேற்கொண்டு ஆசிரியர் ஒருவருடன் கலந்துரையாடுவதையும் பாடசாலை அதிபர் சு.தியாகலிங்கம், அவர்களுக்கு விளக்கமளிப்பதையும் யா/ நல்லூர் சென்.பெனடிக்ற் றோ.க.வித்தியாலய அதிபர் அருட்சகோதரி ஞானதர்சினி உடன் கொத்மலை வலயக் கல்விப் பணிப்பாளர் உரையாடுவதையும் அருகில் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அமர்ந்திருப்பதையும் பாடவிதானங்கள் குறித்து யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் விளக்கமளிப்பதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:- என்.குமார்)

## மட்டக்களப்பில் பாரிய காணிமோசடி இடம்பெற்றுள்ளதாக முறைப்பாடு

(கொழும்பு)

மட்டக்களப்பு கள்ளப்பாடு பிரதேசத்தில் காணியற்ற வறிய குடும்பங்களுக்கென வழங்கப்பட்ட 170 காணித்துண்டுகளில் வசித்துவந்த குடும்பங்களை அங்கிருந்து விரட்டிவிட்டு வேறு குடும்பங்களுக்கு அந்தக் காணிகளை வழங்கிய மூன்று அரச நிறுவனங்களைச் சேர்ந்த உயர் பதவி வகிக்கும் அதிகாரிகளுக்கெதிராக உயர்மட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தக் கிராமத்தில் 17காணிகளில் 50 வருடகாலமாக வசித்துவந்த குடும்பங்களுக்கும் மரண அச்சுறுத்தல் விடுத்து அந்தக் காணிகளை வேறு நபர்களுக்கு விற்றதாக ஆவணங்களில் கையெழுத்துப் பெற்று அவர்கள் 90 ஆம் ஆண்டு காணிகளிலிருந்து விரட்டப்பட்டதாக விசாரணை நடத்திவரும் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

பலவந்தமாகப் பெறப்பட்ட இந்தக் காணிகள் சட்டரீதியான ஆவணங்கள் தயார் செய்யப்பட்டு புலிகளின் பரிந்துரையின்படி வேறு நபர்களுக்கு வழங்கப்பட்டதாக விசாரணைகளில் தெரிய வந்திருப்பதாக அந்த அதிகாரி கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

## கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தினால் மீள்குடியேறிய குடும்பங்களுக்கு உதவி

(பூநகரி)

பூநகரி மட்டுவில் நாடு கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் மீளக்குடியேறியுள்ள 150 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தினால் உதவிகள் வழங்கப்படவுள்ளன.

மீளக்குடியேறி உள்ள 200 இற்குமேற்பட்ட குடும்பங்களில் இதுவரை எந்த விதமான அரசசார்பற்ற உதவிகள் கிடைக்காத 150 குடும்பங்களுக்கே இவ்வுதவிகள் வழங்கப்படவுள்ளன.

இக் குடும்பங்களுக்கு கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தினால் 34ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான வாழ்வாதாரத்திற்கான உதவிகள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது சம்பந்தமான தேவைப்பகுப்பாய்வுக் கூட்டம் நேற்று முன்தினம் பூநகரி அன்னை அடைக்கலமாதா ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

கியூடெக் கரித்தாஸ் நிறுவனர் டே. றொபின்சன் இவர்களுக்கான உதவி வழங்கல் சம்பந்தமான விளக்கத்தை அளித்தார்.

இவர்களுக்கு கோழிவளர்ப்பு, ஆடு,மாடு வளர்ப்பு,நீர் இறைக்கும் இயந்திரம்,தையல் இயந்திரம், தச்சுத் தொழிலாளர்களுக்கான உபகரணம் ஆகியவை அடுத்த் வாரம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் 150இற்கு மேற்பட்ட குடும்பத் தலைவர், தலைவியர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-84)

# மன்னார் தமிழ்ச் செம்மொழி விழாவின் இலக்கிய ஆய்வரங்கு நிகழ்வு நாளை

## இலங்கை கல்வியியலாளர்கள் மன்னாரில் சங்கமம்

மன்னார் தமிழ் செம்மொழி விழாவின் முக்கிய அம்சங்களில் ஒன்றாகிய இலக்கிய ஆய்வரங்கில் பங்கெடுப்பதற்காக இலங்கையின் முத்த தமிழ்ப் பேராசிரியர்கள் மற்றும் ஆய்வாளர்கள் கலை இலக்கியவாதிகள் போன்றோர் மன்னாரில் சங்கமிக்கின்றனர். மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியில் இடம்பெறும் மூன்று நாள் ஆய்வரங்கின்போது தமிழ் இலக்கிய வரலாறு தொடர்பாக மூன்று கட்ட ஆய்வுகள் இடம்பெறும்.

நாளை சனிக்கிழமை அன்று ஆரம்பிக்கும் முதலாம் நாள் இலக்கிய ஆய்வரங்கு " தமிழின் இலக்கியப் பாரம்பரியம்" என்ற தலைப்பில் இடம்பெறும். ஆரம்ப நாள் ஆய்வரங்கு பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும்.

மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் அருட்திரு. தமிழ்நேசன் அடிகளார் ஆய்வரங்கை ஆரம்பித்து வைத்து தொடக்க உரையாற்றுவார்.தொடர்ந்து ஐந்து ஆய்வாளர்கள் ஆய்வுக் கட்டுரரரைகளைச் சமர்ப்பிப்பார்கள் "தமிழகத்தின் இலக்கிய வேர்கள் - அகம் புறம் பற்றிய கருத்தாடல்கள்" என்ற தலைப்பில் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி துரை மனோகரன் "அனைத்திந்தியாவுடனான முதல் இலக்கிய ஊடாட்டங்கள்- சமண, பௌத்த இலக்கியங்களில் தமிழ் நிலை பற்றிய கருத்தாடல்கள்" என்ற தலைப்பில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி வ. மகேஸ்வரன் "பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட சைவ- வைணவ மதப் பாரம்பரியங்களில் பக்தி" என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா "அனைத்திந்தியப் பண்பாட்டிற்கு தமிழின் பங்களிப்பு - சேக்கிழார் கம்பனை மையமாகக் கொண்டு பக்தி இலக்கியங்களின் தோற்றம் வளர்ச்சி பற்றிய ஆய்வு" என்ற தலைப்பில் முன்னாள் பலாலி ஆசிரிய கலாசாலை அதிபரும் கவிஞருமாகிய சோ.பத்மநாதன் (சோ.ப) "புதிய விறகுகளும் புகை மூட்டங் களும்" - விஜயநகர ஆட்சி முதல்நவீன காலத் தொடக்கம் வரையிலான இலக்கிய செல்நெறிகள் பற்றிய ஆய்வு" என்ற தலைப்பில் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் மொழித் துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி அம்மன் கிளி முருகதாஸ் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிப்பர்.

பாராட்டி வாழ்த்துகிறோம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இன்று (22.10.2010) நடைபெறவிருக்கும் பட்டமளிப்பு விழாவில் 1st in MFA பட்டத்தினைப் பெறும்

**தனுசா - சற்குணநாதன்**

அவர்களை மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அம்மா, அப்பா, மாமா, மாமி, சித்தி, சித்தப்பா அண்ணா,தம்பிமார்கள்.

RDS வீதி, கோண்டாவில் கிழக்கு.

(2714)

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் இரண்டாம் நாள் ஆய்வரங்கில் "தமிழ் சர்வதேசத்தை நோக்கி..."என்ற தலைப்பில் நடைபெறும். இவ்விரண்டாம் நாள் ஆய்வரங்கிற்கு பேராதனைப் பல்கலைக்கழகத்தின் ஓய்வு நிலை தமிழ்ப் பேராசிரியர் எம்.ஏ. நுஃமான் தலைமை தாங்குவார். இதில் 5 ஆய்வாளர்கள் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்கவுள்ளார்கள்.

" ஈழத்தில் தமிழ் - ஆரம்பகாலம் முதல் போர்த்துக்கேய காலம் வரை"என்ற தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைப் பேராசிரியர் கலாநிதி கி.விசாகரூபன் " சிங்கப்பூர் முதல் அமெரிக்கா கனடா வரை தமிழ் மொழியின் வியாத்தியும் தமிழின் புகலிட இலக்கியங்களும்" என்ற தலைப்பில் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத் துறை பதில் தலைவர் கலாநிதி செ.யோகராசா " கிறிஸ்தவமும் தமிழ் பண்பாட்டின் அகர்ச்சியும்" என்ற தலைப்பில் யாழ். கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியின் விரிவுரையாளர் அருட்கலாநிதி அ.பி.ஜெயசேகரம் அடிகளாரும் "இஸ்லாம் தந்த தமிழ்" என்ற தலைப்பில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முதுநிலை விரிவுரையாளர் றுமீஸ் அப்துல்லா " ஆங்கில வருகையும் தமிழின் - நவீனமயமாக்கலும்" என்ற தலைப்பில் தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மொழித் துறைத் தலைவர் இரகுபரன் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிப்பர்.

எதிர்வரும் 25ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறும் மூன்றாம் நாள் ஆய்வரங்கில் "மன்னார் மாதோட்ட மக்களின் வாழ்வியலும் கலை இலக்கிய முன்னெடுப்புக்களும்" என்ற தலைப்பில் நடைபெறும். இவ்விரண்டாம் நாள் ஆய்வரங்கிற்கு முதலிக் கோட்டக் கல்வி அதிகாரி எஸ்.டேவிட் தலைமையில் இடம்பெறவுள்ளது. மன்னார் "மக்களின் தொன்மையும் வரலாற்றுத் தொடச்சியும்" என்ற தலைப்பில் மட்டக்களப்பு மயிலம்பாவடி விபுலானந்த வித்தியாலய பிரதி அதிபர் மு. சுந்தரம்பாண்டியன் "மன்னாரின் கூத்து மரபு" என்ற தலைப்பில் மன்னார் பற்றிமா ம.ம.வி. ஆசிரியர் எஸ்.ஏ.உதயன் "மன்னார் மக்களின் வாழ்வியலும், நாட்டார் வழக்காறுகளும்" என்ற தலைப்பில் மன்னார் கல்வித் திணைக்களத்தின் தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி பெப்பி விக்ரர் லெம்பேட் "மன்னார் முஸ்லிம்களின் வாழ்வும் பண்பாடும்" என்ற தலைப்பில் தர்கா நகர் தேசிய கல்வியியல் கல்லூரியின் முன்னாள் உயர்பீடாதிபதி கலைவாதி கலீல் "ஈழத்தின் நவீன தமிழ் இலக்கியத்தில் மன்னார்" என்ற தலைப்பில் மன்னார் பற்றிமா ம.ம.வி. பிரதி அதிபர் திருமதி பி.பி.றெஜினா சந்தியோகுலோகு ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்கவுள்ளனர்.


உயர்தர தமிழ்ப்பாட மாணவர்கள், ஆசிரியர்கள்,இலக்கியவாதிகள்,தமிழ் ஆர்வலர்கள் என 400 பேர் அளவில் ஒவ்வொரு நாளும் இதில் பங்கேற்பார்கள். அத்துடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்ப்பேராசிரியரும் அனைவராலும் மதிக்கப்படும் ஈழத்தின் சிறந்த தமிழ் கவிஞருமான பேராசிரியர் கா.சிவத்தம்பி மன்னார் தமிழ்ச்செம்மொழி விழாவில் கலந்து கொண்டு மூன்று நாள் ஆய்வரங்கு நிகழ்வுகளையும் நெறிப்படுத்த சம்மதம் தெரிவித்திருந்தார்.

ஆனால் அவரது சீரற்ற உடல்நிலை காரணமாக, இவ்விழாவில் கலந்துகொள்ள முடியாத நிலையில் இருப்பதாக மன்னார் தமிழ்ச் சங்க நிர்வாகம் அறிவித்துள்ளது.

பேராசிரியர் சிவத்தம்பி இவ்விழாவினுடைய ஆய்வரங்கின் முதல் இருநாள் ஆய்வரங்கு ஆய்வுப் பொருள்களை தேர்வு செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. மன்னாருக்கு விஜயம் செய்து இவ்விழாவில் கலந்து தனது புலமைசார் பங்களிப்பை நிறைவாக வழங்க மிகுந்த ஆர்வத்தோடு பேராசிரியர் சிவத்தம்பி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.(ஸ்ரீ-2)

# யுத்தம் என்ற கசப்பான அனுபவம் மீண்டும் வராமல் தடுக்கவேண்டும்

## சிறிதரன் எம்.பி மன்றில் உரை



இலங்கைத் தீவில் உள்நாட்டில் இனப் பிரச்சினை தீர்வு தொடர்பாக எடுக்கப்பட்ட முயற்சிகளும் எட்டப்பட்ட முடிபுகளும் தோல்வியடைந்ததே வரலாறு என்ற கசப்பான உண்மையை நாம் மறந்துவிட முடியாது.

வெளிநாடுகளில் இருந்து திணிக்கப் படும் தீர்வையும் நீங்கள் ஏற்றுக்கொள் ளத் தயார் இல்லை. இப்படியான நிலையில் இனப்பிரச்சினைத் தீர்வை எப்படி எட்ட முடியும் என்ற கேள்வியை தயவு செய்து நீங்களே உங்களிடம் கேட்டுப்பாருங்கள். அப்படியானால் இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் இப்படியே துன்பங்களும் துயரங்களும் தொடர வேண்டுமா? என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

அவசர காலச்சட்டம் நீடிப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.அவர் ஆற்றிய உரையின் சுருக்கம் வருமாறு,

ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண எடுக்கப்பட்ட முயற்சிகள் அனைத்தும் படுதோல்வியடைந்த நிலையில்தானே தமிழர் விடுதலைக்கூட்டணியினர் தனி நாட்டுக்கோரிக்கையை முன்வைத்தனர். அது தானே ஆயுதப் போராட்டத்தில் அத்திவாரமாக அமைந்தது. அந்த ஆயுதப் போராட்டம்தானே பெரும் போராக வெடித்தது. உங்களுக்கும் எங்களுக்கும் பேரழி வைத்தந்தது. மீண்டும் அப்படியொரு கொடிய நிலைமை உருவாவதை நாங்கள் விரும்பவில்லை. நீங்களும் விரும்ப மாட்டீர்கள்!

போரின் துன்ப துயரங்களை, கொடுமைகளை நாம் இன்னொரு முறை அனுபவிக்கத் தயாரில்லை.

நீங்களும்,நாங்களும் விரும்பாத அந்த கசப்பான நிலைமை மீண்டும் வராமல் தடுப்பது உங்கள் கையில் தான் உள்ளது. அது எல்லோரையும் அதிசயிக்க வைக்கும் மாயா ஜால வித்தையல்ல! நீங்கள் தூய்மையான ஈடுபாட்டுடன் எட்டக்கூடிய நியாய பூர்வமான இனப்பிரச்சினை தீர்வுதான் அது.

இந்த நாட்டின் அமைதியையும் ஐக்கியத்தையும் பாதுகாத்து சுபீட்சத்தை நோக்கி நாங்களும் நீங்களும் முன் செல்ல-இருக்கக் கூடிய ஒரே வழி அது மட்டும்தான். ஜனாதிபதி அவர்கள் இந்தியா செல்வதற்கு முன்பாக எம்மை அழைத்துப் பேசினார். அதில் இனப்பிரச்சினை தொடர்பாக தொடர்ந்து சந்திப்புக்கள் நடத்தவது எனவும், அபிவிருத்தி,மீள் குடியேற்றம் தொடர்பாக அரசும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும் இணைந்து செயற்படுவது எனவும் இணக்கம் காணப்பட்டது.

ஆனால் இன்று வரை அடுத்த கட்டப் பேச்சுக்கள் இடம்பெறவில்லை,அதற்கான அறிகுறிகளும் தென்படவில்லை. இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகளில் முழுமூச்சுடன் இறங்க நாம் தயாராக இருக்கிறோம். அரசாங்கமும் விசுவாசமாக இம் முயற்சிகளில் இறங்கினால் இந்த நாடு ஆசியாவின் அதிசயமாக மாறுவதை எவராலும் தடுக்க முடியாது.

### இயல்பு வாழ்க்கையும் மீள் குடியேற்றமும்

இனப்பிரச்சினைத்தீர்வு எவ்வளவு முக்கியமானதோ அதற்குச் சற்றும் கூடக்குறையாத அக்கறை எமது மக்களின் இயல்பு வாழ்வை மீண்டும் கொண்டு வருவதில் காட்டப்பட வேண்டும்.

ஒரு பகுதி மக்கள் இன்னும் மீள் குடியேற்றப்படாமல் இன்றும் முகாம்களிலேயே தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மீண்டும் சொந்த இடங்களுக்குப் போய் தங்கள் வழமையான தொழில்களில் ஈடுபட வாய்ப்பை விரைவில் ஏற்படுத்த வேண்டும். உழைப்பின் மூலம் செல்வச்செழிப்புடன் வாழ்ந்து வந்த மக்கள் பிறர் வழங்கும் உதவிகளில் தங்கி எவ்வளவு காலம் வாழ்வது? எனவே மீள் குடியேற்றங்கள் துரிதப்படுத்தப்பட வேண்டும் என்பதை சம்பந்தப்பட்ட தரப்பிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

மீள் குடியேற்றப்பட்ட மக்களை பொறுத்த வரையில் அவர்கள் மீள் குடியேற்றப்பட்டனர் என்பதைவிட கொண்டுவந்து கொட்டப்பட்டார்கள் என்பதே பொருத்தமாகும்.

### இராணுவத்திடம் முன்அனுமதி

போர் முடிந்து 18 மாதங்கள் கடந்து விட்டன. ஆனால் வடக்கு- கிழக்கில் பார்க்கும் இடமெங்கும் இராணுவ முகாம்களும்,காவல் அரண்களும் தான். அதைவிடவும் மேலதிகமாக நிரந்தர இராணுவ முகாம்களும் அமைக்கப்பட்டு மீண்டும் ஆயுதப் போராட்ட நடவடிக்கைகள் தோற்றம் பெறாமல் இருக்கவே இத்தகைய் நடவடிக்கைகள் என கூறப்படுகின்றது.

ஆனால் நடைமுறையில் இந் நடவடிக்கைகள் அந்த அளவுடன் மட்டுப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது தான் உண்மை. எந்தவொரு கலந்துரையாடலோ சிறு கூட்டமோ கூட நடத்துவது என்றாலும் இராணுவ அனுமதி பெறப்படவேண்டும் என வலியுறுத்தப் படுகிறது. எந்தவொரு நடவடிக்கையிலும் இராணுவப் பிரசன்னம் தவிர்க்கப்படமுடியாதுள்ளது.

எங்கும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் நடமாட்டம் ,விசாரணை என்ற பேரில் விடுக்கப்படும் மிரட்டல்களும் மிக அதிகமான அளவில் இடம்பெறுகின்றன. பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்களுடன் மேற்கொள்ளும் சந்திப்புக்களின் போதும் கூட குறிப்பெடுப்பதும்,கலந்துகொள்ளும் மக்களை படமெடுப்பது என மக்கள் அச்சமூட்டப்படுகின்றனர். அது மட்டுமன்றி காணிப்பிணக்குகள் போன்ற விடயத்தில் கூட இராணுவத்தினரே முடிவெடுக்கும் அதிகாரத்தை கையில் எடுத்துள்ளனர்.

ஒட்டுமொத்தத்தில் வன்னியில் சிவில் நிர்வாகம் என்பது இராணுவ மேலாதிக்கத்திற்கு கீழ்ப்படுத்தப்பட்டிருப்பதையே எங்கும் காணக்கூடியதாக இருக்கின்றது.

### இராணுவ ஆட்சி

எங்கள் ஜனநாயக நாட்டில் ஒரு பகுதியில் இராணுவ ஆட்சி நிலவுவதை நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களா?எமது குடியேற்ற மக்கள் இன்னமும் கூடாரங்களில் மழையிலும் வெய்லிலும் அல்லல் பட்டுக்கொண்டிருக்க எமது மக்களின் ஒரு பகுதியினர் நீண்ட காலமாக வாழ்ந்த காணிகள் அபகரிக்கப்பட்டு வேகமாக இராணுவத்தினரின் குடும்பங்களுக்கான குடியிருப்புக்கள் அமைக்கப்படுகின்றன.

இது ஒரு நில ஆக்கிரமிப்பு நோக்கம் கொண்ட சிங்கள குடியேற்றமாகவே நாங்கள் பார்க்கின்றோம்.இதேவேளையில் கிழக்கில் குடியிருந்து போர் காரணமாக இடம் பெயர்ந்த சிங்கள மக்கள் தாங்கள் மட்டுமன்றி மீள்குடியேற்றம் என்ற பெயரில் இன்னும் பல மடங்கு சிங்களவரை கூட்டி வந்து நிலங்களை ஆக்கிரமிக்கின்றனர்.

வன்னியில் இராணுவ முகாம்களுக்கு அருகில் புத்தர் சிலைகள் வைக்கப்படுகின்றன. அவை எதிர்காலத்தில் விகாரைகளாக மாறும் என்பதில் சந்தேகமில்லை. அது மட்டுமன்றி பல இந்து ஆலயங்கள், வழிபாட்டிடங்கள், தொல்பொருள் ஆராய்ச்சி என்ற பெயரில் முன்னாள் பௌத்த ஆலயங்கள் என நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்படியான ஒரு நிலையில் இன ஐக்கியத்தையும், சமாதானத்தையும் கட்டிக் காக்க முடியுமா? எனத் தட்டிக் கேட்க விரும்புகின்றேன்..

### யாழ்ப்பாணத்தில் சிங்கள மக்கள்

அண்மையில் தென்னிலங்கையில் இருந்து வந்து யாழ். புதையிரத நிலையத்தில் தங்கியிருக்கும் ஏறக்குறைய 500 பேர் தாங்கள் முன்பு யாழ்ப்பாணத்தில் குடியிருந்தவர்கள் எனவும் மீண்டும் தாங்கள் அங்கு குடியேற்றப்படவேண்டும் எனவும் கோரி பிடிவாதமாக திரும்பிப்போக மறுத்து வருகின்றனர்.

அவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் வீடோ , காணியோ சொந்தமாக இல்லாத காரணத்தினால் அவர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள எவ்வித சட்டபூர்வமான வழிமுறைகளும் இல்லையென யாழ். அரசாங்க அதிபர் திட்டவட்டமாக தெரிவித்துவிட்டார்.

அவர்களும் தாங்கள் முன்பு இருந்த வீடுகளைக் கோரவில்லை எனவும் அரசாங்கக் காணிகளில் தங்களைக் குடியேற்ற வேண்டும் எனவும் கேட்டுள்ளனர்.

இது தமிழ்ப் பிரதேசத்தில் மேற்கொள்ளப் போகும் ஒரு திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் என்பதை எவராலும் இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும்.

இந்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க , ஜாதிகஹெல உறுமயவின் சோபிததேரர் ஆகியோர் உடனடியாக அந்த மக்களை யாழ்ப்பாணத்தில் குடியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என உரத்துக் குரல் கொடுத்துள்ளனர்.

எனவே இம்மக்களின் கோரிக்கையின் பின்னணியை எங்களால் புரிந்து கொள்ள முடிகின்றது.

### தடுத்து வைக்கப்பட்டோர் நிலையைத் தெரிவியுங்கள்

எனது அன்புக்குரிய சிங்களச் சகோதரர்களே!

உங்கள் மனச்சாட்சியிடம் நான் ஒரு கோரிக்கையை வைக்க விரும்புகின்றேன். நீங்கள் ஒரு தொன்மையான கலாசாரத்தைக் கொண்ட ஒரு இனம் என்ற வகையில் நான் உங்களிடம் உரிமையுடன் இனப்பிரச்சினை தொடர்பாகப் பேச விரும்புகின்றேன்.

விடுதலைப்புலிகளுக்கு உதவி செய்தார்கள் என்ற குற்றச்சாட்டில் நூற்றுக்கணக்கானோர் எவ்வித விசாரணைகளுமின்றி சிறைகளில் அரசியல் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் 18,20 வருடங்களாகக் கூட தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

நான்கேட்பதெல்லாம் ஒன்றில் அவர்களை விடுதலை செய்யுங்கள் அல்லது நீதி மன்றத்தின் முன் நிறுத்துங்கள்! இது மனிதாபிமானக் கோரிக்கையாக இருந்த போதிலும், ஜனநாயக மரபுகளுக்கு உட்பட்டது தான் என்பதை அறிவார்ந்த நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என நம்புகின்றேன்.

அடுத்து தடுப்பில் உள்ளவர்கள் தடுப்பில் உள்ளார்களா இல்லையா என்பதைத் தெரிய முடியாத முன்னாள் போராளிகள் தொடர்பாக இவ்விடத்தில் என் கருத்துக்களை முன் வைக்க விரும்புகின்றேன்.

பாலகுமாரன், யோகி ஆகியோர் படையினரிடம் சரணடைந்தார்கள் என்பது பல ஊடகங்கள் மூலம் தெரியவந்துள்ளது. அவர்கள் உயிருடன் இருக்கின்றார்களா? இல்லையா? என்பது தொடர்பாக இன்று வரை எவ்வித தகவல்களும் இல்லை. இதேபோன்று வடக்குக் கிழக்கில் அனுபவங்களிலிருந்து கற்றுக் கொண்ட பாடங்களும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு நடத்திய விசாரணைகளின் போது, பல போராளிகளின் மனைவியர் தங்கள் முன்னிலையிலே தங்கள் கணவன்மார் இராணுவத்தினரிடம் சரணடைந்ததாகத் தெரிவிக்கின்றனர்.

நாங்கள் கேட்பதெல்லாம் இவர்கள் உயிருடன் இருக்கின்றார்களா இல்லையா என்பது தான்! தயவு செய்து அவர்களின் மனைவிமார் தங்கள் கழுத்தில் உள்ள தாலியைக் கழற்றுவதாவிடுவதா என்பதை முடிவு செய்வதற்கு அவர்கள் பற்றிய நிலைமையை அறியத் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

கணவன் இறந்தபோது தாலி போட்டிருப்பதை எங்கள் கலாசாரம் அனுமதிப்பதில்லை. அதே போன்று கணவன் உயிருடன் இருக்கும் போது தாலியைக் கழற்றுவதை எங்கள் சமூகம் ஏற்றுக்கொள்வதில்லை.

எனவே நாங்கள் உங்களிடம் கேட்பதெல்லாம் உங்கள் கலாசாரத்தை எவ்வாறு நீங்கள் மதிக்கின்றீர்களோ அதேபோன்று எங்கள் கலாசாரத்தையும் நாங்கள் மதிப்பதற்கு குறுக்கே நிற்காதீர்கள் என்பதுதான்.

இன்னும் எண்ணாயிரம் முன்னாள் போராளிகள் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக அறிகிறோம். நான் அறிந்த வரையில் பலவந்தமாக இளைஞர்களைப் பிடித்து படையில் சேர்த்தவர்கள் விடுதலை பெற்று நாட்டில் சுதந்திரமாக உலாவித் திரிய அவர்களால் பிடிக்கப்பட்டு அழுதழுது படையில் சேர்க்கப்பட்டவர்கள் இன்னும் தடுத்து வைக்கப்பட்டிருப்பது நியாயமா எனக் கேட்க விரும்புகின்றேன்.

நான் கேட்பதெல்லாம் குற்றமற்றவர்களை விடுவியுங்கள்! குற்றவாளிகளைத் தண்டியுங்கள்! எப்போ விடுவிக்கப்படுவோம் என்பதை விட ஒரு குறிப்பிட்ட திகதியில் விடுவிக்கப்பட முடியும் என அறிந்திருப்பது நியாயமானதாகவே நான் கருதுகின்றேன். இறுதியாக நான் உங்களிடம் கேட்பது இது தான்!

இனப்பிரச்சனைக்கு நியாயபூர்வமான தீர்வு காணும் முயற்சிகளில் விசுவாசமாக செயற்பட்டு சிங்களக் குடியேற்றங்கள், இன ஒடுக்குமுறைகள் போன்ற நடைமுறைகள் மூலம் எமது இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளையும் மோதல்களையும் உருவாக்கும் சக்திகளை இனங்கண்டு புறமொதுக்குவோம், நாங்கள் தமிழர்களாகவும், நீங்கள் சிங்களவர்களாகவும் எங்கள் கரங்களை இறுகப்பற்றி இந்த நாட்டை ஆசியாவின் அதிசயமாக்குவோம் என்றார். ❑


## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# காபன் நனோ குழாய்களின் பிரயோகங்களும் பாதிப்புகளும்

இன்று மருத்துவம், உயிரியல், பௌதீகவியல், இலத்திரனியல், கணனி, விஞ்ஞானம், இரசாயனவியல், பாதுகாப்பு, விவசாயம் போன்ற உலகிலுள்ள எல்லாத்துறைகளிலும் நனோ தொழில்நுட்பம் செல்வாக்கு செலுத்துகின்றது. நனோ தொழில்நுட்பத்தை நனோ மீற்றர் (nm) அளவிலான அணுக்களினாலோ அல்லது மூலக்கூறுகளினாலோ கட்டியெழுப்பப்படும் பொருட்களை உருவாக்கும் தொழில்நுட்பம் என வரவிலக் கணப்படுத்தலாம். நனோ திரவியங்களில் காபன் நனோ குழாய்களே கூடுதலாகப் பாவிக்கப் படுகிறது.

காபன் நனோ குழாயானது காபனின் பிற திருப்பங்களில் ஒன்றாகும். 1991இல் Sujimo Ligima இனால் கண்டுபிடிக்கப்பட்டது. இக் காபன் நனோ குழாயானது ஓரணு தடிப்பைக் கொண்ட காபன் தாள் ஆனது உருளை வடிவில் உருட்டப்பட்டு உருவாக்கப்படுகிறது.

a (Fig-1)




ஒவ்வொன்றும் அறு கோண வளையங்களாக அமைந்த காபன் அணுக்களாகும். இது $Sp^2$ கலப் பாக்கத்தையுடைய காபன் - காபன் பிணைப்புக்களையுடையது.


காபன் நனோ குழாய்களானது இரண்டு வகைப்படும்.

**1. தனித்த சுவரையுடைய காபன் நனோக் குழாய்கள் (SWCNT)**

1993இல் காபன் நனோக் குழாய்கள் கண்டறியப்பட்டன.

தனியே ஒரே ஒரு காபன் தாளினைக் கொண்டது. இது காபன் நனோக் குழாய்களின் இயல்பினை அறியப் பொதுவாகப் பயன்படுத்தப்படுகிறது.


(Fig-2)



**2. பல்சுவருடைய காபன் நனோ குழாய்கள்**

இது ஒன்றுக்கு மேற்பட்ட காபன் தாள் படைகளைக் கொண்டது. இவற்றின் படைகளுக்கிடைப்பட்ட தூரம் அண்ணளவாக 0.3Nm

(Fig-3)



மடங்கு பெரியது. அத்துடன் இவை மிக அதிக வலிமை கொண்டிருப்பதுடன் வெப்பக்கடத்து திறன், மின் கடத்துதிறன் கொண்டவை. தனித்த சுவருடைய காபன் நனோக் குழாய்கள் கடத்திகளாகவோ, குறை கடத்திகளாகவோ செயற்படக் கூடியவை. இவற்றில் அமில காரத்துட்னான தாக்குதிறன் குறைவாக இருப்பதுடன் இவை கூடிய மேற்பரப்பையும் கொண்டவை.

காபன் நனோக் குழாய்கள் பல்வேறு பிரயோகங்களைக் கொண்டுள்ளன. பாலங்கள், கட்டடங்களில் உருக்கின் வலிமையிலும் பல மடங்கு வலிமை கொண்டதும், பாரங் குறைந்ததும், துருப்பிடிக்காததுமான காபன் நனோ குழாய்கள் உருக்கிற்கு மாற்றீடாக பயன்படுத்தப்படுகின்றன.

அத்துடன் வலிமையான, பாரங்குறைந்த டெனிஸ் மட்டைகள், வாகன உதிரிப்பாகங்கள், உடைகள், விண்வெளி ஓடங்கள் என்பனவற்றின் தயாரிப்பிலும் இவை பயன்படுத்தப்படுகின்றன. நனோ குழாய்களின் விட்டத்தை மாற்றுவதன் மூலம் எமது தேவைக்கேற்றவாறு இரசாயன, இலத்திரனியல், ஒளியியல் பண்புகளையும் மாற்றிக்கொள்ள முடியும்.

வளியை சுத்திரிகரிக்கும் வடிநீர், வடி ஐதரசன் சேமிப்புக்கலன்கள், உயிரியல் தொழில்நுட்பக் கலன்கள் என்பன காபன் நனோ குழாய்களின் இரசாயனப் பிரயோகங்களில் சிலவாகும். காட்சித் தரைகள், திரான்சிஸ்ரர்கள், சூரியக்கலன்கள், கடத்திகள், கடத்துப் படலங்கள் போன்றன ஒளியியல், மின்னியல், இலத்திரனியல் சார்ந்த பிரயோகங்களாகும். அத்துடன் உயிரியல் உணரிகளாகவும் காபன் நனோ குழாய்கள் பயன்படுத்தப்படுகின்றன.

காபன் நனோ குழாய்களின் பிரயோகமானது, பல்வேறு விதமான தீங்குகளையும் மனிதனுக்கு ஏற்படுத்துகின்றது. இவை அகக் குழியமாதல், மென்சவ்வு ஊடுபுகவிடல், மென்சவ்வு கால்வாய்கள் மூலம் உயிர்க் கலங்களினுள் செல்கின்றன. காபன் நனோ குழாய்களின் நச்சுத் தன்மையானது செறிவு, [illegible] கை, நீளம், உற்பத்தி முறை, ஊக்கி, தொழிற்பாடு போன்ற காரணிகளால் தீர்மானிக்கப் [illegible] படுகின்றது. உயிரங்கிகளில் இவற்றின் பிரிந்தழிவின்மை காரணமாக அவை அங்கிகளில் சிறிது சிறிதாகச் சேர்கின்றன. காபன் நனோ குழாய்களின் நச்சுத்தன்மையின் வலிமையானது தனித்த சுவருடைய குழாய் < பல்சுவருடைய குழாய் < Fullerenes ($C_{60}$) என்ற வகையில் அமையும்.

இக் காபன் நனோ குழாய்கள் பல்வேறு வழிகளில் மனிதனின் உடலினுள் செல்கின்றன.

உட் சுவாசம் மூலம் மனிதனைச் சென்றடையும் துணிக்கைகள் மனிதன் சுவாசச் சுவட்டில் அழற்சியை ஏற்படுத்துகின்றன. தோலின் ஊடாக உட்செல்பவை தோல் நோய்களைத் தோற்றுவிக்கின்றன. உட்கொள்ளும் மருந்துகள் மூலம் உட்செல்பவை ஈரலில் ஒன்று சேர்கின்றன.

இதனால் ஈரலில் அழற்சி ஏற்படுகிறது.

பல்வேறு விதமான ஆய்வுகள் காபன் நனோ குழாய்கள் மூலம் ஏற்படும் தீங்குகள் பற்றி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எலியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் மூலம் தனித்த சுவருடைய காபன் குழாய்களால் (SWCNTS) நுரையீரல் நச்சுத்தன்மை ஏற்படுவது கண்டறியப்பட்டுள்ளது. (Fig-4)

அத்துடன் காபன் நனோ குழாய்களின் திரளல் (granuloma) உயிருள்ள கலன்களின் தொழிற்பாடுகளைப் பாதிக்கின்றன. உ+ம்:- நுரையீரலில் ஏற்படும் பாதிப்பு Fibrosis ஐ உருவாக்கிறது.


எனவே காபன் நனோ குழாய்களின் நச்சுத் தன்மையினைக் குறைக்க பல்வேறு உத்திகளைக் கையாள வேண்டும். பல்வேறு நனோ நிலையங்கள் இதற்கான அறிவுறுத்தல்களை வழங்குகின்றன.

- இரசாயனப் பதார்த்தங்களிலிருந்து சிறந்த பாதுகாப்பை பெற வேண்டும்.
- நனோ துணிக்கைகள் சம்பந்தமான அறிவு எல்லோருக்கும் புகட்டப்பட வேண்டும்.
- நனோ துணிக்கைகளின் உட் சுவாசம், தோலின் ஊடான பரவுகையிலிருந்து எம்மைப் பாதுகாத்தல்.
- சிறந்த கையாளல் முறைகளைப் பேண வேண்டும்.
- அரசாங்கமானது கண்டிப்பான சட்டங்களை அமுல்படுத்த வேண்டும்.
- சிறந்த முறையில் இக்கழிவுகளை அகற்ற வேண்டும்.

**இலாவண்யா சிவசுப்பிரமணியம்**
செய்முறை வழிகாட்டுநர்,
இரசாயனவியல் துறை,
விஞ்ஞானபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(Fig-4)

Lungs from Mice of HD-90d Groups




## வாரத்திற்கு ஒரு புதிர்! 30

**0.999999..., =1 எனக் காட்டுக**

**விடைகளை 01-11.2010 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

Mr. S.Selvarajan
Editor, Section A
Jaffna Science Association
Dept. of Mathematics & Statistics,
University of Jaffna, Jaffna.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட இரசாயனவியல் துறையில் கலாநிதி மீனா செந்தில்நந்தனனிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 29க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**
சண்முகதாசன் சஞ்ஜித்
மைல்யோடை,
கரவெட்டி வடக்கு.

**புதிர் 29 இற்கான விடை:** $1729=1^3+12^3=9^3+10^3$

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
## புதிர் இல. 30

சரியான விடை :..............................
முழுப்பெயர் :..............................
முகவரி :..............................
:..............................
தொ.பே. இல :..............................
கையொப்பம் :..............................

# 11 ஆம் திகதியில் பிறந்த உங்கள் பலன் எப்படி?

11ஆம் திகதி பிறந்தவர்களில் பெரும்பாலோர் 1ஆம் எண்ணின் ஆதிக்கமும் 2ஆம் எண்ணின் ஆதிக்கமும் கொண்டவர்களாக இருப்பார்கள். ஆதிக்க குணமும் அச்சமும் சேர்ந்து காணப்படும். பதற்றமும் அவசரமும் தேவையில்லாத செயல்களுக்கு அழைத்துச் செல்லும் மனநிலையும் இருப்பதைக் காணலாம். 11ஆம் திகதி பிறந் தவர்களுக்கான தொழில் அதிபதி எண்கள் 2,9 தொழில் உதவி செய்யும் எண்கள் 5,6 ஆகும்.

இவர்கள் அனைத்து நிலை பதவிகளிலும் இருப்பதைக் காணலாம். கீழ்மட்டத்திலிருந்து சிறிது சிறிதாக முன்னேறும் தன்மை உடைய வர்கள். தன் நிலை உயரும் போது பெருமை கொள்ளும் இவர்கள் பெரும்பாலும் மனக் குழப்பம் உடையவூர்களாக இருப்பதைக் காணலாம். மேல்மட்டததில் உள்ள ஊழியர்கள் பிறரைக் குழப்பமடையச் செய்யும் குணம் படைத்தவர்களாக இருப்பார்கள். தொழில் அதிபதி எண் 2இன் ஆதிக்கம் உள்ளவர்கள் சற்று சந்தேக குணம் உடையவர்களாக இருப்பதைக் காணலாம். 9ஆம் எண்ணின் ஆதிக்கம் உள்ளவர்கள் அவசரக்காரர்களாக இருப்பதைக் காணலாம். இவர்களின் தொழில் நட்பு எண்களான 5 மற்றும் 6ஆம் எண்களால் மிக அதிகமாகக் காப்பாற்றப்படுவதால் எப்படியும் தப்பிவிடுவார்கள். எப்படிப் பார்த்தாலும் முடிவில் வெற்றி என்று இருப்பதால், இவர்கள் தான் சொன்னதுதான் சரி; தான் செய்ததுதான் சரி என்று நினைத்துச் செயல்படுவார்கள். ஆண் ஊழியர்கள் மேலதிகாரியால் அடிக்கடி பிரச்சினைகளைச் சந்தித்த வண்ணம் இருப்பார்கள். பெண் ஊழியர்கள் குழப்பவாதிகளாக இருப்பதைக் காணலாம். மனஅமைதி குறைவாக இருப்பவர்களும் இவர்களே. தொழில் எண் மற்றும் தொழில் உதவி எண்கள் நல்ல ஆதிக்கத்துடன் இருந்தால் மட்டுமே மிக உன்னதமான நிலையை அடையக்கூடும். தொழில் எண் ஆதிக்கம் பெற புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் அம்பிகை வழிபாடு செய்ய வேண்டும்.

இவர்கள் பெரும்பாலும் ஏற்றத் தாழ்வுகளைச் சந்திப்பவர்களாக இருப்பார்கள். இதற்கு இவர்களின் இரட்டை மனநிலையே காரணமாகும். எதையும் ஆராய்ந்து செயல்பட நினைத்து தேவையில்லாத செயல்களைச் செய்வதால்தான் ஏற்றத் தாழ்வு ஏற்படுகிறது. மேலும் பெண்கள் கூறுவதை அப்படியே ஏற்றுச் செயற்படுவதாலும் சரிவைச் சந்திக்கிறார்கள். இந்த திகதியில் பிறந்த மிகச் சிலரே நல்ல நிலையில் இருப்பதைக் காணலாம். தொழில் எண் மற்றும் தொழில் உதவி எண்களின் ஆதிக்கத்தின்படி இவர்களின் தொழில்நிலைகள் அமையும். தொழில் எண் 2 மற்றும் 9இன் ஆதிக்கம் மட்டுமே இரூப்பவர்கள் மேற்கூறியபடி இருப்பார்கள். தொழில் உதவி எண் ஆதிக்கம் மட்டும் இருப்பவர்கள் (5, 6) பொருளாதார நெருக்கடியைச் சந்தித்துக் கொண்டே இருப்பார்கள். இவர்களில் தொழில் எண் 9 மற்றும் தொழில் உதவி எண் 6இன் ஆதிக்கம் பெற்றவர்கள் எந்தச் சூழ்நிலையையும் சமாளிக்கும் திறமைசாலிகளாக இருப்பதைக் காணலாம். தொழில் எண் மற்றும் தொழில் உதவி எண்களின் ஆதிக்கம் பெற்றவர்கள் சிறப்பான தொழில் அமைப்பையும் நல்ல பொருளாதார நிலையையும் உடையவர்களாக இருப்பார்கள். இவர்கள் திங்கள் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் சந்திரனுக்குத் தீபமேற்றி வழிபாடு செய்துவர மேன்மைகளும் நன்மைகளும் பெறலாம்.

இவர்கள் ஏற்றத் தாழ்வின்றி வேலை செய்யும் நிலையை உடையவர்களாக இருப்பார்கள். இதற்குக் காரணம் இவர்களின் தொழில் மற்றும் தொழில் உதவி எண்கள் சமமான ஆதிக்கத்தில் இருப்பதுதான். ஆனால் தன்னிலையை அடிக்கடி மாற்றிக்கொள்ளும் மனோபாவம் உடைய வர்களாகவும் இருப்பதால் எண் ஆதிக்கம் சீராக இருப்பதில்லை. எண் ஆதிக்கம் அலை வடிவில் செயற்படுவதாலும் இவர்களுக்கு முன்னேற்றம் என்பது எளிதில் கிடைப்பதில்லை. இவர்களுக்குப் பெரும்பாலும் தொழில் முதலீடுதான் பிரச்சினையாக இருப்பதைக் காணலாம். எல்லாவற்றிற்கும் மேலாக மனக்குழப்பமும் இவர்களைப் பாடாய்ப் படுத்திக் கொண்டிருப்பதையும் காணலாம். இவர்கள் திங்கள் தோறும் சங்கநிதி, பதுமநிதியுடன் கூடிய குபேரனை வழிபாடு செய்துவந்தால், எண் ஆதிக்கம் பெற்று மேன்மை பல அடையலாம்.

இவர்களில் பெரும்பான்மையினர் இரண்டாம் நிலை, மூன்றாம் நிலைக் கலைஞர்களாகக் காணப்படுவார்கள். திறமைகள் அதிகம் இருந்தும் முன்னேற்றம் என்னவோ குதிரைக் கொம்பாகவே இருக்கும். இவர்களின் மனநிலையும் இக்கரைக்கு அக்கரை பச்சை என்பதுபோல் அடிக்கடிமாறும். இவர்களின் தொழில் எண்கள் 2, 9இன் ஆதிக்கத்தைவிட தொழில் உதவி எண்களான 5, 6இன் ஆதிக்கம் அதிகமாக இருந்தால் நல்ல நிலையை எட்டி விடுவார்கள். தொழில் பக்தியும் தொழில் மரியாதையும் அதிகமாக இவர்களிடம் காணப்படும். புதிதாக ஏதேனும் செய்ய வேண்டும். அதன் மூலம் பொருளாதார நிலை உயர்வடைய வேண்டும் என்று முயற்சிகள் மேற்கொள்ளக் கூடியவர்கள். எப்படிப் பார்த்தாலும் தங்களின் 29ஆவது வயதிற்கு மேல்தான் வெற்றியையும் தனித்தன்மையையும் பெறுவார்கள். குணத்தால் உயர்ந்தவர் என்று சிலர் போற்றப்படுவது உண்டு. திங்கட்கிழமை தோறும் கால் மாறி நடனமாடிய நடராஜரையும் சிவகாமி அம்பாளையும் மலர்தூவி தீபமேற்றி வழிபட, மேன்மை கிடைத்து வெற்றி பெறுவார்கள்.

11ஆம் திகதியில் பிறந்து, விதி எண் 1ஆக இருப்பவர்களுக்கு 4 அல்லது 6 வருடங்கள் இடைவெளி விட்டு சிறப்பான பலன்கள் வாழ்நாள் முழுவதும் கிடைக்கப் பெறுவார் கள். பிறந்த திகதி 11, விதி எண் 2ஆக இருப்பவர்களுக்கு 20 ஆண்டுகள் வாழ்நாளில் யோகம் கிடைக்கப் பெறுவர். பிறந்த திகதி 11, விதி எண் 3ஆக இருப்பவர்களுக்கு எண் ஆதிக்கத்தைப் பொறுத்து வாழ்நாள் முழுவதும் யோகம் செய்யும். பிறந்த திகதி 11, விதி எண் 4ஆக இருப்பவர்களுக்கு 24 ஆண்டுகள் யோகம் செய்யும். பிறந்த திகதி 11, விதி எண் 5ஆக இருப்பவர்களுக்கு 23 ஆண்டுகள் நற்பலனை செய்யும். பிறந்த் திகதி 11, விதி எண் 6ஆக இருப்பவர்களுக்கு 33 ஆண்டுகள் நற்பலன் செய்யும். பிறந்த திகதி 11, விதி எண் 7ஆக இருப்பவர்களுக்கு 19 ஆண்டுகள் மிக அதிகமான நற்பலனைச் செய்யும். பிறந்த திகதி 11, விதி எண் 8ஆக உள்ளவர்களுக்கு விதி எண் ஆதிக்கம் குறைவாக இருந்தால் 12 வருடங்கள் நற்பலனைச் செய்யும். பிறந்த திகதி 11, விதி எண் 9ஆக இருப்பவர்களுக்கு குறைந்தபட்சம் 11 ஆண்டுகளும் அதிக பட்சமாக 29 ஆண்டுகளும் நற்பலனைச் செய்யும்.

**எஸ்.என்.ஹரிஜி**

குறிப்பு :- பிறந்த திகதி எண், விதி எண், தொழில் எண், நன்மை செய்யும் எண் ஆகியவற்றின் ஆதிக்கத்தைப் பொறுத்து தொழில் நிலைகள் மாறுபடும்.

(தொடரும்)

## அதிபர் பதவி வெற்றிடம்

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட யா/ சுன்னாகம் றோ.க.த.க பாடசாலை அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளது.

இதற்காக இலங்கை அதிபர் சேவை தரம் 3 ஆசிரியர் சேவை தரம் 1,2-I ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இப்பதவிக்கு வலிகாமம் கல்வி வலயத்தை சேர்ந்தவர்களே விண்ணப்பிக்க முடியும். இதற்குரிய மாதிரி விண்ணப்பப்படிவத்தை வலயக் கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு விண்ணப்பங்களை எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன்னர் வலயக்கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு வலிகாமம் வலயக் கல்வி பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

❖ ❖ ❖

தீவக வலயக்கல்விப் யா/புங்குடுதீவு மகா வித்தியாலயம், யா/ வேலணை சரஸ்வதி வித்தியாலயம் , யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் அதிபர் பதவி வெற்றிடமாக உள்ளது.

இவ்வெற்றிடங்களுக்கு தீவக்கல்வி வலயத்தில் கடமையாற்றும் *அதிபர் தரத்தினைச்* சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரி தொடர்ச்சியாகக் குறைந்தது மூன்று வருடங்களாவது சேவையாற்றக் கூடிய வயது கொண்டவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தினை வலயத்தில் பெற்று எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு தீவக வலயக்கல்விப் பணிப்பாளர் வி. இராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார். அத்துடன் ஒவ்வொரு பாடசாலைக்கும் தனித்தனி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

## சட்டவிரோத தொலைபேசி அழைப்புகள் பெறுவதை தடுக்க விசேட திட்டம்

### தொலைத்தொடர்பு ஆணைக்குழு நடவடிக்கை

(கொழும்பு)

சட்ட விரோதமான முறையில் சர்வதேச தொலைபேசி அழைப்புகளை இலங்கையில் பெற்றுக்கொள்வதை தடுப்பதற்கு விசேட வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் தொலைத்தொடர்புகள் ஒழுங்கமைப்பு ஆணைக்குழு ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிலர் கையடக்க தொலைபேசி சிம் அட்டைகளை பயன்படுத்தி சட்டவிரோதமான சர்வதேச அழைப்புகளை வரவழைத்துக் கொள்வதாக ஆணைக்குழுவின் தலைவர் அனுஷ பெல்பிட்ட தெரிவித்துள்ளார்.

தொலைபேசி நிறுவனங்களுக்கு கிடைக்க வேண்டிய கட்டணம் மற்றும் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய கட்டணம் என்பவற்றை செலுத்தாது பலர் இவ்வாறான மோசடியான முறை அழைப்புகளை பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக ஒரு நபரின்பெயரில் ஒரு தொலைத் தொடர்பு நிறுவனத்திடம் கொள்வனவு செய்யப்படும் சிம் அட்டைகளின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துவதற்கு தேவையேற்படின் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக பணிப்பாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

வரையறையின்றி ஒரே பெயரில் சிம் அட்டைகளை கொள்வனவு செய்வதை தடுக்கும் நோக்கத்துடனும் சட்டவிரோத சர்வதேச அழைப்புகளை பெற்றுக்கொள்வதை தடுக்கவும் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

(ஸ்ரீ-2)

## உதைபந்தாட்ட போட்டியின் நிரல் தயாரிப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாம வலய மட்டத்தில் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டிக்கான நிரல் தயாரிப்பு இன்று வெள்ளிக்கிழமை மதியம் ஒரு மணிக்கு யா/ மானிப்பாய் இந்துக்கல்லூரி'யில் நடைபெறவுள்ளது.

இதில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற பூாடசாலைகளை அணிப் பட்டியலுடன் சமுகமளிக்குமாறு வலிகாமம கல்வி வலய உடற்கல்விப் உதவிக் கல்விப் பணிப்பாளர் எம். நடராஜா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## உடுவில் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டி முடிபுகள்

(சுன்னாகம்)

வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டியின் முடிபுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய 12 வயது கீழ் பிரிவில் கலந்துகொண்ட பாடசாலைகளில் யா/ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் முதலாம் இடத்தையும் யா/ கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம் இரண்டாம் இடத்தையும் யா/ ஸ்கந்தவரோதயக்கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன.

மேலும் 16வயது கீழ் பிரிவில் பங்குபற்றிய பாடசாலைகளில் யா/ ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் முதலாம் இடத்தையும் யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரி இரண் டாம் இடத்தையும் யா/ கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன.

அத்துடன் 18வயது கீழ் பிரிவில் பங் கேற்ற பாடசாலைகளில் யா/ஸ்கந்தவரோ தயக் கல்லூரி முதலாம் இடத்தையும் யா/ இணுவில் மத்திய கல்லூரி இரண்டாம் இடத்தையும் யா/ இணுவில் இந்துக்கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன.

மேற்படி போட்டிகளில் வெற்றிபெற்ற முதல் மூன்று இடங்களையும் பெற்ற அணிகள் வலய மட்ப் போட்டிக்கு தெரிவாகி யுள்ளன.

இப்போட்டிகளை உடுவில் கல்விக் கோட்ட கல்விப் பணிப்பாளர் எஸ்.குபேரநாதன் மற்றும் ஆசிரிய ஆலோசகர் கே. சிவராசா ஆகியோர் நெறிப்படுத்தியதாக வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் எம். நடராஜா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2- 54)

# புலி ஆதரவு அமைப்புகள் இலங்கைக்கெதிரான பிரசாரங்களை திட்டமிட்டு முன்னெடுக்கின்றன

## அமைச்சர் பீரிஸ் குற்றச் சாட்டு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான சில அமைப்புக்கள் இலங்கைக்கு எதிரான பிரசாரங் களை ஆரம்பித்துள்ளதாக வெளி விவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் குற்றம் சுமத்தியுள்ளார்.

இலங்கைக்கான வெளிநாட்டு முதலீடுகளையும் சுற்றுலாப் பய ணிகளின் வருகையையும் தடுத்து நிறுத்தும் நோக்கில் புலி ஆதரவா ளர்கள் போலியான பிரசாரங் களை மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேற்குலக நாடுகளின் சந்தை யில் இலங்கைப் பொருட்களுக் கான சந்தை வாய்ப்பை முடக்கு வதற்கு முனைப்பு காட்டப்பட்டு வரு வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் மனித உரிமை மீறல் இடம்பெற்றதாக தெரிவிக் கும் வகையிலான சில புகைப் படங்களை அண்மையில் புலி ஆதரவு அமைப்புக்கள் வெளியிட் டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள் ளார்.

எனினும் இந்தப் புகைப்படங் களின் உண்மைத் தன்மை குறித்து சந்தேகம் நிலவுவதாகவும் இவை இலங்கையின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் நோக்கில் வெளியிடப்பட்டவை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பான போலிப் பிரசாரங்களுக்கு இந்த புகைப் படப் பிரசாரம் ஓர் சிறந்த முன்னு தார ணம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

புலி ஆதரவு அமைப்புக்கள் திட்ட மிட்ட வகையில் காலத்திற்கு காலம் இவ்வாறான பிரசாரங்களை மேற் கொண்டு வருவதாக குறிப்பிட்டுள் ளார்.

ஜீ.எஸ்.பி.சலுகைத் திட்டம் தொடர் பான பேச்சுவார்த்தைகள் நடத்தப் பட்ட காலத்திலும் இவ்வாறான போலிப் பிரசாரங்கள் முன்னெடுக் கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

(ஸ்ரீ-2)

# உள்ளூராட்சி திருத்த சட்டங்கள் இருகட்சி அரசியலை தோற்றுவிக்கும்

## கபே அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்ற திருத்தச் சட்டங்களின் மூலம் இரு கட்சி அரசியல் உருவாகும் என இலங் கையின் முன்னணி தேர்தல் கண் காணிப்பு அமைப்புக்களில் ஒன் றான கபே சுட்டிக்காட்டியுள்ளது.

அதிகாரங்களை கட்சித் தலை வர்களிடையே மையப்படுத்திய ஓர் அரசியல் முறைமை உருவாக இந்த திருத்தங்கள் வழிகோலும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சுயாதீனக் குழுத் தலைவர்களும் கட்சிச் செய லாளர்களுக்கும் கூடுதலான அதிகா ரங்கள் வழங்கப்பட உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

உறுப்பினர் வெற்றிடங்களுக் கான நியமனங்களை கட்சிச் செய லாளர்களும் சுயாதீனக் குழுத் தலை வர்களும் நியமிக்கக் கூடிய வகை யில் திருத்தங்கள் மேற்கொள் ளப்பட உள்ளதாகவும் இதனால் மக் களின் ஜனநாயக உரிமைகள் மறுக் கப்படலாம் எனவும் கபே அமைப் பின் நிறை வேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித் துள்ளார்.

பிரதான கட்சிகளின் கொள்கை களுக்கு உடன்படாத மக்களின் உரி மைகள் இந்த திருத்தங்களின் மூலம் நிராகரிக்கப்படலாம் என அவர் எச் சரிக்கை விடுத்துள்ளார்.

(ஸ்ரீ-2)

## மென்பந்து கிரிக்கெற்போட்டி

(யாழ்ப்பாணம்)

88ஆவது சர்வதேச கூட்டுற வுதின விழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களின் சமாசம் நடாத்தும் மென்பந்து கிரிக்கெற் போட்டி இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

போட்டிகளின் இறுதி நிகழ்வு கள் பி.ப.3 மணிக்கு சமாசத்தின் தலைவர் செ.இலகுநாதன் தலைமை யில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தி னராக யாழ். மாவட்ட கூட்டுறவு அபி விருத்தி உதவி ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

(ச-5)

# தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் மாவோயிஸ்டுகளுக்கு ஆதரவளிக்கின்றது

## இந்திய மத்திய அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுக்கு ஆதரவளித்து வருவதாக இந்திய மத்திய அரசாங்கம் சுட்டிக்காட்டி யுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிக ளுக்கு எதிரான தடை குறித்து விசாரணைகளின் போது அரசாங் கத் தரப்பு இதனை அறிவித்துள் ளது.

தமிழீழ விடுதலைப் புலிக ளுக்கு எதிரான தடையை நீக்குவ தன் மூலம் நாட்டின் இறை மைக்கு அச்சுறுத்தல் ஏற்படக் கூடுமென வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் மாவோயி ஜிஸ்ட் தீவிரவாதிகளுக்கு ஆதரவ ளித்து வருவதாகவும் இதனால் நாட்டுக்கு பாரிய பாதுகாப்பு அச் சுறுத்தல் காணப்படுவதாகவும் அர சாங்கம் சுட்டிக்காட்டியுள்ளதுடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆத ரவாளர் கஸ்ட்ரோ என்பவர் ஆயுதக் கடத்தலில் ஈடுபட்ட குற்றத்திற்காக கடந்த 2008 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப் பட் டுள்ளதாக இந்திய உள் விவகாரச் செயலாளர் பீ.கே.மிஸ்ரா நீதிமன் றில் தெரிவித்துள்ளார்.

கடந்த 1992 ஆம் ஆண்டு முதல் தமிழீழ விடுதலைப் புலிகள் தடை செய்யப்பட்ட இயக்கமாக அறிவிக் கப் பட்டுள்ளதுடன் ஒவ்வொரு இரண்டு ஆண்டுக்கு ஒரு தடவை யும் புலிகளின் மீதான தடை நீடிக் கப்பட்டு வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)

# இலங்கையின் பாதுகாப்பு செலவீனம் அதிகரித்துள்ளமை குறித்து சர்வதேச நாணய நிதியம் அதிருப்தி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை தற்போதைக்கு ஓரளவுக்கு அபிவிருத்திப் பாதை யில் சென்று கொண்டிருப்பது திருப் திகரமானதாக இருக்கின்ற போதி லும் வரவு செலவுத்திட்ட துண்டு விழும் தொகை மற்றும் பொதுக் கடன்களை குறைப்பதற்கும் கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென சர்வதேச நாணய நிதியம் பரிந்துரைத்துள்ளது.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியைத் துரிதப்படுத்த வேண்டுமாயின் பாதுகாப்புச் செல வினங்களைக் குறைக்க வேண்டு மென வலியுறுத்தியுள்ள நிதியத் தின் பணிப்பாளர் சபை கடந்த வரு டத்தை விட இவ்வருடம் இலங்கை யின் பாதுகாப்புச் செலவீனம் ஆறு வீதத்தால் அதிகரித்துள்ளமை குறித்தும் அதிருப்தியை வெளியிட் டுள்ளனர்.

உள்நாட்டுப் போர் நிறை வடைந்த சூழலில் அவ்வாறான பாதுகாப்புச் செலவீன அதிகரிப் பிற்கான அவசியம் குறித்தும் அவர்கள் கேள்வியெழுப்பியுள்ள னர்.

அதற்குப் பதிலாக இலங்கை யின் மீள்கட்டுமாணப் பணிகள் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி களின் அவசியம் குறித்தும் நாணய நிதியம் வலியுறுத்தியுள்ளது.

சர்வதேச நாணய நிதியமானது இலங்கையின் அபிவிருத்திக்காக தொடர்ந்தும் ஒத்துழைப்பை வழங் கத் தயாராக உள்ள போதும் எதிர் பார்க்கப்படும் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் இலங்கையும் அர்ப் பணிப்புடனான செயலாற்றலை வெளிக்காட்ட வேண் டும் என்று எதிர் பார்ப்பதாகவும் வலியுறுத்தியுள் ளது.

(ஸ்ரீ-2)

# 2010.10 22 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 0362 -அந்தியோக்கியாவின் "அப்பலோ" ஆல யம் தீப்பற்றி எரிந்தது.
- 1383 - போர்த்துக்கல் மன்னன் முதலாம் பேர் டினண்ட்டின் இறப்பின் பின்னர் ஆண் வாரிசு அற்ற நிலையில் நாட்டில் உள் நாட்டுப் போர் ஆரம்பமானது.
- 1633 - மிங்வம்சம் டச்சு கிழக்கிந்தியக் கம்பனி யுடன் சீனாவின் தெற்கு பூஜியன் கட லில் போரில் ஈடுபட்டு பெரு வெற்றி பெற்றது.
- 1692 - மந்திரம் செய்ததற்காக ஐக்கிய அமெ ரிக்காவில் வழங்கப்பட்ட கடைசி தூக்கு தண்டனை.
- 1707 - நான்கு பிரித்தானிய கடற்படைக் கப்பல்கள் சிலி தீவுகளில் மூழ்கியதில் ஆயிரக்காணக்கான மாலுமிகள் கொல் லப்பட்டனர்
- 1784 - இரசியா அலாஸ்காவின் கோடியாக் தீவில் குடியேற்றமொன்றை அமைத்தது.
- 1797 - பதிவு செய்யப்பட்ட முதலாவது பரசூட் பாய்ச்சல் அன்ட்ரே ஜக்கியுஸ் கர்னெ ரின் என்பவரால் பாரிஸ் நகருக்கு 3200 அடி மேலாக நிகழ்த்தப்பட்டது.
- 1844 - பாரிய எதிர்பார்ப்பு: வில்லியம் மில் லரின் படிப்பினைகளைப் பின்பற் றிய மில்லரிய கிறிஸ்தவர்கள் இயேசுவின் இரண்டாம் வருகையும் உலக முடிவை யும் எதிர்பார்த்திருந்தனர்.
- 1866 - பிரேசில், ஆர்ஜென்டீனா, உருகுவேக்கு எதிராக பராகுவே போரில் ஈடுபட்டது.
- 1875 - ஆர்ஜென்டீனாவுக்கான முதலாவது தொலைத்தொடர்பு இணைப்பு ஏற்படுத் தப்பட்டது.
- 1877 - ஸ்கொட்லாந்தில் பிளான்டையர் சுரங்க விபத்து, 207 சுரங்கத் தொழிலாளர்கள் இறந்தனர்.
- 1878 - செயற்கை ஒளிக்கு கீழ் நடைபெற்ற முதலாவது ரக்பி போட்டி இங்கிலாந் தின் சால்போட் நகரில் நடைபெற்றது.
- 1924 -சர்வதேச டோஸ்ட்மாஸ்டர்ஸ் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: ஜெர்மனி யின் காசெல் நகரம் மீது பிரித்தானிய விமானப்படை குண்டுவீச்சு நடத்திய தில் 10 ஆயிரம் பேர் கொல்லப்பட்டு 1 இலட்சத்து 50ஆயிரம் பேர் வீடுகளை இழந்தனர்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: ஜெர்மனி யின் ஆச்சென் நகரம் நட்பு நாடுகளி டம் வீழ்ந்தது. நட்பு நாடுகளிடம் வீழ்ந்த முதலாவது ஜெர்மன் நகரம் இதுவா கும்.
- 1946 - அல்பேனியாவின் கரைக்கு அப்பால் பிரித்தானிய போர்க் கப்பல் கண்ணி வெடியில் சிக்கியதால் 40 பிரித்தானிய கடற்படையினர் கொல்லப்பட்டனர்.
- 1949 - சோவியத் ஒன்றியம் அதன் முதலாவது அணுகுண்டை வெடிக்கச் செய்தது.
- 1953 -லாவோஸ், பிரான்சிடம் இருந்து விடு தலை அடைந்தது.
- 1956 - பாகிஸ்தான், கராச்சியில் கான்கிரீட் கூரைப் பாகம் வீழ்ந்ததில் 48 பேர் பலி.
- 1957 - வியட்நாம் போர்: ஐக்கிய அமெரிக் காவின் முதல் போர்ச் சாவு.
- 1960 - மாலி, பிரான்சிடம் இருந்து விடு தலை அடைந்தது.
- 1964 - சான்-போல் சார்ட்ரேக்கு அமைதிக் கான நோபல் பரிசு அறிவிக்கப்பட் டது,எனினும் அவர் அதனைப் பெற் றுக் கொள்ள மறுத்து விட்டார்.
- 1965 - இந்தியா-பாகிஸ்தான் இடையான இரண்டாம் காஷ்மீர் போர் முடி வுக்கு வந்தது.
- 1968 - நாசாவின் அப்பல்லோ 7 விண்கலம் பூமியை 163 தடவைகள் சுற்றிய பின் னர் அட்லாண்டிக் கடலில் பாதுகாப் பாக இறங்கியது.
- 1970 - துங்கு அப்துல் ரகுமான் மலேசியாவின் பிரதமர் பதவியில் இருந்து விலகினார்.
- 1987 - யாழ்ப்பாணம் அராலித் துறையில் இந்திய அமைதிப் படையின் உலங்கு வானூர்தி தாக்கியதில் பல பயணி கள் கொல்லப்பட்டனர்.
- 2007 - இலங்கையின் அனுராதபுரம் இலங்கை வான்படைத் தளம் மீது விடு தலைப் புலிகளின் கரும்புலிகள் நடத்திய தாக்குதலில் கரும்புலிகள் 21 பேரும், இலங்கை படையினர் 14 பேரும் கொல்லப்பட்டு பல வானூர்தி கள் அழிக்கப்பட்டன.


### பிறப்புகள்


- 1828 - ஜான்சிராணி லட்சுமிபாய், இந்திய விடுதலைப் போராட்ட வீராங் கனை (இ. 1858)
- 1919 - டோரிஸ் லெஸ்சிங், 2007 ஆம் ஆண் டுக்கான இலக்கிய நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேயர்.

### இறப்புகள்

- 1906 - பால் செசான், பிரெஞ்சு ஓவியர் (பி.1839)
- 1925 - அ.மாதவையா, தமிழக எழுத்தாளர், நாவலாசிரியர், பத்திரிகையாசிரியர் (பி. 1872)

2001 - PSLV C- 3 விண்கலத்தை இந்தியா வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.





யாழ். கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் க.பொ.த. (உயர்தரம்) தரம் 13 மாணவர்களுக்கு நடத்தப்பட்ட தமிழ்ப்பாட பயிலரங்கில் துறைசார் ஓய்வு நிலைப்பேராசிரியர் அ.சண்முகதாஸ் உரையாற்றுவதையும் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா,தமிழ்த்துறை உதவிக்கல்விப்பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் கலந்துகொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# கொலைச் சம்பவம் தொடர்பில் இலங்கைப் பெண் ஜோர்தானில் கைது

(கொழும்பு)

ஜோர்தானில் பெண்ணொருவரின் கழுத்தை நெரித்துக்கொலை செய்த பின்னர் சடலத்தை எரியூட்ட முனைந்தாகக் கூறப் படும் இலங்கைப் பணிப்பெண்ணொரு வரை அந்த நாட்டுப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த இலங்கைப் பணிப்பெண் ஜோர்தான் நாட்டைச் சேர்ந்த 52 வயதான பெண் ஒருவரைக் கொலை செய்துள்ளார் என்று சந்தேகிக்கப்படுவதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப்பணியகத்தின் தலைவர் கிங்ஸி ரணவக்க தெரிவித்தார்.

ஹொரணைப் பகுதியைச் சேர்ந்த 19 வயதான யுவதி ஒருவரே இந்தக் குற்றச்சாட்டுக்கு இலக்காகியுள்ளதுடன் இப்பெண் 4 மாதங்களுக்கு முன்னரே ஜோர்தானில் தொழில் பெற்றுச் சென்றதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன. (ஸ்ரீ-2)

# மிதவாத அரசியல் காரணமாக நாடு பிளவு பட்டுள்ளது



## ஐ.தே.க. தெரிவிப்பு

மிதவாத அரசியல் காரணமாக நாட்டு மக்கள் பிளவு பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் வடகொழும்பு கொட்டாஞ்சேனைப் பகுதிக்கான செயற்குழு க்கிளையை நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்து உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க இதனைக் குறிப் பிட்டுள்ளார்.

இன்றைய நிலையில் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளதால் மக்கள் சிரமத்தை எதிர் நோக்கியுள்ளதாகத் தெரிவித்த ரவி கருணா நாயக்க வைத்தியசாலைகளில் மருந்துப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக வும் பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக் குறை காணப்படு வதாகவும் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் தம்மை ஏமாற்றுகிறது என்பதை மக்களறிவார்களெனவும் ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ளார்.

இளைஞர்களுக்கான தொழில்களை இல்லாதொழிக்கும் யுகமே தற்போது காணப்படுவதாகவும் அதனை மாற்றி நாட்டைச் சிறந்த நிலைக்கு இட்டுச் செல்லும் தேவையே தமது கட்சிக்கு உள்ளதாகவும் ரவி கருணாநாயக்க மேலும் கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

### மீள்குடியேற்றம் நல்லிணக்கம் குறித்து

# பிரிட்டனில் தமிழ் - முஸ்லிம் புத்திஜீவிகள் விரிவாகப் பேச்சு

(கொழும்பு)

இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து பிரித்தானியாவில் வாழும் தமிழ் முஸ்லிம் புத்திஜீவிகள் ஒன்றாக சந்தித்து வட மாகாணத்தில் மேற்கொள்ளப்படுகின்ற மீள்குடியேற்றம் இரு இனங்களுக்கும் இடையிலான நல்லிணக்கம் ஆகியன குறித்து பரஸ்பரம் விரிவாகப் பேச உள்ளார்கள்.

கடந்த 1991 ஆம் ஆண்டு புலிகள் இயக்கத்தால் யாழ்ப்பாணத்தில் இருந்து விரட்டி அடிக்கப்பட்ட முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் குறித்து முஸ்லிம் புத்திஜீவிகளால் இங்கு முக்கியமாகப் பேசப்பட உள்ளது என பிரித்தானியாவில் உள்ள இலங்கை இஸ்லாமிய பேரவையின் தலைவர் எம்.நஜாச் முஹமட் தெரிவித்தார்.

தமிழ் முஸ்லிம் சமுகங்களுக்கு இடையில் பேச்சுக்கள் மூலம் புரிந்துணர்வைக் கட்டி எழுப்புகின்றமைக்கான ஒரு பாலமாக இச்சந்திப்பு அமையும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இதே நேரம் இப்பேரவையினர் இலண்டனில் உள்ள Berkeley Business Centre Conference Hall இல் எதிர்வரும் 30 ஆம் திகதி நிர்மலா ராஜசிங்கம் தலைமையிலான இலங்கை ஜனநாயக பேரவையினரைச் சந்தித்துப் பேச உள்ளனர். தமிழ் - முஸ்லிம் உறவுகள் என்கிற தலைப்பில் இங்கு கருத்துப் பகிர்வுகள் இடம்பெற உள்ளதாக தெரியவருகிறது. (ஸ்ரீ-2)

# இலங்கை அகதிகள் 87 பேர் இந்தோனேசியாவில் மீட்பு

(கொழும்பு)

இலங்கையிலிருந்து படகு மூலம் சென்ற அகதிகள் 87 பேரை பெனைடன் தீவில் வைத்து இந்தோனேசியாவின் மரிரைம் பொலிசார் மீட்டுள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட இவர்கள் எரிபொருள், உணவு மற்றும் தண்ணீர் ஆகியவற்றையும் சேமித்து வைத்திருந்ததாக கல்ப் ரைம்ஸ் செய்திச் சேவை செய்தி வெளியிட்டுள்ளது.



அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவை நோக்கிய பயணத்தினை ஆரம்பித்துள்ள இந்த அகதிகள் அடங்கிய படகு கடந்த ஒகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி தனது பயணத்தை ஆரம்பித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# நீதி மன்றத் தீர்ப்பை எதிர்த்து பேரணி நடத்த எவருக்கும் உரிமையில்லை

## பாராளுமன்றத்தில் பிரதமர் அறிவிப்பு

எமது நாட்டின் நீதிபதிகள் மிகவும் நேர்மையாகவும் நடு நிலை தவறாமலும் தமது கடமைகளைத் திறம்படச்செய்து வருகின்றபடியால் நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்யவோ பேரணி நடத்தவோ எவருக்கும் உரிமை கிடையாதென பிரதமர் டி.எம்.ஜயரட்ன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நீதித்துறையினரின் மாதாந்தச் சம்பளம் கொடுப்பனவுகள் மாதா ந்த வீட்டுக்கூலி மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் தொடர்பான சட்டமூலத்தை நேற்று பாராளு மன்றத்தில் சமர்ப்பித்து உரை யாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இங்கு பிரதமர் தொடர்ந்து உரையாற்றுகையில், இந்த நாட்டில் வாழும் சகல பிரஜைகளினதும் உரிமைகளுக்கு நீதிமன்றங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்தியுள்ளன. நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை பிழையாக விமர் சிப்பது நீதி மன்றத்தை அவமதிக்கும் செயலாகும்.

நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்துவது, பேரணி நடத்துவது போன்ற செயல்கள் வெளிநாடுகளில் இலங்கையின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் முயற்சி யாகும். எனவே அவ்வாறான செயலில் எவரும் ஈடுபட வேண்டா மென கேட்டுக்கொள்கிறேன் என்றும் பிரதமர் கோரிக்கை விடுத்தார். (ஸ்ரீ-2)

# ஹெரொயின் வர்த்தகத்தில் ஈடுபட்ட கோடீஸ்வரி கைது

ஹொரோயின் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த கோடீஸ்வரப் பெண்ணொருவர் வலான மத்திய குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொரளை மகசின் வீதியில் அமைந்துள்ள குறித்த பெண்ணின் வீட்டில் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது இவர் கைது செய்யப்பட்டதாகப் பொலிசார் குறிப்பிட்டனர்.

குறித்த பெண் நீண்டகாலமாக விநியோகத்தர்கள் மூலமாகப் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது. (ஸ்ரீ-2)

# பாகிஸ்தானில் வன்முறை நீடிப்பு; கலவரத்தில் 56 பேர் உயிரிழப்பு



(கராச்சி)

பாகிஸ்தானில் கராச்சி நகரில் நடைபெற உள்ள இடைத்தேர்தல் தொடர்பான வன்முறையில் 56 பேர் பலியானதைக் கண்டித்து அங்கு கடைகள் அடைக்கப் பட்டுள்ளன. பாகிஸ்தானின் வர்த்தக நகரமான கராச்சியில் ஒராங்கி சட்டசபை தொகுதிக்கு இடைத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஒகஸ்ட் மாதம் முட்டாஹிதா குவாமி இயக்க எம். எல்.ஏ.ராஜா ஹைதர் சுட்டு கொல்லப் பட்டார். இதைத்தொடர்ந்து இத்தொகுதிக்கு இடைத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய – பாகிஸ்தான் பிரிவினையின் போது பாகிஸ்தானில் குடியேறிய முஸ்லிம்கள் முட்டாஹிதா குவாமி கட்சியை நடத்தி வருகின்றனர். இவர்கள் இன்னும் இரண்டாம் தர குடி மக்களாகத் தான் கருதப்படுகின்றனர்.

இதே தொகுதியில் பஷ்தூன் பழங்குடி மக்களும் அதிகம் உள்ளனர். பாகிஸ்தான் மக்கள் கட்சியும் அவாமி லீக் கட்சியும் இத் தொகுதியில் போட்டி போட்டியிட்டனர். ஆனால் திடீரென அவாமி லீக் கட்சி போட்டியிலிருந்து விலகியது. பஷ்தூன் பழங்குடி ஆதரவு பெற்ற இந்த கட்சி போட்டியிலிருந்து வாபஸ் பெற்றதால் கலவரம் வெடித்தது.

கடந்த வாரம் நடந்த தேர்தல் பிரசார பேரணியின் போது ஆரம்பமாகிய வன்முறை மூன்று நாட்களாக தொடர்ந்தது. இந்த கலவரத்தில் 56 பேர் கொல்லப்பட்டனர். இந்தியாவிலிருந்து சென்று அங்கு குடியேறிய முஸ்லிம்கள் தான் இந்த சம்பவத்தில் அதிகம் பலியாகியுள்ளனர்.

கலவரத்தை கட்டுப்படுத்த தவறிய அரசை கண்டித்து நேற்று முன்தினம் கராச்சி முழுவதும் கடைகள் அடைக்கப்பட்டிருந்தன. பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தும் நேற்று முன்தினம் பல இடங்களில் நான்கு பேர் கொல்லப்பட்டனர். (ஸ்ரீ-2)


## பிரான்சில் இரண்டாவது வாரமாக தொடர்ந்து ஆர்ப்பாட்டம்

(பாரிஸ்)

பிரான்சில் 2 ஆவது வாரமாக தொடர்ந்து ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. பிரான்ஸ் நாட்டில் ஓய்வூதிய சட்டத்தில் சீர்திருத்தம் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த 2 வாரங்களாக பொதுமக்கள் பல் வேறு போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

போராட்டம் தொடர்ந்தால் பொருளாதார இழப்பு பெரிய அளவில் இருக்கும் என குறிப்பிட்டுள்ள அந்நாட்டு அதிபர் நிக்கோலஸ் சர்கோஸி பொதுமக்களை அமைதி காக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஸ்ரீ-2)



சோமாலியாவின் முதல் பாராளுமன்றக் கூட்டம் மொகாடிஸ் ஹூ நகரில் நடந்தது. ஜனாதிபதி ஷெரீப் ஷேக் அகமத் (நடுவில்) நாட்டின் புதிய பிரதமர் முகமது அப்துல்லா , சபாநாகர் ஷெரீப் ஹசன் ஆகியோரை சக உறுப்பினர்களுக்கு அறிமுகம் செய்துவைத்து பத்திரிகையாளர்களுக்கு பேட்டியளித்தார்.

## உதவியாளரை அடித்துக் கொன்ற வழக்கில் சவுதி இளவரசருக்கு 20 ஆண்டுகள் சிறை

(லண்டன்)

உதவியாளரை அடித்துக் கொன்ற வழக்கில் சவுதி இளவரசருக்கு லண்டன் நீதிமன்றம் 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை அளித்துள்ளது.

சவுதி அரேபிய இளவரசர் சையது அப்துல்லா பின் நசீர் அல் சையது வயது 34 இவர் சவுதி அரேபிய மன்னரின் மகள் வழி பேரன் ஆவார். கடந்த பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி லண்டனில் ஒரு நட்சத்திர விடுதியில் அப்துல்லா தங்கி இருந்தார். அப்போது தன்னுடைய உதவியாளரை அவர் அடித்து சித்திரவதை செய்து கொலை செய்தார்.

இளவரசர் அப்துல்லா ஓரின சேர்க்கையில் ஈடுபடுவர் என்பதும் தனது உதவியாளர் அதற்கு உடன் படாததால் அவரை கொலை செய்ததாகவும் பொலிஸாரின் விசாரணையில் தெரிய வந்தது. அவரை பொலிஸார் கைது செய்து வழக்கு தொடர்ந்தனர். இதற்கிடையே சவுதி அரேபிய அரச குடும்பத்தின் செல்வாக்கை பயன்படுத்தி அப்துல்லாவை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஆனால், இங்கிலாந்து வெளியுறவுத் துறை விதிப்படி அப்துல்லா மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். மேலும் இது போன்று அப்துல்லா நடந்து கொள்வது முதல் முறை இல்லை என்றும் ஏற்கனவே ஒருமுறை அதிகமான மது போதையில் ஒருவரை தாக்கியுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

தற்போது இந்தக் கொலை தொடர்பாக சவுதி இளவரசர் அப்துல்லாவுக்கு 20 ஆண்டுகள் சிறை தண்டணை விதித்து லண்டன் நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது. இதுபற்றி நீதிபதி டேவட் பீன் கூறுகையில்,

கொலை வழக்கில் இளவரசர் ஒருவர் குற்றவாளியாக இருப்பது வழக்கத்திற்கு மாறாக உள்ளது. யார் குற்றம் செய்து இருந்தாலும் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று தெரிவித்தார்.

சவுதி அரேபியாவில் ஓரின சேர்க்கை என்பது மரண தண்டனைக்கான குற்றமாகும். இளவரசர் சையது அப்துல்லா சவுதி அரேபியா சென்றால் அவருக்கு மரண தண்டனை விதிக்க வாய்ப்பு உள்ளது. எனவே தண்டனை காலம் முடிந்து சிறையில் இருந்து அவர் விடுதலையாகும் போது இங்கிலாந்திலேயே தங்க அடைக்கலம் கேட்பார் என்று தெரிகிறது. (ஸ்ரீ-2)

## அணுகுண்டு சோதனை நடத்த வடகொரியா மீண்டும் முயற்சி

(சியோல்)



தென்கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு வடகொரியா அச்சுறுத்தலாக இருந்து வருகிறது. இத்துடன் வடகொரியா அணுகுண்டு மற்றும் ஏவுகணை போன்ற ஆயுதங்களை குவித்து வருகிறது. இதற்கு அமெரிக்கா கடும் எதிர்ப்பு தெரிவித்தது.ஆனாலும் அதைப் பொருட்படுத்தாமல் மீண்டும் ஆயுதங்களை குவிக்கிறது.

வடகொரியா கடந்த 2006 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் முறையாக அணுகுண்டு சோதனை நடத்தியது. அடுத்து 2009 ஆம் ஆண்டு மேலும் அணுகுண்டு சோதனை நடத்தியது.இதனால் ஐ.நா.சபை வடகொரியாவுக்கு பல்வேறு பொருளாதார தடைகளை விதித்தது. அமெரிக்காவும் பல்வேறு தடைகளை விதித்தது. இந்த நிலையில் மீண்டும் வடகொரியா அணுகுண்டு சோதனைக்கு தயாராகி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

வடகொரியாவில் உள்ள புன்கயோரி என்ற இடத்தில் அணுகுண்டுகளை வைத்து உள்ளது.இந்த இடத்தில் சமீப காலமாக வாகன நடமாட்டம் அதிகமாக இருக்கிறது. அதை அமெரிக்க செயற்கைக்கோள் படம் பிடித்துள்ளது. அணுகுண்டு சோதனை நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்யத்தான் அதிக அளவில் வாகனங்கள் நடமாட்டம் இருப்பதாக கூறப்படுகிறது. எனவே எந்த நேரத்திலும் அணுகுண்டு சோதனை நடக்கலாம் என தென்கொரியப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சமீபத்தில் தென்கொரியாவின் போர்க்கப்பலை வடகொரியா ஏவுகணை வீசி தகர்த்தது. இதனால் இரு நாடுகளுக்கும் இடையே போர் பதற்றம் நிலவியது. இந்த நிலையில் வடகொரியா அணுகுண்டு சோதனை நடத்த இருப்பது மேலும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. (ஸ்ரீ-2)

## நோபல் அறிஞரை விடுவிக்குமாறு அமெரிக்கா வற்புறுத்தல்

(கொங்கொங்)



நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ள சீனாவைச் சேர்ந்த லியு ஜியா போவை சிறையிலிருந்து விடுவிக்க வேண்டும் என அமெரிக்க அட்டர்னி ஜெனரல் தெரிவித் துள்ளார்.

சீனாவில் ஜனநாயகம் கோரி போராடி வருபவர் லியு ஜியா போ (வயது 54) பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியரான இவர் சீனாவில் பலகட்சி தேர்தல் முறையை வற்புறுத்தி பேராட்டம் நடத்தினார்.தேசவிரோத நடவடிக்கையில் இவர் ஈடுபட்டதாகக் கூறி கடந்த ஆண்டு இவருக்கு 11 ஆண்டுகால சிறை தண்டனை விதிக்கப்பட்டது.


மனித உரிமைக்காக போராடிய இவரது சேவையை பாராட்டி இந்த ஆண்டுக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து இவரை விடுவிக்கும் படி இவரது மனைவி கோரினார். இதனால் இவரது மனைவியும் வீட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் அமெரிக்க அட்டர்னி ஜெனரல் எரிக் ஹோல்டர் இரண்டு நாள் பயணமாக சீனா வந்துள்ளார். கொங்கொங்கில் அவர் இது குறித்து குறிப்பிடுகையில் நோபல் பரிசு பெற்ற லியு ஜியாபோவை விடுதலை செய்ய வேண்டும். சீன தலைவர்களைச் சந்தித்து இந்தக் கருத்தை வற்புறுத்துவேன் என்றார். (ஸ்ரீ-2)



தாய்லாந்தில் ஏற்பட்ட கனமழையால் அயூத்தையா மாகாணத்தில் உள்ள புகழ்பெற்ற புத்த கோயில் வெள்ளத்தால் சூழ்ந்துள்ளது. புத்த துறவி ஒருவர் கோயிலுக்குள் சிறிய படகு மூலம் செல்கிறார்.

# தமிழீழ அரசாங்கத்தை அமெரிக்கா எதிர்க்கவில்லை

## வைகோ தெரிவிப்பு



தமிழீழ அரசாங்கத்தை அமெரிக்கா எதிர்க்கவில்லை என மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் வைகோ கூறியுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை குறித்து சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் தொடர்பான விசாரணைக்குழுவொன்றின் முன் சாட்சியமளிக்கையிலேயே வைகோ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, ஐரோப்பாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் தடைசெய்யப்பட்டுள்ள போதிலும் அமெரிக்காவின் பிலடெல்பியா மாநிலத்தில் தமிழீழ அரசாங்கம் அமைக்கப்பட்டபோது அமெரிக்க அரசாங்கம் அதை எதிர்க்கவில்லை என வைகோ கூறினார்.

இந்திய உள்துறை அமைச்சின் உள்நாட்டு பாதுகாப்புப் பணிப்பாளர் பி.கே.மிஸ்ரா தனது வாதத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் சார்பான நடத்தை தேசிய இறைமைக்கு மாத்திரமல்லாமல் உள்நாட்டு பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக உள்ளதாகக் கூறினார். (ஸ்ரீ-2)

# சென்னைக்கு சாராயம் கடத்திய இலங்கையர் இருவர் கைதாகினர்

கொழும்பில் இருந்து இந்தியாவின் சென்னை மாநகரத்துக்கு விமானம் மூலம் வெளிநாட்டுச் சாராயங்களைக் கடத்திய திருகோணமலையைச் சேர்ந்த தமிழர்கள் இருவர் நேற்று முன்தினம் சென்னை விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்கவில் இருந்து புறப்பட்டிருந்த விமானத்தில் கடத்தல் பொருட்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன என்று சென்னை புறநகர்ப் பொலிஸ் ஆணையாளருக்கு இரகசியத்தகவல் ஒன்று கிடைத்துள்ளதையடுத்து அவரது உத்தரவின் பேரில் விசேட பொலிஸ் குழு ஒன்று விமான நிலையத்தில் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டது. விமானத்தில் இருந்து இறங்கி வெளியே வந்து கொண்டிருந்த நடுத்தர வயதினர் இருவரை இக்குழுவினர் சந்தேகத்தின் பேரில் விசாரித்தனர்.

இவர்களின் உடைமைகளை சோதனை செய்து பார்த்தபோது 48 போத்தல்கள் வெளிநாட்டுச் சாராயத்தை சட்டவிரோதமான முறையில் கொண்டு வந்திருக்கின்றனர் என்று கண்டுபிடித்தனர். இவற்றின் பெறுமதி இந்திய ரூபாயில் ஒரு இலட்சத்துக்கும் அதிகம் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இவர்களைக் கைது செய்து தொடர்ந்து விசாரித்தமையில் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த பவளகாந்தன் (வயது -45) மற்றும் நல்லரசு (வயது-43) ஆகிய இருவரும் சென்னை பாரிமுனையில் உள்ள மதுபானக் கடைகளுக்கு கொழும்பில் இருந்து மது பானங்களைக் கடத்தி வந்து விற்பனை செய்து வருகின்ற கும்பலைச் சேர்ந்தவர்கள் என்று ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# பூமி வெப்பமடைவதால் பாதிப்பை சந்திக்கக்கூடிய நாடுகளின் பட்டியலில் இந்தியாவுக்கு 2ஆவது இடம்

(ஒஸ்லோ)

பூமி வெப்பமடைவது உட்பட காலநிலை மாற்றங்களால் அடுத்த 30 ஆண்டுகளில் அதிக பாதிப்பை சந்திக்கக்கூடிய நாடுகள் பட்டியலில் இந்தியா 2ஆவது இடத்தில் உள்ளது. இங்கிலாந்தைச் சேர்ந்த ஆலோசனை நிறுவனமான மேப்பிள்கிராப்ட். பூமி வெப்பமயமாவதால் பாதிப்பு ஏற்படக் கூடிய 171 நாடுகளின் பட்டியலை வெளியிட்டுள்ளது.

வறட்சி, புயல், நிலச்சரிவுகள் போன்ற இயற்கை சீரழிவுகள் மற்றும் வறுமை, மக்கள் தொகை, உள்நாட்டுக் கலவரம், வேளாண்மை சார்பு, எதையும் சந்திக்கும் திறன் ஆகியவற்றில் நாடுகளின் செயல்பாடு அடிப்படையில் இந்தப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, தாழ்வான கடலோரப் பகுதிகள் அடிக்கடி புயல், வெள்ளப் பாதிப்பு,வறுமை ஆகியவற்றின் அடிப்படையில் காலநிலை மாற்றத்தால் அதிக ஆபத்தை சந்திக்கும் நாடாக வங்ளாதேஷ் உள்ளது.மக்கள் தொகை 110 கோடியைத் தாண்டியுள்ள இந்தியாவுக்கு 2 ஆவது இடமும். மடகாஸ்கருக்கு 3ஆவது இடமும், நேபாளம், மொசாம்பிக், பிலிப்பைன்ஸ், ஹெயிட்டி, ஆப்கானிஸ்தான், சிம்பாப்வே, மியான்மர்,வியட்நாம் ஆகியவை அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளன. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் 13 ஆவது இடத்தில் உள்ளது.

பட்டியலில் கடைசி இடத்தில் நோர்வே இருக்கிறது.அங்கு பூமி வெப்பமய பாதிப்பு மிகக் குறைவாக இருக்கும். பின்லாந்து, ஐஸ்லாந்து, அயர்லாந்து ,சுவீடன்,டென்மார்க் ஆகிய ஐரோப்பிய பணக்கார நாடுகளும் பட்டியலின் கடைசி இடங்களில் இடம் பிடித்துள்ளன. (ஸ்ரீ)



## பாரதச் செய்திகள்

# காஷ்மீரில் பயங்கரவாதிகளுடன் துப்பாக்கிச் சண்டை தொடர்கிறது

(ஸ்ரீநகர்)

காஷ்மீர் மாநிலம் ஸ்ரீநகர் அருகே மலூரா கிராமத்தில் பதுங்கியுள்ள பயங்கரவாதிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே தொடர்ந்து துப்பாக்கிச் சண்டை நடைபெற்று வருகிறது.

இறுதிக் கட்ட தாக்குதல் நடத்துவதற்காக அங்குள்ள பொதுமக்கள் அனைவரையும் பாதுகாப்புப் படையினர் வெளியேற்றி வருகின்றனர்.

ஜெய்ஷ்ஃஇ-முகமது இயக்கத்தைச் சேர்ந்த பயங்கரவாதிகள் அக்கிராமத்தில் பதுங்கியிருப்பதாக தகவல் கிடைத்துள்ளது என மாநில காவல்துறைத் தலைவர் குல்தீப் ஹோடா தெரிவித்தார்.

ஒரு வீட்டில் பதுங்கியிருந்த ஒரு பயங்கரவாதி வெளியே வந்துபொலிஸாரை நோக்கி சரமாரியாக துப்பாக்கியால் சுட்டுவிட்டு அருகில் இருந்த மற்றொரு வீட்டுக்கு சென்றுவிட்டதாக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.


எனவே பாதுகாப்புப் படையினர் அந்த 2 வீடுகளையும் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.

பயங்கரவாதிகளின் இருப்பிடத்தைக் கண்டறிய அக் கிராமத்துக்கு மேலே இராணுவ ஹெலிகொப்டரும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இறுதிக் கட்ட நடவடிக்கை எடுக்க பாதுகாப்புப் படையினர் முயற்சித்து வுருகின்றனர். இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# ஆயிரம் அ.தி.மு.கவினர் வந்தாலும் எம்மை யாராலும் வெல்ல முடியாது

## தமிழக முதல்வர் தெரிவிப்பு



(சென்னை)

“உங்களுக்குள் ஒற்றுமைஏற்பட்டால், ஆயிரம் அ.தி.மு.க.க்கள் வந்தாலும் எம்மை யாரும் வெல்ல முடியாது” என முதல்வர் கருணாநிதி கூறினார்.

இராமநாதபுரம் மாவட்ட தி.மு.க நிர்வாகிகளுடனான கலந்துரையாடல் கூட்டம், சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று முன்தினம் நடந்தது. கூட்டத்தில், முதல்வர் கருணாநிதி உரையாற்றுகையில் ,

இங்கு விவாதிக்கப்பட்ட கருத்துக்களை நீங்களே சிந்தித்துப் பார்த்து ஒருமுடிவுக்கு வருவீர்கள் என நம்புகிறேன். இந்த ஆட்சியின் சாதனைகளையெல்லாம் வியந்து போற்றினீர்கள். கட்சித்தலைவர்களின் ஆற்றலைப் பாராட்டினீர்கள். ஜனநாயகத்தில் யாரும், எந்தப் பொருள் பற்றியும் பேசலாம். எவ்வளவு உயர்ந்த இடத்தில் இருப்பவர்களைப் பற்றியும்குறைகூறலாம். குற்றம் சாட்டலாம். அதுதான் ஜனநாயகம். அந்த ஜனநாயகத்தை இன்று நேற்றல்ல அண்ணா காலத்திலிருந்தே பின்பற்றி வருகிறோம்.

அப்படிப்பட்ட ஜனநாயத்தை உருவாக்கிய இந்த இயக்கத்திற்கு எத்தனையோ சோதனைகள் வந்ததுண்டு. அதையெல்லாம் தாண்டி, இன்று வெற்றிகளைக் குவித்து வருகிறது திராவிட இயக்கம். திராவிட இயக்கம் தமிழகத்தில் மாத்திரமல்ல, வேறு மாநிலங்களுக்கும் பரவவேண்டும். நாம் ஆட்சியில் இருக்கின்ற இந்தக் காலகட்டத்தில் சட்டசபை தேர்தலில் வெற்றிபெற வேண்டியது மிக மிக முக்கியம்.

நமது வெற்றிக்கு தடை போட அ.தி.மு.க. பகீரதப் பிரயத்தனம் செய்கிறது. அதற்கு இடம் தரக்கூடாது. இங்கே சிலர், தலைவரிடத்திலே மனுக்கள் கொடுத்தோம். அமைச்சர்களிடத்திலே புகார்கள் கூறினோம். அவை கவனிக்கப்படவில்லை. அமைச்சரிடத்திலே மாவட்டத்தில் நடைபெறும் சில காரியங்களைப் பற்றிச் தெரிவித்தோம். அதை அவர் அலட்சியப்படுத்திவிட்டார் என குறைகளைச் கூறினார்கள். அதைத் தவிர வேறு பெரிய குறை இல்லை. ஒரேயொரு குறை எனக்கிருக்கிறது.

அது உங்களுக்குள்ளே இன்னும் முழுமையான ஒற்றுமை வரவேண்டும் என்பது தான். அந்த ஒற்றுமை வந்துவிட்டால் , ஒரு அ.தி.மு.க அல்ல ஆயிரம் அ.தி.மு.கக்கள் வந்தாலும் எம்மை யாரும் வெல்லமுடியாது. இங்கே பேசிய உங்களின் மாறுபட்ட விடயங்கள் இருந்தால், அவற்றையெல்லாம் இங்கேயே மறந்து, வீட்டுக்கு சென்றதும், நண்பர்களாக தோழர்களாக தி.மு.க.வினராக சேர்ந்திருக்க வேண்டும் என்று முதல்வர் பேசினார். (ஸ்ரீ-2)

# இலங்கை சென்று படகுகளை மீட்டு வந்த மீட்புக் குழுவினர்

(இராமேஸ்வரம்)

கடலில் மூழ்கிய தமிழக மீனவர்கள் படகுகளை, இலங்கை கடற்படை கொண்டு சென்ற நிலையில், அதை இராமேஸ்வரம் மீட்புக் குழுவினர் இலங்கை சென்று மீட்டு வந்தனர்.

இராமேஸ்வரம் துறைமுகத்திலிருந்து கடந்த ஜுலை 17 ஆம் திகதி மீன்பிடிக்கச் சென்ற செல்லத்துரை படகின் மீது இலங்கை மீனவர்கள் வெடிகுண்டு வீசியதில், படகு மூழ்கியது. மூழ்கிய படகை மீட்க,ஜுலை 22ஆம் திகதி இராமேஸ்வரத்திலிருந்து சென்ற படகுகளின் மீதும், இலங்கை மீனவர்கள் பெற்றோல் குண்டுகளை வீசியதில், பால்துரை என்பவரின் படகும் மூழ்கியது. இதனிடையே மூழ்கிய படகுகளை இலங்கைக் கடற்படையினர் மீட்டு தலைமன்னார் கடற்படைமுகாமிற்கு கொண்டு சென்றனர். இந்தப் படகுகளை இராமேஸ்வரம் கொண்டு வர 17 மீனவர்களைக் கொண்ட குழு கடந்த 14 இல் தலைமன்னார் சென்றது. அங்கு சென்ற மீனவர்கள் படகுகளைப் இராமேஸ்வரம் கொண்டு வந்தனர்.

படகை பார்வையிட்ட இந்தியக் கடலோரக் காவல் படையினர், சோதனைக் குப் பின் மீனவர்களை விசாரித்தனர். இலங்கையில் ஐந்து நாட்கள் தங்கிய மீட்புக் குழுவினர், பகலில் தலைமன்னார் கடற்கரையிலும், இரவில் மீன்பிடிபடகிலும் தங்கி சேதமடைந்த படகை சீர்செய்து இராமேஸ் வரம் கொண்டு வந்ததாக இராமேஸ்வரம் திரும்பிய மீனவர்கள் தெரிவித்தனர். (ஸ்ரீ-2)

கெட்ட உள் நோக்கத்தோடு கூறப்படும் ஓர் உண்மை, ஆயிரம் பொய்களைவிட மோசமானதாகும். ~ சார்லஸ் டூபி பிளேக்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# தமிழ்க்கட்சிகளின் ஒற்றுமையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வா?

தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒற்றுமைப்பட்டால் மட்டுமே இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இந்தக் கருத்து இரண்டு வகையில் வேதனை தருவதாகும்.

ஒன்று, தமிழர்களை ஒற்றுமைப்படுமாறு போரில் வெற்றிபெற்ற இந்த நாட்டின் ஜனாதிபதி கூறுவது.

மற்றையது, தமிழ்க்கட்சிகள் ஒருபோதும் ஒற்றுமைப்பட மாட்டாது என்பதை அவர் நிறுத்திட்டமாக அறிந்து வைத்திருப்பது.

இந்த இரண்டு விடயங்களும் தமிழினத்திற்கு வேதனை தருவது மட்டுமன்றி தமிழினத்தின் பலவீனமும் அவைதான் என்பதை நாம் நன்கு உணரவேண்டும்.

தமிழ்க் கட்சிகள் ஒற்றுமைப்பட்டால் மட்டுமே இனப்பிரச்சினைக்கான தீர்வு சாத்தியம் என்ற கருத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறும் போது மறுபக்கத்திலிருந்து எழக்கூடிய கேள்வி சிங்களக்கட்சிகள் ஒற்றுமைப்பட்டுள்ளனவா? என்பதாக இருக்கும்.

ஆம், சிங்கள அரசியல் கட்சிகளின் ஒற்றுமை என்பது நாடு– தேசம்– பௌத்தம்– சங்கம் என்ற தளங்களில் மிகவும் வலிமையாக இருப்பதை நாம் காணமுடியும்.

வன்னி யுத்தம் நடந்தபோது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு பலமாக இருந்தவர்கள் எதிர்க்கட்சிகள் என்பதை எவரும் மறுக்கமுடியாது.

விடுதலைப்புலிகளைத் தோற்கடிப்பதில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனது பரிபூரண ஒத்துழைப்பை வழங்கினார்.

அவரது கட்சிஉறுப்பினர்களை ஆளும்தரப்புதன் பக்கம் இழுத்துக்கொண்ட போதிலும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும், ரணில் விக்கிரமசிங்கவும் பலதடவைகள் சந்தித்துப் பேசினர். இந்தப் பேச்சுக்கள் ஒவ்வொன்றிலும் விடுதலைப் புலிகள் ஒழிக்கப்படவேண்டும். தமிழினத்தின் விடுதலைப் போராட்டம் அடியோடு அழிக்கப்படவேண்டும் எனச் சபதம் எடுக்கப்பட்டது.

ரணில் விக்கிரமசிங்கவின் ஆளுமையற்ற தலைமை என்பதெல்லாம் ஐக்கிய தேசியக்கட்சி சார்பான கூற்றே அன்றி, இந்த நாட்டின் தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தை முறியடிப்பதில் கூறப்பட்ட கருத்தன்று.

இந்திய தேசத்தில் கார்க்கில் யுத்தம் நடைபெற்றபோது அப்போது ஆட்சியிலிருந்த பிரதமர் வாஜ்பாஜ் தலைமையிலான பாரதிய ஜனதாக் கட்சிக்கு காங்கிரஸ் உள்ளிட்ட பாரத தேசத்தின் அனைத்து எதிர்க்கட்சிகளும் வழங்கிய ஆதரவு இருக்கிறதே, அதற்கு ஒரு படி மேலாக, வன்னி யுத்தத்தின் போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்கு சிங்கள எதிர்க்கட்சிகள் ஆதரவு வழங்கின. இந்த உண்மைகளை எல்லாம் தமிழினத்தின் அரசியல் தலைமைகள் ஒருபோதும் உணர்ந்துகொள்ளப் போவதில்லை. இந்த உண்மை தெரிந்தமையினாலேயே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமிழ்க்கட்சிகள் ஒன்றுபட்டால் மட்டுமே இனப்பிரச்சினைக்கு தீர்வு சாத்தியமாகும் எனக்கூறியுள்ளார்.

தமிழ்க்கட்சிகள் ஒற்றுமைப்பட்டால் மட்டுமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று அவர் கூறுவாராயின்,

இந்தப் பிரபஞ்சம் இருக்கும் காலம் வரை இனப்பிரச்சினைக்கு தீர்வு என்பதே சாத்தியப்படமாட்டா.

ஏன் எனில் தமிழ்க்கட்சிகள் ஒருபோதும் ஒற்றுமைப்படப்போவதில்லை. என்ன செய்வது? எங்கள் சாபம் அப்படியாயிற்று.

# பேக்கரி உற்பத்திகளுக்கு அரிசி மா சேர்க்கப்பட வேண்டும்

## விவசாயத் திணைக்களம் அறிவிப்பு

பேக்கரி உற்பத்திகளுக்காக 10 வீதமான அரிசி மாவைச் சேர்க்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அரிசிமாவை ஊக்குவிப்பதற்கான தேசிய குழுக்கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றபோது இத்தீர்மானம் எடுக்கப் பட்ட தாகத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் கே.பி. குணரத்ன குறிப்பிட்டார்.

குறிப்பாக பேக்கரி உற்பத்திகளில் 225 கிராம் எடை கொண்ட. அரிசிமா சேர்க்கப்பட்ட அரை இறாத்தல் பாணை அறிமுகப்படுத்துவதற்கு எண்ணியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதன்மூலம் பாண் நுகர்வை அதிகரிக்கும் நோக்கத் துடன் பேக்கரி உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# மக்கள் நலன்புரி மன்ற பரிசளிப்பு விழா

(சுன்னாகம்)

சுன்னாகம் மக்கள் நலன்புரி மன்றம் நடத்தும் வருடாந்தப் பரிசளிப்பு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய மண்டபத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக அருட்பணி ம.றெக்ஸ் சவுந்தர அடிகளாரும் சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்களும் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (சு)

# மீட்டல் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணம் பிராந்திய நிலையத்தில் அடிப்படைச் சிங்கள சான்றிதழ் கற்கை நெறியின் மீட்டல் பரீட்சை எதிர்வரும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12.30 வரை யாழ்.பிராந்திய நிலையத்தில் நடைபெறுமென இணைப்பாளர் அறிவித்துள்ளார். (சு)

# வெறிநாய்களுக்கான மருந்து என்னிடம் மட்டுமே உள்ளது

## பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களைச் சுற்றிலும் இருக்கும் வெறி நாய்கள் போன்றோருக்குக் கொடுப்பதற்கான மருந்து தன்னிடம் இருப்பதாகவும் அவர்களை வெறிக்குள்ளாக்கு வோருக்குக் கொடுப்பதற்கான ஊசி மருந்து பற்றியும் தான் அறிந்து வைத்திருப்பதுடன் அவர்களைத் தூண்டிவிடுவோருக்கான மருந்தை தான் கைவசம் வைத்திருப்பதாகவும் பிரதியமைச்சர் மேர்வின் சில்வா கூறியுள்ளார்.

நேற்று காலை களனி – கிரிபத்கொடையில் ஆயுர்வேத சிகிச்சை நிலையமொன்றைத் திறந்து வைத்து உரையாற்று கையிலேயே பிரதியமைச்சர் மேற்கண்டவாறு குறிப் பிட்டுள்ளார்.

பல்வேறு நோய்களால் பீடிக்கப்பட்டடிருப்பவர்களுக்கு நோயின் தன்மையைப் பொறுத்து தலைக்கும் வயிற்றுக்கும் உடம்புக்கும் என மருந்து கொடுப்பதைப் போலவே எனக்கும் கொடுக்கத் தெரியும்.

அதே போலி வெறிநாய்களுக்கு கொடுக்க வேண்டிய மருந்து என்னவென்பது குறித்து எனக்கு மட்டுமே தெரியும்.தேவையானவர்கள் களனிக்கு வாருங்கள் போதாதற்கு களனி கங்கையும் இருக்கின்றது என்றும் தெரிவித்துள்ளார்.

அதற்கு மேலதிகமாக களனி பல்கலைக்கழகத்தை பாதுகாப்பதற்கு துணைவேந்தர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்த பிரதியமைச்சர் அதற்கான ஆதரவை வழங்க தான் என்றும் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## தேங்காய் உடைக்கும் பழக்கம் எப்படி வந்தது?

கோயிலில் தெய்வத்திற்கு முன் வாயிலில் தேங்காய் உடைக்கும் பழக்கம் எப்படி வந்தது? இதற்கு ஒரு கதையே உண்டு.

ஒருமுறை விநாயகர் மகோற்கடராக அவதரித்தார். அவரை காசிபரின் ஆசிரமத்தில் இருந்து காசி மன்னன் தன் ஆசிரமத்திற்கு அழைத்துச்சென்றார். செல்லும் வழியில் ஓர் அசுரன் திடீரென மலைபோல உருவெடுத்து அரண்மனையின் முன் வழியை மறைத்து நின்றான். அதைக் கண்ட விநாயகர், பூர்ணக்கலசங்களில் உள்ள தேங்காய்களை எல்லாம் எல்லோரும் எடுத்து அந்த அசுர மலை மீது வீசி உடைக்கும் படி கூறி அந்த விக்கினத்தை அகற்றினார். அதைத்தொடர்ந்து தேங்காய் உடைக்கும் பழக்கம் பின்பற்றப்பட்டு வருகிறது.

# வெள்ளி நற்சிந்தனை 145

## பக்தியின் மொழி தமிழ்

எமது கண்முன்னே தோன்றுவனவற்றையெல்லாம் உண்மையானவை என்று கொள்வதற்கில்லை. இறைவன் படைப்பில் உள்ள எல்லாவற்றையும் இன்று விஞ்ஞான ரீதியாக ஆய்வு செய்யும் போக்குத் தோன்றியுள்ளது. பக்தி நிலையில் நின்று எல்லாம் இறைவன் செயல் ஏற்கும் நிலை மாற்றமடைந்துள்ளது. விஞ்ஞான அறிவு கொண்டு மெய்ஞ்ஞானத்தை ஆய்வு செய்யும் போக்கும் தோன்றியுள்ளது. ஆனால் நாயன்மார்களின் வாழ்வியலனுபவம் பக்தி எனும் உணர்வு நிலையின் உச்சத்தில் இறைவன் பற்றிய அனுபவத்தை வெளிப்படுத்தியுள்ளது எண்பது வயதுவரை வாழ்ந்த அப்பர் தனது பக்தி அனுபவத்தைப் பாடும்போது அவரது மெய்ஞ்ஞானத்தையும் உணரமுடிகிறது.

இந்த அனுபவத்தை ஒரு செயற்பாட்டின் மூலம் அப்பர் தனது பாடலிலே விளக்கியுள்ளார். வானை முட்டும் அளவிற்கு அடுக்கப்பட்ட விறகு. அந்த விறகின் வெவ்விய சிவந்த நெருப்பினின்றும் வெளிப்படுகின்றதை உண்ண உள்ளே புகுந்தால் ஒன்றும் இல்லையாம். இதனை உண்மையென உணரும் மெய்யறிவு தேவை. இதேபோல இந்த உலகிலே பண்ணுகின்ற பாவங்களையெல்லாம் கிட்ட நின்று அறுக்கும் வல்லமையுடையது இறைவன் நாமமாகிய நமச்சிவாயவே என்று அப்பர் விளக்கியுள்ளார். இது அவரது வாழ்வில் அவர் பெற்ற அனுபவம். உண்மையான சைவ வாழ்வியலை விட்டுச் சமண சமய வாழ்வியலிலே பலகாலம் அவர் ஈடுபட்டிருந்தார். அவர் செய்த பாவச்செயல் அது. ஆனால் அப்பாவச் செயலின் விளைவால் அவர் மேலும் துன்பம் அனுபவியாமல் காப்பாற்றியது இறைவன் திருநாமமாகிய நமச்சிவாயவே என்கிறார்.

அப்பர் இந்த அனுபவத்தை 'நண்ணி நின்றறுப்பது நமச்சிவாயவே' என்று குறிப்பிட்டுள்ளார். 'நண்ணுதல்' என்பது அருகாமையைக் குறிக்கும். எம்மோடு என்றும் அருகில் இருக்கும் இறையருளை நாம் உணர்வதற்கு 'நமச்சிவாய' என்ற நாமத்தை உச்சரிக்க வேண்டும். அதன் மீது அசையாத நம்பிக்கை கொள்ளவேண்டும். 'உலகிலே பயின்ற பாவம்' என அப்பர் நாம் செய்கின்ற பாவங்களைக் குறிப்பிட்டுள்ளார். 'பயிலுதல்' என்பது தொடர்ச்சியாகச் செய்தல் எனப்பொருள் தருவது. சில விடயங்கள் பாவமானவை என்று நாம் உணர்ந்திருக்கும் நிலையிலும் அவற்றை மீட்டும் மீட்டும் செய்வது தவிர்க்க முடியாததாக உள்ளது. எடுத்துக் காட்டாகக் கூறின் பொய்பேசுவது ஒரு பாவமான செயற்பாடு என்பதை நன்குணர்ந்த போதும் அதையே பேசும் இயல்பு மனிதருக்குண்டு. இத்தகைய மெய்யறிவற்ற நிலையைப் போக்குவதற்கு நமச்சிவாய என்ற நாமத்தை நாம் மறவாதிருக்க வேண்டும்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

உலக வாழ்க்கையில் ஒன்றி நிற்போருக்கு இறைவன் பற்றிய சிந்தனையை ஏற்படுத்துவதற்குச் சில பயிற்சிகள் தேவை. அப்பர் சைவசமயம் பற்றிய தெளிவைப் புறச் சமயத்திலிருந்த போது நோயுற்ற போது உணர்ந்து கொண்டார். சமணர்கள் அவரைக் கைவிட்ட போதுதான் தான் பண்ணிய பாவச் செயலை நன்குணர்ந்து கொண்டார். இறைவன் தன்னை அத்துன்பத்திலிருந்து காப்பாற்றியதைத் தெளிவாகக் கண்டார். அவருடைய கோயில் தொண்டுப்பணி செய்யும் போதெல்லாம் 'நமச்சிவாய' என்ற திருநாமத்தை உச்சரித்தபடியே செய்தார். இறைவனை மறவாதிருக்க அதுவே ஏற்ற வழியெனக் கண்டு எமக்கும் உணர்த்தியுள்ளார்.

**விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்**
**உண்ணிய புகிலவை யொன்று மில்லையாம்**
**பண்ணிய உலகினிற் பயின்ற பாவத்தை**
**நண்ணி நின் றறுப்பது நமச்சி வாயவே**





மானிப்பாய் மருதடி விநர்யகர் ஆலயத்தின் புனர்நிர்மாண வேலைகள் இடம்பெற்று வருகின்றது. இவ் வேலைகளுக்கென இந்தியாவின் மாமல்ல புரத்தில் இருந்து செதுக்கல் வேலைகள் செய்யப்பட்ட கற்கள்,அலங்கரிப்பு கற்கள்,பெரும் தூண்கள் என்பன 6 கொள்கலன்கள் மூலம் கடந்த செவ்வாய்க் கிழமை ஆலயத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. (படங்கள்:-விஜயகாந்)

## சந்திரிகா மீது தாக்குதல் நடத்த
# தற்கொலைக்குண்டு கொண்டு சென்றதாக கருதப்படும் புலி உறுப்பினருக்குத் தண்டனை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கவின் மீது தற்கொலை தாக்குதல் மேற்கொண்டமை தொடர்பிலான வழக்கு விசாரணை நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

கடந்த 1999ஆம் ஆண்டு கொழும்பு, மாநகரசபை மைதானத்தில் ஜனாதிபதித் தேர் தலுக்கான இறுதிப் பிரசார நடவடிக்கையின் போது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதன் போது 26 பேர் கொல்லப்பட்டனர். அத்துடன் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க உட்பட 80 பேர் காயமடைந்தனர். சம்பவம் தொடர்பாக சட்டமா அதிபர் கடந்த 2001ஆம் ஆண்டு மே மாதம் 30ஆம் திகதி அன்று வழக்கை தாக்கல் செய்தார்.

சம்பவம் தொடர்பில் பெண்கள் உள்ளிட்ட 7 பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இதற்கு அமைய சாட்சியங்களை ஆராய்ந்த நீதிமன்றம் குறித்த தாக்குதலுக்காக வன்னி யில் இருந்து கொழும்புக்கு தற்கொலைக் குண்டை எடுத்து வந்ததை ஏற்றுக்கொண்ட தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர் ஒரு வருக்கு எதிர்வரும் 27ஆம் திகதி தண்டனை வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# தேசிய கலை இலக்கிய பேரவையினால் புத்தகப்பண்பாட்டு பயணம் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

எமது பண்பாட்டில் வாசித்தல் மற்றும் எழுதுதல் என்ற இரு அறிவார்ந்த விடயங்கள் தொன்று தொட்டு வளர்த்தெடுக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது.

இன்று இந்நிலை நலிவடைந்து வருவது கவலைக்குரியதும் சமூகத்தை பலவீனமா னதாக மாற்றக்கூடியதுமாகும்.

இதனைக் கருத்தில் கொண்டு தேசிய கலை இலக்கிய பேரவைப் புத்தக பண்பாட்டுப் பயணம் என்ற நிகழ்வை இன்றும், நாளை யும், நாளை மறுதினமும் நடாத்தவுள்ளது. இதற்கமைய , இன்று சமூக விஞ்ஞான படிப்பு வட்ட செயலாளர் க.வேல்தஞ்சன் தலை மையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை சுன்னாகம் மயிலணி ஜன சக்தி மழலைகள் கல்விப்பூங்கா, மதியம் 12 மணி தொடக்கம் 2 மணி வரை சுன்னாகம் ஐயனார் சனசமூகநிலை யம், மாலை 3 மணி தொடக்கம் 5மணிவரை பண்டத்தரிப்பு தாளையடி மறுமலர்ச்சி மன்றம், மாலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை பண்டத் தரிப்பு சாந்தை சித்தி விநாயகர் சனசமூக நிலையம் ஆகிய இடங்களில் இடம்பெறவுள் ளது.

நாளை சனிக்கிழமை வடபிரதேச தேசிய கலைஇலக்கியப் பேரவை துணைச் செய லாளர் ச.சத்தியசீலன் தலைமையில் நடை பெறும் இந் நிகழ்வு காலை 8.30 மணி தொடக்கம் 10.30 மணி வரை சங்கானை யிலும் காலை 11 மணிதொடக்கம் மதியம் 12 மணிவரையும் நல்லூர் சமூக அபிவிருத்தி மன்றத்திலும், மாலை 3 மணி தொடக்கம் மாலை 5 மணி கரவெட்டி யா/விக்னேஸ் வராக் கல்லூரியிலும் மாலை 6 மணி தொடக் கம் இரவு 8மணிவரை புத்தூர் கலைமதி சனசமூகநிலையத்திலும் நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை தேசிய கலை இலக்கியப் பேரவை செயலா ளரும் சட்டத்தரணியுமான சோ.தேவராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வு, காலை 7.30 மணி தொடக்கம் 9.30 மணி வரை ஊர்காவற்றுறை யா/ புனித அந்தோ னியார் கல்லூரியிலும் மாலை 3 மணி தொடக்கம் 6 மணிவரை இருபாலை கிழக்கு பாரதி கலாமன்றத்திலும் இடம்பெறவுள் ளது. (ஸ்ரீ-2)

# குழந்தை பெற்ற பெண்களுக்கு மூளை வளர்ச்சி அதிகரிப்பு

## ஆய்வில் நிரூபணம்

(வோஷிங்டன்)

குழந்தை பெற்றுக் கொள்ளும் பெண்க ளுக்கு உடலில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து அமெரிக்காவில் உள்ள யெல் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஆய்வு நடத்தினார்கள்.

அதில் பெண்கள் மூளையில் ஏற்படும் மாற்றங்கள் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டன. புதிதாக கர்ப்பமான பெண்களின் மூளையை முதலில் ஸ்கான் செய்து பார்த்தனர். அடுத்து அவர்கள் குழந்தைப் பெற்ற பின் ஏற்படும் மாற் றங்கள் குறித்து ஸ்கான் செய்து பார்த்தனர். இதில் பெண்கள் குழந்தை பெற்ற பின் அவர் களின் மூளை வளர்ச்சி அடைந்து புத்திசாலி யாக மாறி இருந்தது கண்டுபிடிக் கப்பட்டது.

பெண்கள் வயிற்றில் குழந்தை இருக்கும் போது உடலில் உள்ள ஓமோன் சுரத்தல் அதிகரிக்கிறது. இதன் மூலம் மூளை யிலும் வளர்ச்சி ஏற்படுவது தெரிந்தது. (ஸ்ரீ-2)

## மதவாச்சி விபத்தில் ஐவர் காயம்

மதவாச்சியில் இரண்டு லொறிகளும் வான் ஒன்றும் மோதிக்கொண்டதில் 3 பெண்கள் உட்பட ஐவர் படுகாயமடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 5 .45 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் காயம் அடைந்தோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் வவுனியாப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஸ்ரீ-2)





மிருசுவில் வடக்கு குருக்கள் மாவடி பிள்ளையார் கோவிலின் களஞ்சியசாலை, வாகனசாலை என்பவற்றிற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் அண்மையில் நடைபெற்றது. இதில் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. விஜயகலா மகேஸ்வரன் அடிக்கல் நாட்டுவதையும் அவருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.

# கண்டாவளை பிரிவிலுள்ள சனசமூக நிலையங்களுக்கான அறிவித்தல்

(பூநகரி)

கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இயங்கிவரும் 15 இற்கு மேற்பட்ட சனசமூக நிலையங்களுக்கு இவ்வருடத்திற் கான நன்கொடை நிதி அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

எனவே இந்நிதியைப் பெற்றுக் கொள்ள சனசமூக நிலைய நிர்வாகத்தினர் உரிய நட வடிக்கை மேற்கொள்ளுமாறு கண்டா வளை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் தி.ஜெய மாலினி வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை சனசமூக நிலைய வங்கிக் கணக்கு இல்லாதவர்கள் மற்றும் உரிய ஆவ ணங்களை இடப்பெயர்வின் போது தவறவிட் டவர்கள் ஆகியோர் புதிய நிர்வாகத்தை ஒன் றிணைத்து பதிவுகளை மேற்கொண்டு வங் கிக் கணக்கை திறந்து நன்கொடைப் பணத் திற்கு விண்ணப்பம் செய்து நன்கொடை களை உடனடியாக பெற்றுக்கொள்ளுமாறு கண்டா வளை உதவி அரசாங்க பிரிவின் சனசமுக நிலையங்களின் சமாசத் தலைவர் சி.பெரு மாள் கேட்டுள்ளார்.

(ஸ்ரீ-84)

# சர்வதேச தொண்டு நிறுவனங்களின் விமர்சனத்தை அரசாங்கம் நிராகரிப்பு

கற்று கொண்ட பாடங்கள் மற்றும் நல் லிணக்க ஆணைக்குழுவை குற்றம் சுமத்தி சர்வதேச தொண்டு நிறுவனங்கள் வெளியிட் டிருந்த ஒன்றிணைந்த அறிக்கைகளுக்கு வெளிவிவகார அமைச்சு பதில் வழங்கியுள் ளது.

சர்வதேச மன்னிப்பு சபை சர்வதேச நெருக் கடிகள் குழு மற்றும் மனித உரிமைகள் கண் காணிப்பகம் என்பவையே இந்த ஒன்றி ணைந்த அறிக்கையை வெளியிட்டிருந் தன.

குறித்த தொண்டு நிறுவனங்கள் உண் மைக்கு புறம்பான தகவல்களை கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பாக வெளியிட்டுள்ள தாக இலங்கை வெளியுறவு அமைச்சு குறிப் பிட்டுள்ளது.

அரசாங்கத்திற்கு எதிராகவும் ஆணைக் குழுவிற்கு பொருத்தமற்ற விடயங்களையுமே அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் குறிப் பிட்டுள்ளதாக வெளிவிகார அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகள் முலம் இலங் கைக்கு எதிரான சூழ்ச்சி செயற்பாடுகள் தெளி வாக விளங்குவதாக இலங்கை வெளியுறவு அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# லெமனற் வெற்றிக்கிண்ண இறுதிப் போட்டியில் பற்றிக் கல்லூரி அணி போராடித் தோல்வி



(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைப்பாடசாலை மட்ட 17 வயதுப் பிரிவினருக்கு லெமனற் வெற்றிக் கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் யாழ்.சென் பற்றிக் கல்லூரி அணி போராடித் தோல்வியடைந்தது.

அகில இலங்கை பாடசாலை மட்ட 17 வயதுப்பிரிவினருக்கான லெமனற் வெற்றிக் கிண்ண மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடர் நடைபெற்றது.

இத் தொடரின் இறுதிப் போட்டி நேற்று கொழும்பு பி.ஆர்.பி. மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் யாழ்.சென்பற்றிக் கல்லூரி அணியும் கொழும்பு ஹரிச்சந்திரா கல்லூரி அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கொழும்பு ஹரிச்சந்திராக் கல்லூரி 43.1 ஓவர்களில் 142 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் கி.ரோஷான் 48 ஓட்டங்களை எடுத்



தார்.

பந்துவீச்சில் யாழ்.சென்பற்றிக் கல்லூரி அணி சார்பாக ஏ.எம்.நோபேர்ட் 19 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், ஏ.கவாஸ்கர் 12 ஓட்டங்களைக் கொடுத்தது 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 143 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய யாழ்.சென்பற்றிக்ஸ் அணி 42.4 ஓவர்களில் 131 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்



வியடைந்தது.

இதில் ஜே.அலஸ்ரின் 42 ஓட்டங்களையும் ஜே.கிளிவ்ரன் 20 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் கொழும்பு ஹரிச்சந்திரா கல்லூரி அணி சார்பாக ஏ.இசுறு 17 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் எஸ்.காதியவி 35 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் சாய்த்தனர்.

இவ் வெற்றியின் மூலம் கொழும்பு ஹரிச்சந்திராக் கல்லூரி 2010 ஆம் ஆண்டுக்கான லெமனற் வெற்றிக்கிண்ணத்தை கைப்பற்றியது.

இச்சுற்றுத் தொடரில் யாழ்.சென்பற்றிக் கல்லூரி அணியின் எ.கவாஸ்கர் 12 போட்டிகளில் 590 ஓட்டங்களைக் குவித்தார். இதில் ஒரு சதம் 6 அரைச்சதங்களும் அடங்கும்.

அதிகபட்சமாக 147 ஓட்டங்களை நுவரேலியாக்கல்லூரி அணிக்கு எதிராகக் குவித்தார்.

பந்துவீச்சில் யாழ்.சென்பற்றிக் கல்லூரி அணியின் ஆர்.நிதர்ஷன் 12 போட்டிகளில் 25 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இதில் 19 ஓட்டங்களைக்கொடுத்து 6 விக்கெட்டுக்களை ஒரு போட்டியிலும் மற்றொரு போட்டியில் 22 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கொச்சி அணி நீக்கப்படுமா? பி.சி.சி.ஐ முடிவு விரைவில்

(கொல்கத்தா)

ஐ.பி.எல், தொடரில் இம்முறை கொச்சி அணி பங்கேற்பதில் சிக்கல் நீடிக்கிறது. தனது பங்குகள் தொடர்பாக கொச்சி இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு (பி.சி.சி.ஐ) கொச்சி அணி நிர்வாகம் சார்பில் முறைப்படி பதில் அனுப்பப்பட்டுள்ளது.

பி.சி.சி.ஐ சார்பில் கடந்த 2008ல் இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) அமைப்பு ஏற்பாடுத்தப்பட்டு, இருபது-20 போட்டிகள் வெற்றிகரமாக நடந்தன. முதல் மூன்று தொடரில் மும்பை இந்தியன்ஸ், சென்னை சுப்பர் கிங்ஸ் உள்ளிட்ட 8 அணிகள் பங்கேற்றன.

இந்த ஆண்டு நடக்க உள்ள நான்காவது தொடரில் கொச்சி, புனே அணிகள் சேர்த்து, 10 அணிகள் பங்கேற்கும் என அறிவிக்கப்பட்டது.

இதனிடையே பல்வேறு முறைகேடுகள் தொடர்பாக ராஜஸ்தான் றோயல்ஸ், கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணிகள் நீக்கப்பட்டன. தவிர, பல்வேறு உரிமையாளர்களைக் கொண்ட கொச்சி அணியை யார் நிர்வகிப்பது என்பதில் பிரச்சினை ஏற்பட்டது. இந்த அணியின் 75 சதவீத பங்குகளை ஆங்கர் எர்த், பரினி டெவலப்பர்ஸ், ரோசி புளூ மற்றும் பிலிம் வேவ் நிறுவனங்கள் வைத்துள்ளன.

மீதமுள்ள 25 சதவீத பங்குகள் கெய்க்வாட் குடும்பம், சைலேந்திரா உள்ளிட்ட பலர் வைத்துள்ளனர். இவர்களுக்குள் ஏற்பட்ட சிக்கலை சரிசெய்ய பி.சி.சி.ஐ சார்பில் 10 நாட்கள் கெடு விதிக்கப்பட்டது. இந்த கெடு நேற்று முன்தினம் முடிந்த நிலையில், கொச்சி அணி சார்பில் பி.சி.சி.ஐ.க்கு பதில் அனுப்பப்பட்டது.

இதுகுறித்து பி.சி.சி.ஐ தலைமை அதிகாரி ரத்னாகர் ஷெட்டி கூறுகையில்,

கடந்த சில நாட்களாக நடந்த கூட்டத்தின் முடிவில், கொச்சி அணியினர் பி.சி.சி.ஐ. தலைவர் சஷான்க் மனோகருக்கு கடிதம் அனுப்பியுள்ளனர். இதன் விபரம் தெரியாது. சட்ட நிபுணர்கள் ஆய்வு செய்த பின்னரே முடிவு எடுக்க முடியும் என்றார்

**புதிய ஏலம்?**

கொச்சிஅணியின் பதில் திருப்தி அளிக்கவில்லை எனில் பஞ்ஜாப், ராஜஸ்தான் அணிகள் வரிசையில் இந்த அணியும் அடுத்த ஐ.பி.எல், தொடரில் பங்கேற்க முடியாது. அணியின் ஏலம் இரத்து செய்யப்படும் எனத் தெரிகிறது.

இதுகுறித்து பி.சி.சி.ஐ நிர்வாகி ஒருவர் கூறுகையில்,

கொச்சி அணி நீக்கப்படும் பட்சத்தில், வேறு அணியை சேர்க்க, புதிய ஏலம் நடத்தப்படும். நான்காவது தொடரில் எப்படியும் எட்டு அணிகள் பங்கேற்பது உறுதி என்றார்.

# நிருபமா ராவுக்கு சேவை நீடிப்பு

(டில்லி)

இந்திய வெளிவிவகார அமைச்சுச் செயலாளர் நிருபமாராவுக்கு ஏழு மாதகால சேவை நீடிப்பு அந்நாட்டு மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ளது.


இவர் எதிர்வரும் டிசம்பர் மாத ஆரம்பதில் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற வேண்டியவர் ஆவார்.

ஆயினும் இவருக்கு எதிர்வரும் ஜூலை மாத இறுதி வரை சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இவர் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் ஆகவும் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

# வீ.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக்கிண்ணம்

# யாழ்ப்பாண பல்கலைக்கழக அணியை எதிர்த்து இறுதிப் போட்டியில் மோதுகிறது சென்றல் அணி



யாழ்.மத்தியகல்லூரி பழைய மாணவர் களால் 2001ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட யாழ். சென்றல் விளையாட்டக் கழகம் 7 ஆவது ஆண்டாக நடத்திவரும் 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டச் சுற் றுப்போட்டியின் இறுதிப் போட்டிக்கு பி.திவாகரன் தலைமையிலான யாழ்.பல்கலைக்கழக அணியும் ஏ.யசிந்தன் தலைமையிலான யாழ். சென்றல் விளையாட்டுக்கழக அணியும் மோதவுள்ளது.

இப்போட்டி எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக அணி சிறந்த கழக அணித்தெரிவில் 11 போட்டிகளில் பங்குபற்றி 9 போட்டிகளில் வெற்றிபெற்று 38 புள்ளிகளைப் பெற்று 1 ஆம் இடத்திலும், யாழ்.சென்றல் விளையாட்டுக்கழக அணி 11 போட்டிகளில் பங்குபற்றி 8 போட்டிகளில் வெற்றி பெற்று 28 புள்ளிகளைப் பெற்று 3 ஆம் இடத்திலும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விரு அணிகளும் பலம் பொருந்திய அணிகளாகக் கருதப்படுகின்றது.

தற்போதைய நிலையில் 50 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டப் போட்டியை தொடர்ந்து 7 வருடங்களாக நடத்திவரும் ஓர் அமைப்பு யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் என்பது குறிப்பிடத்தக்கது.




இந்த இறுதிப் போட்டி இத் தொடரின் 81 ஆவது போட்டி என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்.பல்கலைக்கழக அணி 1 ஆம் ஆண்டிலும் (2002), 7 ஆவது ஆண்டிலும் (2 010), இறுதிப்போட்டிக்குத் தெரிவு செய் யப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் முதல் முறை யாக 7 ஆவது ஆண்டில் (2010), இறுதிப்போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.




இப்போட்டியில் வெற்றிபெறும் அணிக்கு வீ. டி.ஜெரட்ணசிங்கம் ஞா பகார்த்த வெற்றிக் கிண்ணமும், பணப் பரிசிலும் வழங்கப்படும்.



1 ஆவது அரையிறுதிப் போட்டியில் சிறந்த வீரருக்கான ஈ.எஸ்.தம்பையா ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணமும் பணப் பரிசிலும் வழங்கப்படும்.



இப்போட்டியில் 2 ஆம் இடத்தைப் பெறும் அணிக்கு ஜெயா கனகநாயகம் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணமும், பணப் பரிசிலும் வழங்கப்படும்.




2 ஆவது அரையிறுதிப் போட்டியில் சிறந்த வீரருக்கான ஆர்.ராஜசிங்கம் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணமும் பணப் பரிசிலும் வழங்கப்படும்.



இச்சுற்றுப்போட்டியில் தொடர் நாயகனுக்கு எஸ்.டி.சிவமித்திரன் ஞா பகார்த்த வெற்றிக்கிண்ணமும் பணப்பரிசிலும் வழங்கப்படும்.

இப்போட்டியில் சிறந்த வீரருக்கு எஸ். மணி வதனன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணமும் பணப்பரிசிலும் வழங்கப்படும்.



2010 ஆண்டிலிருந்து அரையிறுதிப் போட்டிகளில் சிறந்த வீரருக்கான பரிசில் களை பிரான்ஸ் நாட்டு யாழ்.மத்தியகல்லூரி பழைய மாணவர்கள் அன்பளிப்புச் செய்தமை குறிப்பிடத்தக்கது.

# முழுமையான அதிகாரம் கிடைத்தால்...

மற்றொரு யுத்தத்தை எதிர்பார்த்து அரசாங்கம் தன்னை பலப்படுத்துவது முட்டாள்தனமானது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அக்கட்சியின் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தமிழ் மிரர் இணையத் தளத்திற்கு அளித்த விசேட செவ்வியில் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,புதிய வரவு-செலவுத் திட்டத்தில் கடந்த வருடத்தைவிட பாதுகாப்புக்கு கூடுதலான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.எந்தவொரு நாட்டிலும் யுத்தம் முடிந்தபின் பாதுகாப்புச் செலவு குறையுமே தவிர அதிகரிக்காது.ஆனால் இங்கு அது அதிகரிக்கிறது.

விடுதலைப் புலிகள் மீண்டும் ஒன்று சேர்ந்து பலப்படுத்த விடக்கூடாது என்று அரசாங்கம் கூறுகிறது.புலம்பெயர்ந்த மக்கள் விடுதலைப்புலிகள் பலமாக இருக்கிறார்கள் என்று கூறுகிறார்கள்.

அதேசமயம் யுத்தம் முடிந்து 16 மாதங்கள் கடந்துவிட்டது.ஒரு சிறிய துப்பாக்கி சத்தம் கூட கேட்கவில்லை என்றும் அரசாங்கம் கூறுகிறது.13 ஆயிரம் புலி உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அரசாங்கம் கூறுகிறது.இந்நிலையில் இவ்வளவு தொகை பணம் ஒதுக்கி மீண்டும் ஒரு தடவை புலிகள் இயக்கம் வந்துவிடும் என்ற கோணத்தில் சிந்திப்பது பிழையான முன்மாதிரி.பிழையான தொடக்கம்.

தமிழ் மக்களுக்கு முழுமையான உரிமைகள் கொடுக்கப்பட்டு,அதிகாரங்கள் வழங்கப்பட்டு வடக்கு -கிழக்குப் பகுதிகளில் சரியான அரசியல் நிர்வாகமுறை உருவாக்கப்படுமாக இருந்தால் விடுதலைப் புலிகளை மக்களோ யாரோ அங்கீகரிக்கப்போவதுமில் லை. வரவேற்கப் போவதுமில்லை.யுத்தத்தை ஏற்றுக்கொள்ளப் போவதுமில்லை.

ஆகவே அரசாங்கம் செய்யவேண்டிய வேலைகளை செய்யாமல் இன்னொரு யுத்தத்தை எதிர்பார்த்து தன்னைப் பலப்படுத்துவது என்பது உத்தியோகபூர்வமற்ற,முட்டாள்தனமான ஒட்டுமொத்தமாக நாட்டையே அதலபாதாளத்தில் தள்ளுகின்ற,பொருளாதார வளர்ச்சியைக் காண்பதற்கான எவ்வித தூர நோக்கற்ற சிந்தனையாகவே இருக்கும்.

**இராணுவத்தை பலப்படுத்த தேவையில்லை**

யுத்தத்திற்கான சூழ்நிலை நாட்டில் இல்லை.இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வேறுபல வழிகள் இருக்கின்றன.அவற்றை விட்டுவிட்டு இராணுவத்தைப் பலப்படுத்துவது இப்படியான சிறிய நாட்டிற்கு இது தேவையல்ல.இந்தியா,அமெரிக்கா ,ஐரோப்பா உட்பட பல நாடுகள், அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காணுங்கள் ,அந்தத் தீர்வு எட்டப்பட் டால் பல பிரச்சினைகள் தீர்ந்து விடும் என்று கூறுகின்றன.

மக்களின் மீள்குடியேற்றம் புனர்வாழ்வு விடயங்களைப் பொறுத்தவரை,சரியான நிகழ்சிநிரல்,மக்கள் இந்த நாட்டின் குடிமக்களில் ஒரு பகுதியினர். அவர்களுக்கு உதவிகள் செய்து அவர்களையும் நாங்கள் பலப்படுத்த வேண்டும் என்ற சிந்தனை அரசாங்கத்திடம் இருப்பதாக நான் கருதவில்லை.

இடம்பெயர்ந்த மக்களில் ஒரு பகுதியினர் சொந்த இடங்களில் குடியேற விரும்பவில் லை என்று அரசாங்கம் கூறுவதும் நம்பக்கூடியதல்ல.

சமஷ்டி முறையிலான அரசியலமைப் பின் மூலம் இனப்பிரச்சினைக்கு நீண்ட நிலைத்து நிற்கக்கூடிய தீர்வை காண முடியும்.

சமஷ்டி அரசியலமைப்பை ஏற்றுக் கொண்ட நாடுகள் எதுவும் தமது அபிவிருத்தியிலோ ஏனைய முயற்சிகளிலோ தோல்வியடைந்ததாக வரலாறு இல்லை.எனவே இலங்கையில் சமஷ்டி அரசியலமைப்பை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று கூறுவது, அரசியல் சிந்தனையற்ற,வரட்டுத்தனமான , பிடிவாதமான எண்ணம் கொண்டவர்களின் நிலைப்பாடே தவிர, சமஷ்டி அரசியலமைப்பு என்பது சிறிலங்கா போன்ற நாடுகளுக்கு உன்னதமான நிலை.ஆகவே சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வை தமிழ் தேசியக் கூட்டமைப்பு வரவேற்கும்.

1987ஆம் ஆண்டு இலங்கை -இந்திய ஒப்பந்தத்தின் பின் அது போதாது அதற்கு மேலாக கொடுக்கப்படவேண்டும் என்ற அடிப்படையில் பிரேமதாச அவர்கள் செயற்பட்டிருக்கிறார்.பிரேமதாச முதல் திருமதி சந்திரிகா குமாரதுங்க,மகிந்த ராஜபக்ஷ ஆகியோரும் செயற்பட்டிருக்கின்றனர்.இது தொடர்பான பல அறிக்கைகள் வெளிவந்திருக்கின்றன. அந்த அறிக்கைகள் எல்லாம் 13ஆவது திருத்தச் சட்டத்திற்கு மேலதிகமாக தமிழ் மக்களுக்கு அதிகாரம் வழங்கினால்தான் இனப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்க முடியும் என்ற அடிப்படையிலேயே வந்தன.

இவையெல்லாம் இருக்கும்போது இன்னும் பல கட்சிகள் கூடிப் பேசவேண்டும் என்பது காலத்தை விரயமாக்குகின்ற விடயமாகவும்,நம்பிக்கை தகர்ந்து போகின்ற விடயமாகவும் உண்மையாகவே இவர்கள் செய்வார்களா என்ற கேள்விக்குறியை உருவாக்குகின்றது எனவும் அவர் தெரிவித்தார்(ச-5)

# நல்லிணக்க ஆணைக்...

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே ஊடகத்துறை அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு உரையாற்றிய

அவர் மேலும் கூறிய தாவது,

நாட்டில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்வதற்காக ஜனாதிபதியினால்நல்லிணக்க ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ள நிலையில் அதனை சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் உட்பட மேலும் மூன்று சர்வதேச அமைப்புக்கள் ஏற்கப் போவதில்லை என்று அறிவித்துள்ளன.

இந்த கருத்துக்கு பின்னால் ஒருவர் உள்ளார் என்பது எங்களுக்கு தெரியும். இல்லாவிடின் இந்த 3 அமைப்புகளும் ஒரே சமயத்தில் இவ்வாறானதொரு கருத்தை முன்வைக்க வேண்டிய அவசியம் இல்லை. அந்த தீய சக்தி குறித்து நாம் வெகுவிரைவில் கண்டறிவோம்.

இதேவேளை சனல்-4 தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்ட யுத்த குற்றச்செயல்கள் எனும் காட்சிகளும் பொய்யானவை என நாம் தொழில்நுட்ப ரீதியில் நிரூபித்துள்ளோம்.

இருப்பினும் அவர்கள் அவ்வாறான காட்சிகளை தொடர்ந்தும் காண்பித்து வருகின்றனர். அவற்றையும் நாம் முறியடிப்போம் முடியுமானால் அவை உண்மையானவை என அந்த நிறுவனத்தினால் நிரூபிக்க முடியுமா எனவும் சவால் விடுக்கின்றோம். (ச-5)

# அரசியல்வாதிகளுக்கு...

65 ஆயிரம் ரூபாயாகவும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களுக்கான சம்பளம் 63 ஆயிரம் ஆகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் அரசியல் அமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் சம்பளமானது குறித்த நீதியரசர்களின் சம்பளத்தை விட அதிகமான தாக இருக்க வேண்டும் என்பது ஒரு விதியா கும்.

அந்த வகையில் எதிர்வரும் நாட்களில் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சம்பள அதிகரிப்புத் தொடர்பான் நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி செயலகம் நிதியமைச்சின் ஊடாக சுற்றறிக்கை ஒன்றை அனுப்புமாறு பணிப்புரை விடுத்துள்ளதாக குறித்த தகவல்களிலிருந்து மேலும் தெரியவருகிறது.

இதற்கிடையில் இலங்கையில் அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏற்றத்தால் பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்கள் மற்றும் அரச சேவையில் உள்ளோருக்கு போதுமான நிவாரணங்கள் அடுத்த வருட வரவுசெலவுத்திட்ட அறிக்கையில் உள்ளடக்கப்படவில்லை என்று நம்பகரமாக தெரியவருகிறது.

கடந்த தேர்தல்களின் போது அரச சேவையாளர்களின் சம்பளம் 2ஆயிரத்து 500 ரூபாயினால் அதிகரிக்கப்படும் என்று ஜனாதிபதி வாக்களித்திருந்த போதும் அதற்கும் கால வரம்பு விதிக்கவுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

# கண்ணி வெடிகளுடன்...

மீள்குடியேற்றப்பகுதிகளிலும் அதிக அளவான கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

விவசாய நிலங்கள் மற்றும் காட்டுப்பகுதிகளில் புதைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகளே இன்னமும் அகற்றப்படாமல் உள்ளதாகவும் அவற்றை அகற்ற வேண்டியுள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

இராணுவத்தினரின் கண்ணி வெடி அகற்றும் குழுவினர் உள்ளூர் மற்றும் சர்வதேச கண்ணி வெடி அகற்றும் குழுவினருடன் இணைந்து வடபகுதியில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# வட மாகாண...

விரைவில். நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சு அலுவலகமும் சுகாதார அமைச்சு அலுவலகமும் கிளிநொச்சிக்கும் கல்வி அமைச்சு அலுவலகம் யாழ்ப்பாணத்திலும் அமைக்கப் படவுள்ள நிலையில் உள்ளூராட்சி அமைச்சு அலுவலகம் கைதடியில் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# வெளிநாட்டு...

தொலைத் தொடர்புகள் ஆணை யாளரிடம் கையடக்கத் தொலை பேசிகளைப் பயன்படுத்தப்படுகின்ற சிம் அட்டைகளின் உரிமையாளர்கள் குறித்த முழுமையான தகவல்கள் கோரப்பட்டுள்ளன.

சிம் அட்டைகளை பயன்படுத்தி வெளிநாடுகளுக்கு சட்டவிரோதமான அழைப்புகளை மேற்கொண்டு வருவதை கருத்தில் கொண்டு இந்த நட்வடிக்கை மேற்கொள்ளப்படுவதாக கூறப்பட்டது. (ச-5)

# போர்க்குற்ற ஆதாரங்...

நாயகம் பான் கீ மூன் நியமித் துள்ள நிபுணர்கள் குழு அறிவித்துள்ள போர் குற்ற மற்றும் மனித உரிமை மீறல் முறைப் பாடுகள் வரும் டிசம்பர் மாதம் 15ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என தெரிவித்துள்ளது.

அண்மையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ மூன் ஆகியோருக்கிடையில் நியூயோர்க்கில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது எட்டப்பட்ட இணக்கத்தின் அடிப்படையில் குறித்தவிடயம் தொடர்பான விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு நிபுணர்குழு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அந்த வகையில் குறித்த விடயம் தொடர்பில் ஆதாரங்களைத் தெரிவித்து வைத்திருக்கும் எந்தவொரு நபரும் தமக்குத் தெரிந்த உண்மைகளை முறைப்பாடுகளாக Panelo fexpertsregistry@un.org என்ற இ-மெயில் முகவரி மூலமாக தெரிவிக்க முடியும் என்று ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் நியமித்துள்ள நிபுணர்குழு தெரிவித்துள்ளது.

அவ்வாறு இ-மெயில் மூலமாக தகவல்களை தெரிவிக்கும் நபர்கள் தங்களை தொடர்பு கொள்ளக் கூடிய அனைத்து விபரங்களையும்இந்த இ-மெயில் மூலமாக நிபுணர் குழுவுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள நிபுணர் குழுவானது அவ்வாறு அனுப்பப்படும் தகவல்கள் இரகசியமாக பேணப் படும் என்றும் உறுதியளித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் நியமித்துள்ள நிபுணர் குழுவில் இந்தோனேசியாவின் முன்னாள் சட்டமா அதிபர் மர்சூக் தருஸ்மான் தலைமைப் பொறுப்பை வகிப்பதுடன் அமெரிக்க சட்டத்தரணியான ஸ்டீவன் ரட்னர், தென்னாபிரிக்காவின் முன்னைனாள் நல்லிணக்க ஆணைக்குழுவின் உறுப்பினர் யஸ்மின் சூகா ஆகியோரும் அங்கம் வகிக்கின்றனர். (ச-5)

# நிரந்தர அரசியல் தீர்வு...

கற்றுக்கொண்ட அனுபவங்களும், மீளக் கட்டியமைத்தலுக்கான ஆணைக்குழு பற்றி இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்ட அதே வேளை, இந்த ஆணைக்குழு ஐக்கிய நாடுகள் சபையால் நியமிக்கப்பட்டுள்ள நிபுணர்கள் குழுவுடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என ஹேக் கேட்டுக்கொண்டார்.

போரின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், அனைத்துலக சட்ட மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை அரசாங்கம் நியாயபூர்வமாகவும், சுயாதீனமாகவும் விசாரணை செய்ய வேண்டும்.

அத்துடன் ஜனநாயம், மனித உரிமைகள் மற்றும் ஊடக சுதந்திரம் தொடர்பாக இலங்கை அரசாங்கம் தெளிவான கட்பபாட் டைக் கொண்டிருப்பதாக தாம் நம்புவதாகவும் ஹேக் இந்தச் சந்திப்பில் கூறியிருக்கிறார்.

இவை மட்டுமன்றி இரு நாடுகளுக்கு இடையிலான உறவுகள் மற்றும் ஏனைய பல விடயங்கள் தொடர்பாகவும் பிரித்தானிய -இலங்கை வெளிவிவகார அமைச்சர் கலந்துரையாடி இருப்பதாக பிரித்தரனிய வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)


**பைவ் ஸ்டார் (Five Star)**

பைவ் ஸ்டார் (five Star) புறோயிலர் சிக்கன் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள உடன் நாடவேண்டிய ஏக விநியோகஸ்தர்;

பமிலி சுப்பர் ஸ்பொர்ட்

மானிப்பாய்.TP:0214591042

(சு-1437)



**புதுக்கடைத் திறப்பு விழா**

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான விகிர்தி வருஷம் ஐப்பசிமாதம் 5ஆம் நாள் (22.10.2010) வெள்ளிக்கிழமை இன்று காலை 6.27 மணி முதல் 9.52 மணிவரையுள்ள ரேவதி நட்சத்திரமும் அமிர்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

RK CERAMIC

Wall tiles, Floor tiles, Marbles, Bath accessories, etc....

என்னும் புதுக்கடையினை இறையருள் துணை கொண்டு திறக்கவுள்ளோம்.

அன்பர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்





இங்ஙனம் நல்வரவை நாடும்

திரு.ரவீந்திரநாதன் ஜெகன் (Proprietor)

RK குழுமியம்

Main Street, Nelliady.

T.P. 0776660699, 021 320 7525

(2715)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.10.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.